# மன்னா

# மடுமாதா திருத்தலத்தில்

# எழுச்சிமிகு வரவேற்பு மாதா கெபி!






மடு மாதா திருத்தலத்தில் 13.08.2018 அன்று மாலை வரவேற்பு மாதா சந்தியில் திருத்தியமைக்கப்பட்ட வரவேற்பு மாதாவுக்கான புதியகெபி மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கிருந்து செபமாலைப் பவனி ஆரம்பமாகியது. ஆலயத்தில் ஏனைய வழிபாடுகள் வழமைபோன்று நிகழ்ந்தன. இந்நிகழ்வு கடந்த ஆவணி மாத மடுத்திருவிழாவிற்கான ஆயத்த நாட்களில் நடைபெற்றது. மடுத்திருப்பதிக்கு வருவோரும் அன்னையின் பதியை விட்டு செல்வோரும் இவ்விடத்தில் நின்று தம்மை அன்னையிடம் ஒப்புக்கொடுப்பது வழக்கம்.

## மடு வைத்தியசாலைக்கான புதிய கட்டிடத் தொகுதி






மடுமாதா திருத்தலத்தில் (09.08.2018) அன்று வியாழக்கிழமை காலை மடுத் தேவாலயத்திற்குச் சொந்தமான வைத்தியசாலைக்கான புதிய கட்டிடத் தொகுதி ஒன்று மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. இலங்கை மத்திய அரசு வழங்கிய சிறிய நிதியுதவியுடனும், மன்னார் மறைமாவட்டத்தின் நிதிப் பங்களிப்போடும் இப் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் உயர்திரு மோகன்ராஜ், குருமுதல்வர் அருட்பணி. அ.விக்ரர் சோசை, மடுத் திருப்பதியின் முன்னை நாள் பரிபாலகர் அருட்பணி. ச.எமிலியானுஸ்பிள்ளை, மருதமடுத் திருப்பதியின்

புதிய பரிபாலகர் அருட்பணி. ச.ஜொய்சி பெப்பி சோசை அடிகளார், மேலும் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

➡ 15

## வேதசாட்சிகளின் இரத்தம் விசுவாசத்தின் வித்து



இலங்கையின் வடமேற்கே அமைந்துள்ளது மன்னார் தீவு. இங்கு புனித பிரான்சிஸ் சவேரியாரின் மறைதூதுப் பணியிலே கத்தோலிக்க திருமறையைத் தழுவிய எம் முன்னோர்கள் பலர் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் கத்தோலிக்க திருமறையை தழுவியதை அறிந்த யாழ்ப்பாண இராச்சிய அரசன் சங்கிலியன் 1544ஆம் ஆண்டிலே தோட்டவெளி, பட்டித்தோட்டம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த கத்தோலிக்கர்களைக் கொலை செய்ய தனது படையை மன்னாருக்கு அனுப்பினான்.

இதனால் 600 இற்கும் மேற்பட்ட எம்முன்னோரான கிறீஸ்தவர்கள் இயேசுவுக்காக, தம் விசுவாசத்திற்காக வேதசாட்சிகளாக மரித்தார்கள் என்பது வரலாறு. இவ் வேதசாட்சிகளின் விசுவாச விதையினாலேயே இற்றைவரை மன்னார் மறைமாவட்ட விசுவாச விருட்சம் வளர்ந்தோங்கி நிற்கின்றது. மட்டுமல்லாமல் இலங்கை முழுவதிலும் சத்திய வேதம் வேரூன்றி வளரவும் காலாயிற்று. இதனால்தான் விண்ணக, மண்ணக அரசியான அன்னை மரியாளின் நாமத்திற்கு மன்னார் தோட்டவெளி ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மன்னார் வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயம் என தோட்டவெளி ஆலயம் விளங்குகின்றது. எம் மன்னார் வேதசாட்சிகள் புனித நிலை அடைய மன்றாடுவோம்.

## சிறுத்தோப்பு பங்கில்

### ஆயரின் முதல் வருகையும் பங்குத்தந்தையின் நியமன நிகழ்வும்





சிறுத்தோப்பு பங்கிற்கு கடந்த 12.08.2018 ஞாயிறு 8.00 மணிக்கு மறைமாவட்ட ஆயர் அதிமேதகு அருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள், திருவுளப் பணியாளர் சபையைச் சேர்ந்த அருட்பணி. அன்ரனி யோசப் அவர்களைப் பங்குத்தந்தையாக நியமிக்கும் நியமன நிகழ்வுத் திருப்பலிக்கு வருகை தந்திருந்தார்கள்.

சிறுத்தோப்பு புனித அந்தோனியார் ஆலய மக்களும், காட்டாஸ்பத்திரி புனித அன்னை வேளாங்கண்ணி ஆலய மக்களும் ஒரே பங்குச் சமூகமாக இணைந்து கலாசார நிகழ்வுகளுடன் ஆயர் அவர்களை வரவேற்றார்கள்.

இந் நிகழ்வுக்கு திருவுளப்பணியாளர் சபைக்கான இலங்கை மாகாண முதல்வர் அருட்பணி. யூஸ்ரஸ் அலன் அவர்களும், அருட்சகோதரர் சூசைப்பிள்ளை, அருட்சகோதரிகள் இன்னும் பல அழைக்கப்பட்ட விருந்தினர்களும் வருகைதந்திருந்தனர். அத்துடன் பேசாலை பங்குத்தந்தை அருட்பணி. S.K. தேவராஜா, யோசவ்வாஸ் நகர் பங்குத்தந்தை அருட்பணி. பிரான்சிஸ் மெரிஜீகோ அவர்களும் வருகைதந்து இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

கடந்த வருடம் 2017ஆம் ஆண்டு இந்தப் பங்கு பேசாலைப் பங்கிலிருந்து புதிய பங்காக உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 'கலையருவி' சமூக தொடர்பு ஆணைக்குழு (ஊடகம், கலை, கலாசாரம், பண்பாடு) மன்னார் மறைமாவட்டத்திற்கான புதிய இணையத்தளம்

### www.dioceseofmannar.com



மன்னார் மறைமாவட்டம் தொடர்பான தகவல்களை வழங்கும் நோக்கோடு www.dioceseofmannar.com என்ற பெயரில் புதிய இணையத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையத்தளம் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து செயற்பட ஆரம்பிக்கும்.

மன்னார் மறைமாவட்ட நிர்வாக அலகு பற்றிய விபரங்கள், மன்னார் மறைமாவட்ட பங்குகள், திருத்தலங்கள், குருக்கள் பற்றிய விபரங்கள், மறைமாவட்டச் செய்திகள், ஆலய விழாக்கள், 'மன்னா பத்திரிகை', வத்திக்கான் செய்திகள் போன்றவற்றை இந்த இணையத் தளத்திற்குச் சென்று பார்வையிடலாம். இதைவிட 'இன்றைய புனிதர்', கத்தோலிக்க வானொலிகள், கத்தோலிக்க தொலைக்காட்சிகள், கத்தோலிக்க பத்திரிகைகள் போன்றவற்றையும், திருத்தந்தையின் சிந்தனைகள், கத்தோலிக்க பாடல்கள் போன்றவற்றையும் இந்த இணையத்தளத்தில் பார்த்து, கேட்டு பயன்பெறலாம்.

## மன்னார் பொது வைத்தியசாலை

### ஆரோக்கிய அன்னை ஆலயத்திருவிழா



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அமைந்துள்ள ஆரோக்கிய அன்னை ஆலய திருவிழா திருப்பலியானது அருட்தந்தை சீமான் மரியதாசன் தலைமையில் பல குருக்கள் சேர்ந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. அன்னையின் பக்தர்கள் பலரும் இப்பலியில் கலந்துகொண்டு அன்னையின் அருளாசீரைப் பெற்றுக்கொண்டனர். திருப்பலியின் பின்னர் அன்னையின் திருச்சுரூப பவனியும் திருச்சுரூப ஆசீரும் இடம்பெற்றது.

"அம்மா உன் ஞானத்தை நினைந்து வந்தேன்."!

"அம்மா உன் வல்லமையை நினைந்து வந்தேன்."!

"பாராமுகமாயிராமல் மகனிடம் பரிந்து பேசிடுவாயே."!

# மன்னா

பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## இளையோர் எம் மறைமாவட்ட எதிர்காலம்

***"அஞ்ச வேண்டாம். கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்."***

*இலங்கைத் திரு அவை இந்த மாதம் தேசிய இளைஞர் ஞாயிறு தினத்தை கொண்டாடுகின்றது. இவ்வாண்டின் தேசிய இளைஞர் தினத்தின் மையப்பொருள் 'அஞ்ச வேண்டாம். கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்'. இளையோர் அஞ்ச வேண்டியவர்கள் அல்லர். மாறாக, அவர்கள் சமுதாயத்தை மாற்றும் திறன் கொண்டவர்கள். அவர்கள் நல்ல முறையில் வழிப்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்டால் மாற்றம் நிச்சயம். ஆகவே இம்மாத ஆசிரியர் பகிர்வில் நாளைய சமூக மாற்றத்தின் குறியீடுகளாகிய இவர்களை மையப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.*

### இளையோர் - விவிலியப்பார்வை

*இன்றைய சூழலில் பெரிதும் பேசப்படுபவர்கள், எண்ணப்படுபவர்கள், கருத்தில் எடுக்கப்படவேண்டியவர்கள் இளையோர்களே! ஒருவருடைய வாழ்க்கையில் மிகவும் கடினமான, சவாலான காலம் எது? குழந்தைப் பருவமா? இளமைப்பருவமா? முதுமைப் பருவமா? என்ற கேள்விக்கு முதுமை என்ற பதிலை எதிர்பார்க்கலாம். ஆனால் திரு விவிலியம் இளமைப் பருவம் தான் அபாயகரமானது, சவாலானது என்று எடுத்துரைக்கின்றது. "மனிதனின் இதய சிந்தனை இளமையிலிருந்தே தீமையை உருவாக்குகின்றது" என தொடக்கநூல் 8:21. புனித பவுலடியாரும் "நீ இளவயதில் இச்சைகளை விட்டு ஓடிவிடு" என 2திமொ 2:22 இல் குறிப்பிடுகின்றார். ஆனால் கடவுள் இந்த இளமைப் பருவத்திற்குள் இருக்கும் வீரியத்தையும், மிகுந்த சக்தியையும், எதிர்காலத்தை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையையும் கண்ணோக்குகின்றார். ஆகையால் தான் சபை உரையாளர்12:1 இல் "உன்னைப் படைத்தவரை உன் இளமைப்பருவத்தில் மறவாதே, வாழ்க்கை எனக்கு இன்பம் தரவில்லையே என்று நீ சொல்லக்கூடிய துயர நாட்களும், ஆண்டுகளும் வருமுன் அவரை உள்ளத்தில் நினை" என கூறுகின்றார்.*

### இளமைப்பருவம்

*இளமைப்பருவம் - வாழ்வின் வசந்தகாலம். எனவேதான் மறைந்த திருத்தந்தை புனித 2ஆம் யோண் போல், இளையோரைத் 'திருச்சபையின் வசந்தகாலம்' என்கின்றார். இளமைப்பருவம் ஈடு இணையற்ற சக்தியையும், முழுமையான சுதந்திர உணர்வையும், உன்னதமான நோக்கையும் கொண்டது. இளையோர் நாளைய நம்பிக்கை விண்மீன்கள் மட்டுமல்ல, இன்றைய சமுதாய யதார்த்தங்களும் இவர்களே!*

*எனவேதான், எல்லாவற்றிலும் உண்மைகளை உரசிப் பார்க்கும் தணியாத தாகம் உடைய இவர்கள் பல நேரங்களில் பலரால், பல முறை, பல இடங்களில் பகைவர்களாகப் பார்க்கப்படுகின்றார்கள், தவறாக புரிந்துகொள்ளப் படுகின்றார்கள். இச்சூழ்நிலையில் இளையோரும் தாம் ஏன் இவ்வாறு பகைவராக பார்க்கப்படுகின்றோம் அல்லது தவறாக புரிந்து கொள்ளப்படுகின்றோம் என்பதை சிந்தித்து, செயற்படுவதும் சிறந்தது.*

### இன்றைய இளையோர்

*இளையோர் இன்று விளையாட்டு, இசை, நடனம், நடிப்பு, தொலைபேசி, இணையத்தளம் அதன் பயன்பாடுகள் போன்ற இன்னும் எத்தனையோ பல விடயங்களை அதீதமாக விரும்புகின்றனர். இவற்றைவிட இன்று இளையோரின் தேவைகள் அதிகம். அன்பு அவர்களது முதன்மையான தேவை. அன்பைக் கொடுக்கவும், அன்பைப் பெறவும் விரும்புகின்றனர். எல்லாவற்றிலும் தமக்கென்று நட்பையும், தோழமையையும் தேடுகின்றனர். தம்மை திருத்திக்கொள்ள கண்டிப்போடு கூடிய அரவணைப்பை எதிர்பார்க்கின்றனர். தம் இலக்கை, நோக்கை, சேவையை நிறைவேற்ற சந்தர்ப்பத்திற்காக ஏங்குகின்றனர்.*

### அழைப்பு

*இளமை எனும் சிற்பங்களை செதுக்க முன்வருவோம், அருட்பணியாளர்களே, இருபால் துறவியரே, பொதுநிலை பணியாளர்களே, பெற்றோரே எம் இளையோரை செதுக்குவோம், பெறுமதிமிக்க சிற்பங்களை எம்மால் உருவாக்க முடியும். இளையோரே! நவீனகால கண்டுபிடிப்புக்களை பயன்படுத்தி உங்களை உருவாக்கிக்கொள்ளுங்கள். உங்கள் செயற்பாடுகள் சிறந்த முடிவுகளைத்தரும். உங்கள் உள்ளத்தில் இயேசுவின் மீது தணியாத தாகத்தையும், வாழ்வில் ஏற்றமிகு மாற்றத்தையும் கொண்டுவரும்.*

***மீண்டும் மறுமடலில் சந்திப்போம்.***
***உங்கள் அன்பின் பணியாளன்.***
***அருட்பணியாளர் அ. லக்ஸ்ரன் டி சில்வா.***

ஓ ஓ ஓ

## புனித யோசவ்வாஸின் திருச்சிலுவைப் பயணம்.

01.09.2018 மகாகல்கமுவவிலிருந்து ஆனமடுவை வரைக்கும் பயணித்தல்.
01.09.2018 – 07.09.2018 வரை சிலாப மறைமாவட்டம்.
08.09.2018 – 24.09.2018 வரை கொழும்பு உயர் மறைமாவட்டம்.
25.09.2018 காலி மறைமாவட்டம்.
26.09.2018 – 28.09.2018 வரை பதுளை மறைமாவட்டம்
29.09.2018 – 01.10.2018 வரை இரத்தினபுரி மறைமாவட்டம்.
02.10.2018 – 10.10.2018 வரை கண்டி மறைமாவட்டம்.
11.10.2018 ஹபரண, அனுராதபுரம் மறைமாவட்டம்.
12.10.2018 பொலனறுவை, அனுராதபுரம் மறைமாவட்டம்.
13.10.2018 – 15.10.2018 வரை மட்டக்களப்பு மறைமாவட்டம்.
16.10.2018 – 17.10.2018 வரை திருகோணமலை மறைமாவட்டம்.
18.10.2018 – 22.10.2018 வரை யாழ்ப்பாணம் மறைமாவட்டம்.
23.10.2018 – 29.10.2018 மன்னார் மறைமாவட்டம்.
30.10.2018 – 31.10.2018 அனுராதபுரம் மறைமாவட்டம்.
01.11.2018 மகாகல்கமுவைக்கு வருதல்.

**அருட்பணி. அலெக்ஸ் ஜானக்க, பரிபாலகர், புனித யோசவ்வாஸ் தேசிய திருத்தலம், கல்கமுவ**

## மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2018

### செப்ரம்பர்

05. புனித அன்னைதிரேசா - புதியகோயில்குளம்.
08. தூய வேளாங்கண்ணி திருவிழா - சாவற்கட்டு, கங்கன்குளம், புதியகற்பகபுரம், மாந்தை, எள்ளுப்பிட்டி, நெடுங்குளம் (கட்டையடம்பன்), பெரியகட்டு (பம்பைமடு), நடுக்குடா.
- புனித கன்னி மரியாவின் பிறப்பு விழா - நானாட்டான், மாவிலங்கேணி, கரிசல், இலுப்பைக்குளம், விடத்தல்தீவு, எழுத்தூர், சாளம்பன், நொச்சிகுளம், மாறாஇலுப்பை, காட்டாஸ்பத்திரி, மூங்கில் முறிச்சான், வேளாங்கண்ணிநகர், பாரதிபுரம், கங்கங்குளம்.
- ஆரோக்கிய மாதா திருவிழா - பூம்புகார், நடுக்குடா.
- தூய அடைக்கல அன்னை திருவிழா - பறண்நட்டகல், நொச்சிகுளம், நானாட்டான், எழுத்தூர்.
- சதாசகாய மாதா திருவிழா - தலைமன்னார் (பியர்)
- அங்காமத்து மாதா - குஞ்சுக்குளம்.
09. வேளாங்கண்ணி - பாலியாறு (தேவன்பிட்டி), தோணிக்கல், எல்லப்பர் மருதன்குளம்.
- ஆரோக்கிய அன்னை - கருவேப்பங்குளம் (தரணிக்குளம்).
11. வேளாங்கண்ணி அன்னை திருவிழா - கட்டுக்கரைக்குளம்.
14. குருக்கள்கோவில் திருவிழா - மன்னார்.
- திருச்சிலுவை அருட்சகோதரிகள் விழா.
15. வியாகுல அன்னை திருவிழா - அடம்பன், சின்னவலயன்கட்டு.
- ஆரோக்கிய அன்னை - வவுனியா வைத்தியசாலை.
16. வேளாங்கண்ணி திருவிழா - ஓமந்தை.
- தூய அடைக்கலமாதா - முருகனூர்.
22. தூய சிந்தாத்திரை மாதா திருவிழா - பெரியமுறிப்பு.
24. தூய சிந்தாத்திரை மாதா திருவிழா - பாப்பாமோட்டை, மடுறோட் (கட்டையடம்பன்).
26. தூய சதாசகாய மாதா ஆலயம் - சகாயமாதாபுரம் வவுனியா.
28. தூய வேளாங்கண்ணி மாதா திருவிழா - தாமரைக்குளம்.
- அடைக்கல மாதா திருவிழா - கருவாஞ்சிக்குளம்.
29. தூய மிக்கேல் திருவிழா - தரவன்கோட்டை, தாலிக்குளம்.
- புனித சவேரியார் திருவிழா - கோட்டக்குளம்.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

## கல்கமுவ புனித யோசவ்வாஸ் சிலுவை



சிங்கள அரசன் ஒருவனால் 13ஆம் நூற்றாண்டில் கல்கமுவ எனும் காட்டுப் பகுதியில் சில தமிழ் மக்கள் குடியேற்றப்பட்டு, அவர்களுக்கு சில பதவிகளும் கொடுக்கப்பட்டன. பிற்பட்ட காலங்களில் அம்மக்கள் தனித்து விடப்பட்டனர். இம்மக்கள் நகர்ப்புறம் வருவதென்றால் பெரிய அடர்ந்த காட்டினூடாக செல்லவேண்டும். இவ்வாறு இம்மக்கள் வாழ்ந்து வரும் காலத்தில் 17ஆம் நூற்றாண்டில் புனித யோசவ்வாஸ் புத்தளத்தில் கண்டிக்குப் போகும் பாதையில் இம்மக்களைச் சந்தித்துள்ளார். இவர்கள் புனித யோசவ்வாஸ் அடிகளாரால் கத்தோலிக்க மறைக்குள் இணைக்கப்பட்டார்கள்.

இம்மக்கள் காட்டுப்பகுதியால் தேவையான இடங்களுக்கு செல்லும்போது காட்டுவிலங்குகளின் ஆபத்திற்கு உள்ளானார்கள். குறிப்பாக யானையினால் தாக்கப்பட்டார்கள். இதை அறிந்த புனிதர், அம்மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு கல்கமுவ காட்டுப்பகுதியில் சிலுவை ஒன்றை நாட்டினார். அச்சிலுவையை நாட்டிய பின்னர் மக்கள் பயமில்லாமல் அக்காட்டு வழியால் சென்று வந்தனர். அச்சிலுவையானது மக்களை காட்டு விலங்குகளின் ஆபத்தில் இருந்து காத்ததோடு மட்டுமல்லாமல், நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் நம்பிக்கையோடு அச்சிலுவைக்கு அருகில் கிடக்கும் மண்ணை எடுத்து, கரைத்து நோயுள்ள இடத்தில் பூசியும், கரைக்கப்பட்ட நீரை அருந்தியும் குணம்பெற்றுள்ளனர். இவ்வாறு பல அற்புதங்கள் நாளுக்கு நாள் நடைபெற்று வந்தன. அதனால் அம்மக்கள் புனித யோசவ்வாஸ் நாட்டிய சிலுவை என மனதில் இருத்தி, புனித யோசவ்வாஸின் பரிந்துரையைக் கேட்டு நலம் பெற்று வருகின்றனர். பிறமதத்தவர்களும் இந்த அற்புதங்களைக் கேள்விப்பட்டு அச்சிலுவை அடியில் வந்து மன்றாடி பல புதுமைகளை அடைந்துள்ளனர்.

48 வருடங்களுக்கு முன்னர் நல்லபாம்பினால் கடியுண்ட செலஸ்ரின் அன்னாவியார் என்ற தமிழ் கத்தோலிக்கர் இந்த சிலுவையிலும், புனித யோசவ்வாஸிலும் நம்பிக்கை கொண்டு, சிலுவையடியில் இருந்த மண்ணை நம்பிக்கையோடு தண்ணீரில் கரைத்து அருந்தி, காயத்திற்கு பூசி, எதுவித நாட்டு வைத்தியமோ, ஆங்கில வைத்தியமோ பெறாமல் நலமடைந்து இன்று வரை உயிருள்ள சாட்சியாக வாழ்ந்து வருகின்றார். இத்தகைய விடயங்களை அறிந்த இலங்கைத் திருச்சபையின் ஆயர் மன்றம், யோசவ்வாஸ் அடிகளாரைப் புனிதர் நிலைக்கு உயர்த்தும் போது, தேசிய யோசவ்வாஸ் குழுவினரால் இச்சிலுவை எடுத்துச் செல்லப்பட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டது. இச்சிலுவை இருந்த இடத்தில்தான் தற்போது புனித யோசவ்வாஸ் அடிகளாருக்கான தேசிய திருத்தலம் கட்டப்பட்டு வருகின்றது.

இத்தகைய புதுமை வாய்ந்த சிலுவையானது இலங்கையிலுள்ள எல்லா மறைமாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டுமென ஆயர் மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு எடுத்துவரப்படுகின்றது. இப்புதுமை நிறைந்த சிலுவையானது எமது மறைமாவட்டத்திற்கு 2018 ஐப்பசி மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை பயபக்தியாக எடுத்துவரப்பட உள்ளது. புனித யோசவ்வாஸ் அடிகளாரால் இச் சிலுவை நாட்டப்பட்டதால் புனித யோசவ்வாஸ் அடிகளாருக்குரிய புனித பண்டமாக இச்சிலுவை கருதப்படுகின்றது. நாமும் இத்திருச்சிலுவையை வணங்கி, புனித யோசவ்வாஸின் பரிந்துரையைக் கேட்டு அருள் பெறுவோம்.●

அருட்தந்தை அருள்பிரகாசம்

## துயர் பகிர்கின்றோம்

மன்னாப் பணியாளரான பேசாலையைச் சேர்ந்த திருமதி. கிறிஸ்ரி தேக்கிளா குருஸ் அவர்கள் இறையடி சேர்ந்தார். மறைப்பணி, மரியாயின் சேனை, மன்னா விநியோகம் போன்ற ஆன்மீகப் பணிகளிலும், பல்வேறு சமூகப் பணிகளிலும் அயராது உழைத்த இவர் உடல் நலமற்றிருந்த நிலையில் 20.08.2018 அன்று இறைபதம் அடைந்தார்.

இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். இறையடி சேர்ந்த இவர் இறைவனின் முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுமென்று செபிக்கின்றோம். – மன்னா ●

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்.
*-மன்னா நிர்வாகம்-*

மன்னார் மாவட்டச் செய்திகள்

# உலகில் காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் - 30.08.2018







கடந்த யுத்தத்தின் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது? என்ற உண்மையை, நீதியைக் கேட்டு, உலக காணாமல் ஆக்கப்பட்டோருக்கான இன்றைய தினத்திலே வடக்கிலே வாழும் இவர்களின் உறவுகள் இணைந்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள். இக்கவனயீர்ப்பு போராட்டம் மன்னார் பொது விளையாட்டு அரங்கில் இருந்து மன்னார் பிரதேச செயலக அலுவலகம் வரை ஊர்வலமாக மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. ●

# நல் நிலைக்கான பயணம், குடும்ப புனர்வாழ்வு நிறுவனம் ஒழுங்கு




இலங்கை குடும்பப் புனர்வாழ்வு நிறுவனத்தினால், மன்னார் மாவட்டச் செயலகத்தின் முன்பாக கடந்த 21.08.2018 அன்று காலை 8.30 மணியளவில் நன் நிலைக்கான பயணம் என்கின்ற தலைப்பில் நிகழ்வு ஆரம்பமானது.

இந் நிகழ்வில் வடமாகாண முதல் அமைச்சர் கௌரவ C.V. விக்னேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் வடமாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் குணசீலன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், நகரதவிசாளர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் அரசாங்க ஊழியர்கள், தனியார் நிறுவனங்களின் ஊழியர்கள், சர்வமத அமைப்பினர், மீனவ கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், போக்குவரத்துச் சங்க ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். மேற்படி நிகழ்வு தொடங்கிய நாளில் இருந்து இப் பயணத்தில் மன்னார் மாவட்டத்தின் நொச்சிக்குளம், சிறுநாவற்குளம், உயிலங்குளம், உயிர்த்தராசன்குளம், செம்மண்தீவு, முருங்கன்பிட்டி, இசைமாலைத்தாழ்வு, தம்பனைக்குளம் போன்ற கிராமங்களில் உள்ள 200 இற்கும் மேற்பட்ட மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உணர்வெழுச்சியுடன் இப்பயணத்தில் குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் (FRC) ஊழியர்களுடன் பங்கு கொண்டிருந்தனர்.

➡ 15

# சாமசிறி தேசமானய விருது

## மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் பெற்றுக்கொண்டனர்



2018ஆம் ஆண்டுக்கான அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் கடந்த 14.08.2018ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெலிகம இல் நடைபெற்ற சாமசிறி சமூக சேவையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் இருந்து மூவர் சாமசிறி தேசமானிய விருது பெற்று கௌரவிக்கப்பட்டனர். சமூகசேவை, தொண்டுப்பணி, சமூக, கலை, கலாசார, கல்வி மற்றும் மனித உரிமை செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டவர்கள் தெரிவு செய்யப்பட்டு, கௌரவ விருதினைப் பெற்றனர். இவர்கள் மூவரும் இளையோர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் கௌரவ சாமசிறி தேசமானிய விருதினைப் பெற்றனர்.

- தேசமானிய கொன்ஸால் தயாளராஜன்-பெரியகமம் மன்னார்
- தேசமானிய மேரி சந்தியோகு சவேரியான் அனஸ்டேசியஸ் டெலிமா-அரிப்பு.
- தேசமானிய சைனுல் ஆப்தீன் நெடுங்குளத்தார்-முசலி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். ●

# மன்னார் மரியாயின் சேனை

## புதிய ஆன்ம இயக்குனரின் வரவேற்பு



மன்னார் மறைமாவட்ட கொமிசியத்தின் 356 வது கூட்டமும், புதிய ஆன்ம இயக்குனரின் வரவேற்பு நிகழ்வும் 04.08.2018 சனிக்கிழமை அன்று காலை 9.30 மணிக்கு குடும்ப நலப்பொதுநிலையினர் பணிமையத்தில் கொமிசியத் தலைவர் சகோ. லோரன்ஸ் குரூஸ் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

இவ் விழாவின் முதல் நிகழ்வாக எமது புதிய ஆன்ம இயக்குனரும், சாந்திபுர பங்குத்தந்தையுமான அருட்பணி அ. இராயப்பு அடிகளார்க்கு மாலை அணிவிக்கப்பட்டு மரியாயின் சேனையாளர்கள் புடை சூழ சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின் தலைவரின் தலைமையில் கொமிசியக் கூட்டம் சேனையின் விதிகளுக்கமைவாக ஆரம்பமானது. சேனையாளர்களுக்கு எமது புதிய ஆன்ம இயக்குனர் தனது முதலாவதான ஆன்ம உரையினை நிகழ்த்தினர். இயேசுவின் இனிய நாமத்திலும், எமது அன்னையாம் தூய கன்னிமரியாளின் நாமத்திலும் ஆசி கூறினார். இன்று பங்குத்தந்தையர்களினதும், சுதேச குருக்களினதும் பாதுகாவலராகிய புனித யோண் மரிய வியானியின் நினைவு நாள்.

➡ 15

தமிழ் ஆன்மீகப் பணியகங்கள்

# சுவிஸ் நாட்டில் மடுமாதா திருவிழா





சுவிஸ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் முன்னெடுப்பில் வருடந்தோறும் கொண்டாடப்படும் மடுமாதா திருவிழா இவ்வருடமும் கடந்த 18.08.2018 சனிக்கிழமை அன்று சுவிஸ் தேசத்தின் பிரசித்தி பெற்ற மரியஸ்ரைன் மாதா திருத்தலத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருவிழா திருப்பலியை மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலைப் பங்கைச் சேர்ந்தவரும் கிளரேசியன் துறவறசபை குருவுமான அருட்பணி. எவரெஸ்ட் டயஸ் அடிகள் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். இவர் ஒஸ்ரியா நாட்டில் மேய்ப்புப்பணி இறையியல் உயர் கல்வியை கற்று வருகின்றார். இவ்விழாவிற்கு சுவிஸ் தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் தமிழ்க்கத்தோலிக்க கிறிஸ்தவர்களும், பிற மத சகோதரரும் நூற்றுக்கணக்கில் குழுமி வந்திருந்தனர். விழாத் திருப்பலியின் ஆரம்பத்தில் ஆசீர்வாதப்பர் துறவற சபைக்கு சொந்தமான மரியஸ்ரைன் ஆச்சிரமத்தின் மடாதிபதி பேரருட்திரு பீற்றர் அவர்கள் இறைமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினார். திருப்பலி நிறைவில், அலங்கரிக்கப்பட்ட அழகுத் தேரில் மடுமாதா திருச்சுரூபம் பவனியாக எடுத்துவரப்பட்டு ஆசீர் வழங்கப்பட்டது. சுவிஸ் தமிழ்க்கத்தோலிக்க பணியகத்தின் இயக்குனர் அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு, சுவிஸ் பணியக மத்திய குழு உறுப்பினர்களின் உதவியுடன் நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக திட்டமிட்டு செய்து முடித்தார். ●

# ஜேர்மனி பணியக வானொலி சேவையின் அங்குரார்ப்பணம்

ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தின் இணையவழி நற்செய்தி பணிகள் வரிசையில் புதிய படைப்பாக தயாரிக்கப்படும் இணையத்தள வானொலியான Tamil Catholic Daily Radio 11-08-2018 அன்று கேவலார் அன்னை திருத்தல விழாவன்று உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும், 10,11-08-2018 தினங்களில் கேவலார் திருப்பதியில் நடைபெற்ற வழிபாடுகள் நேரலையாக ஒலிபரப்பு செய்யப்பட்டன 10-08-2018 அன்று மாலை 17:00 மணிமுதல் 20:00 மணி வரையும் 11-08-2018அன்று காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையும் கேவலார் திருத்தலத்தில் இருந்து வழிபாடுகள் நேரலையாக ஒலிபரப்பப்பட்டன. ●

# 125 வருடங்களை கடந்து பயணம் செய்கின்றது....

## திருகோணமலை மறைமாவட்டம்

திருகோணமலை மறைமாவட்டம் 1893 இல் ஆரம்பமாகி கடந்த 25.08.2018 அன்று 125 ஆண்டுகளை நிறைவு செய்து யூபிலி விழாவினைக் கொண்டாடியது. திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆறாவது ஆயர் பேரருட் கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை, அருட்பணியாளர்கள், அருட்சகோதர, சகோதரிகள், இறைமக்கள் அனைவரையும் மன்னார் மறைமாவட்டம் அன்போடு வாழ்த்திப் பாராட்டுகின்றது. திருகோணமலை மறைமாவட்டமானது 25.08.1893 அன்று திருத்தந்தை 13ஆம் லியோ அவர்களால் இலங்கையின் ஐந்தாவது மறைமாவட்டமாக அறிவிக்கப்பட்டது. இன்றைய திருகோணமலை மறைமாவட்டமானது திருகோணமலை நிர்வாக மாவட்டத்தை உள்ளடக்கிய 2896 சதுரகிலோ மீற்றர் பரப்பில் இயங்கிவருகின்றது.

➡ 15

# டிலாசால் அருட்சகோதரர்கள் மூவர் நித்திய வாக்குத்தத்தம் பெறுகின்றனர்


அருட்சகோதரர். றெ. நெல்சன் றெவ்வல்


அருட்சகோதரர். அ. அன்னை ஜோசப்


அருட்சகோதரர். தோ. கனுத்தப்பர் குருஸ்

08.09.2018 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய அருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் டிலாசால் துறவறசபையைச் சார்ந்த இம் மூன்று அருட்சகோதரர்களுக்குமான நித்திய வாக்குத்தத்த திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

**அருட்சகோதரர் றெப்பியேல் நெல்சன் றெவ்வல் :**

அவர்கள் வங்காலை எனும் கிராமத்தில் அமரர்களான றெப்பியல் றெவ்வல், மெற்றில்டா குலாஸ் ஆகியோருக்கு 7வது புதல்வனாக பிறந்தார். இவர் தனது கல்வியை மன் / புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்தில் பயின்றார். இவர் தனது துறவற படிப்பை இந்தியாவில் பெங்களூரிலும், தனது பட்டப்படிப்பை மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்திலும் நிறைவு செய்து தற்போது மன்னார் லசால் கல்வி வளாக உதவி இயக்குனராக கடமையாற்றி வருகின்றார்.

**அருட்சகோதரர் அருளானந்தம் அன்னை ஜோசப் :**

அவர்கள் மன்னார் பனங்கட்டுக்கொட்டு (மேற்கு) எனும் கிராமத்தில் திரு.திருமதி. அருளானந்தம் சதாநாயகி (பிரகாஷ் சதா) ஆகியோருக்கு மூத்த புதல்வனாக பிறந்தார். இவர் தனது கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் பயின்றார். இவர் தனது துறவற படிப்பை இந்தியாவில் பெங்களூரிலும், தனது கல்வியல் கல்லூரி படிப்பை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் நிறைவு செய்து, தற்போது மன் /புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார்.

**அருட்சகோதரர் தோமஸ் கனுத்தப்பர் குருஸ் :**

அவர்கள் முள்ளிக்குளம் எனும் கிராமத்தில் திரு. திருமதி. தோமஸ் ஆகியோருக்கு மூத்த புதல்வனாக பிறந்தார். இவர் தனது துறவற படிப்பை இந்தியாவில் பெங்களூரிலும், தனது பட்டப்படிப்பை மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்திலும் நிறைவு செய்து தற்போது மன்/ கருங்கண்டல் றோ.க.த.க. பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார். ●

## இம்மாத புனிதர்கள்

# புனித அன்னை திரேசா

## உலக இளையோர் தினத்தின் பாதுகாவலர்

**(செப்ரம்பர்: 05)**

"உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு, அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக." (லேவி.19:18)

யூகோஸ்லாவியாவில் ஸ்காப்ஜே நகரில் வாழ்ந்த நிக்கோலா மற்றும் திரானா தம்பதியினருக்கு 1910 ஒகஸ்ட் 26 அன்று பிறந்தவர் அன்னை திரேசா. இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கொன்சகா பொஜாக்ஸியு. செல்வச் செழிப்பு மிகுந்த குடும்பத்தின் தலைவரான நிக்கோலா அரசியல் ஈடுபாடு கொண்டவர். தந்தையை இழந்து, கடைக்குட்டியாக ஆக்னஸ் தவித்த போது அவருக்கு வயது ஒன்பது.

1925ஆம் ஆண்டில் அவர்களது கோவிலுக்கு வந்த பங்குத்தந்தை, புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை தம் இளைஞர், யுவதிகளை வாசிக்கத் தூண்டினார். மேலும் கல்கத்தாவில் பணியாற்றிய குருக்களின் கடிதங்களையும் வாசிக்கக் கொடுத்தார். இவைகளை மிகுந்த ஆர்வமுடன் வாசித்த ஆக்னஸ் தாமும் இந்தியா சென்று, பணியாற்ற வேண்டும் என்று உந்துதல் பெற்றார்.

அன்புடன் மறுத்த தாய் மற்றும் அண்ணனின் சம்மதம் பெற்று 1928 செப்ரம்பர் 26 ஆம் திகதி லொரேட்டோ மடம் சென்றார். அங்கு பயிற்சிபெற்ற பின் டிசம்பர் முதலாம் திகதி கல்கத்தா நோக்கி புறப்பட்டார். சிறுமலர் தெரசாவின் 'ஓர் ஆன்மாவின் வரலாறு' படித்து அவர் மீது பற்றுக் கொண்ட ஆக்னஸ் தனது பெயரையும் 1929 மே 23 முதல் திரேசா என்று மாற்றினார். 1931 மே 24 அன்று முதல் வார்த்தைப்பாட்டையும், 1937 மே 14 இல் நித்திய வார்த்தைப்பாட்டையும் கொடுத்தார். அதன் பிறகு கல்கத்தாவில் உள்ள புனித மரியா பள்ளியில் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார். கல்கத்தா சேரிகளில் மக்கள் படும்பாட்டையும், இந்தியா சுதந்திரம் பெற்ற அன்று நடைபெற்ற மதக்கலவரங்களின் போதும் மதிக்கப்படாத உயிர்களையும் கண்ட திரேசா அவர்களுக்காகப் பணியாற்ற முடிவு செய்தார். அவரது ஞானஒடுக்கத்தின்போது இந்த எண்ணம் ஆழப்பட்டது. இம்மக்களுக்காகத் தனியான சபை ஒன்றை ஆரம்பித்து, பணியாற்ற இறைவன் தன்னை அழைக்கின்றார் என்பதை அருட்தந்தை வான் எக்சம் மற்றும் அவர் வழியாக பேராயர் பெரியர் ஆகியோரிடம் தெரியப்படுத்தினார். மிகுந்த எதிர்ப்பு மற்றும் மறுப்புக்களுக்கு மத்தியில் இறைவன் தமது திட்டத்தை நிறைவேற்றினார். வத்திக்கானின் அனுமதியுடன் 1948 ஒகஸ்ட் 16 அன்று ஐந்து ரூபாயுடனும், மூன்று சேலைகளுடனும மோட்டிஜில் சேரியில் பணியை ஆரம்பித்தார். இவருடைய மாணவிகள் ஆக்னஸ் மற்றும் ஹெர்ட்ரூட் ஆரம்பத்தில் இவருடன் சேர்ந்து அருட்சகோதரிகளாகிப் பணியாற்றத் தொடங்கினார்கள். இந்த அன்பின் பணியாளர் சபையை 1950 ஒக்ரோபர் 07 அன்று திருத்தந்தை அங்கீகரித்தார்.



சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்த அன்னை திரேசா 'நல் மரண இல்லம்' ஒன்றை ஆரம்பித்தார். "என் இயக்கத்திலேயே மிக அழகான பணி இந்த இறப்போர் 'நல் மரண இல்லம்' தான். காரணம்; "இறக்கும் மனிதரிடத்தில் இறைவனைப் பார்க்கின்றேன்" என்றார். தொழுநோயாளர் இல்லம், குழந்தைகள் காப்பகம் அமைத்தார். "தியாகமில்லாத வாழ்க்கை சூன்யம். என்பதுதான் மனதில் சில கவலைகளின் சுமைகளைத் தாங்க முடியாதபோது, இந்த மழலைகளைப் பார்த்துத்தான் மகிழ்ச்சி அடைகின்றேன்" என்றார். இந்தப் பணிகளுடன் கல்விப் பணி என்னும் அறப்பணியையும் மேற்கொண்டார். 1963 மார்ச் 25 அன்று சகோதரர்கள் சபையையும் ஆரம்பித்தார். இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவில் இரக்கக் கரம் விரித்த அன்னை சந்தித்த சவால்கள் கொஞ்சநஞ்சமல்ல. "ஒடுக்கப்பட்டோருக்கும், அன்பு செய்யப்படாதவருக்கும் அன்பையும் இரக்கத்தையும் கொடுக்கின்றோம்" "துன்புறும் ஏழைகளுக்கு நாங்கள் செய்யும் சேவை கடவுள் இவர்களை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை வெளிப்படுத்தும்". அனைத்து சவால்களையும் சந்திக்க ஆண்டவர் இவருக்குச் சக்தி அருளியிருந்தார்.

"எங்கள் சகோதரிகள் எல்லாருமே ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் நற்கருணை ஆண்டவரிடம் செபிக்கின்றார்கள்" அன்னையின் அனுபவ வார்த்தைகள் சில.


இறைவனின் துணையுடன் மக்களின் மனங்களில் இறைவனின் கருணையைப் பரப்பிய அன்னை திரேசா, 1997 செப்ரம்பர் ஐந்து அன்று விண்ணகப்பிறப்படைந்தார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல், 2003, ஒக்ரோபர் 19 அன்று அருளாளராக உயர்த்தினார்.●

# புனித மத்தேயு

## சுங்கத்துறையினருக்குப் பாதுகாவலர்

**(செப்ரம்பர்: 21)**

"ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும்." (லூக்.6:44)




மத்தாயோஸ் என்பதற்கு "இறைவனின் கொடை" என்று பொருள். திருத்தூதர்கள் பட்டியலில் இந்தப் பெயர் மாற்கிலும் (3:18) லூக்காவிலும் (6:15) ஏழாவதாகவும், மத்தேயுவிலும் (10:3) திருத்தூதர் பணியிலும் (1:13) எட்டாவதாகவும் வருகின்றது. மத்தேயுவின் அழைப்புப் பற்றி குறிப்பிடும் போது மாற்கும், (2:13-17) லூக்காவும் (5:27-32) லேவி என்பவர் சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். மத்தேயு நற்செய்தி இவரை மத்தேயு என்றே குறிப்பிடுகிறது. (9:9-13). இந்த நிகழ்ச்சியானது மற்ற தகவல்களில் ஒத்துப் போவதால் லேவி என்பவரே மத்தேயு என்பதை நாம் அறியமுடிகின்றது. அல்பேயுவின் மகனான (மாற். 2:14) மத்தேயு இயேசுவை பின்தொடர்ந்த போது 31 வயதுடையவராக இருந்தார். அனைத்து திருத்தூதர்களையும் விட வசதியான தொழில் செய்து வந்த இவர் கப்பர்நகூம் அருகில் கலிலேயக் கடற்கரைக்குப் பக்கத்தில் வரிவசூலிப்பவராக பணியாற்றி வந்தார். தங்கள் நாட்டுக்குள் நுழைந்து, தங்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் உரோமையருக்குப் பணிபுரிந்த காரணத்தினால் மக்கள் இவரை 'பாவி' என்று அழைத்தார்கள். யூதர்களின் இகழ்ச்சிக்கும், அவர்களது ஏளனத்திற்கும் ஆளாகி மனதளவில் காயப்பட்டு வாழ்ந்து வந்தார் மத்தேயு. சபிக்கப்பட்டவராக, சங்கடத்துடன் வாழ்க்கை நடத்தினார். இவரைப் பார்த்து, "என்னைப் பின்பற்றி வா" என்று இயேசு அழைத்தார். சமூகத்தில் உயர்ந்தவர்களும், தாழ்நிலையினர் என்று கருதப்படுகிறவர்களும் தன்னை இகழும் வேளையில் எல்லாராலும் மதிப்புப் பெறும் தலைவராக உயர்ந்து வரும் தன்னை இயேசு அழைப்பதை அறிந்து மகிழ்ச்சியில் திக்குமுக்காடினார். அனைத்தையும் விட்டுவிட்டு இயேசுவை பின்தொடர்ந்தார்.

மத்தேயு எங்கே நற்செய்தி பணியாற்றினார் என்பதில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இருப்பினும் முதலில் யூதேயா, பின் எத்தியோப்பியா, தொடர்ந்து பெர்சியா, அதன்பின் பார்த்தியா மற்றும் எகிப்தில் நற்செய்தி அறிவித்தார். எகிப்தில் இருந்தபோது அங்கிருந்த அரசரின் மகன் இறந்தார். இயேசு கிறிஸ்துவின் பெயரால் அவனுக்கு மத்தேயு உயிரளித்தார். அதே போல அந்த நாட்டு இளவரசி இபிஜினா தொழுநோயால் துன்புற்றபோது அவளைக் குணப்படுத்தினார். மத்தேயு தாம் எழுதிய நற்செய்தியை 70-80 ஆண்டுகளுக்கு இடையில் எழுதினார். கிரேக்க மொழி பேசும் யூதர் நிறைந்த அந்தியோக்கியா போன்ற நகரங்களில் யூதக் கிறிஸ்தவர்களும், பிற இனத்துக் கிறிஸ்தவர்களும் திருச்சபையில் உறுப்பினர்களாக இருந்தார்கள். இவர்களுக்குள் அவ்வப்போது சிக்கல்கள் எழுந்தன. மேலும் யூதர்களின் துன்புறுத்தல்களால் யூதக்கிறிஸ்தவர்கள் மனம் தளர்ச்சியுற்றிருந்தனர்.

இயேசுதான் உண்மையான மெசியாவா? என்ற ஐயப்பாடு அவர்களது உள்ளத்தில் எழுந்தது. இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணும் விதமாக, இயேசு தான் யூதர்கள் எதிர்பார்த்திருந்த மெசியா என்று யூதக் கிறிஸ்தவர்களும் அழுத்தமாகக் கூற இந்த நற்செய்தியை மத்தேயு எழுதியுள்ளார். இயேசு இறைமகன் என்றும், அவர் இறையாட்சியை நிறுவ வந்தவர் என்றும் வலியுறுத்தியுள்ளார். 90ஆம் ஆண்டு மத்தேயு தமது மக்களுடன் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்தபோது பீடத்தில் இருந்து வெளியே இழுக்கப்பட்டு, மத விரோதிகளால் கல்லால் எறிந்து கொல்லப்பட்டார். பெர்சியாவில் இது நடந்ததாக நம்பப்படுகின்றது. புனித அத்தனாசியஸ், புனித மத்தேயுவின் திருப்பண்டங்களை உரோமிற்குக் கொடுத்தார். இவை சாலேர்னோ என்ற பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இன்றும் அங்கேதான் அவை இருக்கின்றன.

**'மனம் மாறுவது எந்த அளவு முக்கியமோ அதை நம் வாழ்வில் வாழ்ந்து காட்டுவதும் முக்கியம்.'** ●

# புனித வின்சென் டி போல்

## இரக்கச் செயல்களின் பாதுகாவலர்

**(செப்ரம்பர்: 27)**


"நாம் கடவுளின் கைவேலைப்பாடு. நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய்ப் படைக்கப்பட்டிருக்கிறோம்." (எபே.2:10)



பிரான்ஸ் நாட்டில் டாக்ஸ் நகருக்கு அருகில் உள்ள காஸ்கனி கிராமத்தில் 1581 ஏப்ரல் 24 அன்று பிறந்தவர் வின்செண்ட் டீ போல். ஜீன் தே போல் மற்றும் பெர்ட்டிராண்ட் தே மொராஸ் ஆகியோரின் ஆறு பிள்ளைகளுள் இவரும் ஒருவர். கால் ஊனமுற்ற, ஏழை விவசாயியான தந்தை கஷ்டப்பட்டு உழைப்பதைக்கண்ட வின்செண்ட் தானும் ஆடு மேய்க்கச் சென்றார். தனிமையான நேரங்களில் பாடுவதும், செபிப்பதுமாக குழந்தைப் பருவத்தை ஆரம்பித்தார். படிக்க ஆசை. குடும்பச் சூழல் ஒத்துழைக்கவில்லை. எனவே பங்குத்தந்தையை அணுகினார். அவரின் உதவியுடன் டாக்ஸ் நகரில் இருந்த பிரான்சிஸ்கன் சபையினர் நடத்திய பள்ளியில் சேர்ந்தார். ஒழுக்கமும், அறிவும் இருகண்களென வளர்ந்தார். இவரின் அறிவுத்திறன் அறிந்த நீதிபதி கோமத் தம் மகனுக்குக் கற்பிக்குமாறு வின்செட்டை அமர்த்தினார். மற்ற பெற்றோரும் அப்படியே செய்தனர். இதனால் குடும்பக்கஷ்டம் கொஞ்சம் தீர்ந்தது. மாணவர்களுக்கு நற்பண்புகளைக் கற்றுக்கொடுக்கும் வின்செண்ட் இறைப்பணியாளர் ஆனார் என்றால் இன்னும் நிறைய பேரை நல்வழிப்படுத்த முடியும் என்று நினைத்த வழக்குரைஞர் கோமே வின்சென்டிடம் பேசினார். வின்செண்ட்டும் இறை அழைப்பை ஏற்றார். இறையியல் பயின்றார். 1600 செப்ரம்பர் 20 அன்று தமது 20ஆவது வயதில் குருத்துவ அருள்பொழிவு பெற்றார். ஏழைகள் மீது இவருக்கு இருக்கும் பாசத்தை அறிந்த செல்வச் சீமாட்டி ஒருவர் தமது உடைமைகள் அனைத்தையும் வின்சென்ட் பெயரில் எழுதி வைத்தார். பணத்தைத் தேடிப் போகக் கூடாது என்று நினைத்திருந்த வின்சென்ட் இந்த உதவியை அறிந்தவுடன் நல்ல செயல்களுக்காக பண உதவியை நாடலாம் என்று முடிவெடுத்தார். இந்தச் சீமாட்டியிடம் கடன் பெற்று திருப்பிக் கடனைக் கொடுக்காக ஒருவரைச் சந்திக்க வின்சென்ட் சென்றார். சந்தித்துவிட்டு கடல் வழியாகத் திரும்பும்போது கடல் கொள்ளையர்களிடம் மாட்டிக்கொண்டார். பின்பு அடுத்தடுத்து இரண்டு தடவைகள் வின்சனட் அடிமையாக விற்கப்பட்டார். அங்கிருந்து தப்பித்து பிரான்ஸ் சென்ற வின்சென்ட் பிறகு உரோமை சென்றார். திருத்தந்தையின் பரிந்துரையின் நிமிர்த்தம் அரசர் நான்காம் ஹென்றியின் அரசவையில் அரசியின் ஆன்ம ஆலோசகராக இருந்தார். 1610 மே 14 அன்று ஹென்றி கொலை செய்யப்பட்டவுடன், கிளிசி பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார்.

➡ 15

# திருச்சிலுவையின் மகிமை



**(செப்ரம்பர்: 14)**

சிலுவை பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால், மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை. (1கொ.1:18) சிலுவை யூதருக்குத் தடைக்கல்லாகவும், பிற இனத்தாருக்கு மடமையாகவும் இருந்தது. (1 கொரி.1:23). சிலுவைச் சாவு அடிமைகளுக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட தண்டனையாக மட்டுமன்றி இழிவுக்குரியதாகவும் விளங்கியது (எபி.12.2) இந்த சிலுவையின் வெற்றி விழா, திருச்சபையின் ஆரம்பக் காலம் முதலே விசுவாசிகளால் கொண்டாடப்பட்டு வந்தது. இயேசுவின் உடலை சிலுவையில் இருந்து எடுத்தவுடன் அவரைப் பின்பற்றுகிறவர்களின் கண்ணுக்கு அது கிடைத்துவிடக் கூடாதென்று நினைத்து அதனை சாக்கடையிலோ அல்லது கிணற்றிலோ ஆட்சியாளர்கள் எறிந்துவிட்டு, அதன் மேல் மண் மற்றும் கற்களைப் போட்டு மூடி மறைத்துவிட்டார்கள். 312 இல் உரோமையின் பேரரசருக்குப் போட்டிவந்தபோது கொன்சன்ரைன தம் செபத்திற்குப் பதில் மொழியாக வானில் ஒளிரும் சிலுவை அடையாளத்தைக் கண்டார். அதில், "இந்த அடையாளத்தின் வழியாக நீ வெற்றி கொள்வாய்" என்று எழுதி இருந்தது. இதைத் தொடர்ந்து 312 அக்டோபர் 28 அன்று மில்வியன் பாலத்தில் கான்ஸ்டன்டைன் போரில் வெற்றி பெற்றார். இதைத் தொடர்ந்து, "கிறிஸ்தவத்தின் அடையாளமான இந்த சிலுவை உரோமையின் அடையாளமாகவும், போர்வீரர்களின் கவசத்திலும் பொறிக்கப்பட வேண்டும்" என்று உத்தரவிட்டார். புனித ஹெலினா 326 செப்டம்பர் 14 அன்று எருசலேமில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உண்மையான சிலுவையை கண்டெடுத்தார். அதனை கொண்டாடும் விதமாக கான்ஸ்டன்டைன், கல்வாரியில் இரண்டு ஆலயங்கள் எழுப்பினார். அதுமுதல் திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழா மே மூன்றாம் நாள் கொண்டாடப்பட்டு வந்தது. உண்மைச் சிலுவையின் ஒரு பகுதி எருசலேமில் வைக்கப்பட்டது. 614இல் பெர்சியா அரசன் இரண்டாம் சொஸ்ரோஸ் சிரியா மற்றும் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றினான். பல்வேறு பொக்கிஷங்களை எருசலேமில் இருந்து கவர்ந்து சென்றான். உண்மையான திருச்சிலுவையின் பகுதியையும் ஈரானுக்கு எடுத்துச் சென்றுவிட்டான். கொண்ஸ்தாந்தினோபிள் பேரரசர் ஹெராக்ளியஸ் 629இல் பெர்சியா மீது படையெடுத்து உண்மைச் சிலுவையை கண்டுபிடித்தார். மிகுந்த பக்தியுடன், சாக்குஉடை அணிந்து, வெறுங்காலுடன் நடந்து அதனை எருசலேமிற்கு கொண்டு வந்தார். செப்டம்பர் 14 அன்று எருசலேமில் உள்ள திருச்சிலுவை ஆலயத்தில் வைத்து மகிமைப்படுத்தினார். இந்த வெற்றியை நினைவு கூரும் விதமாக ஏழாம் நூற்றாண்டு முதல் செப்டம்பர் 14ஆம் தேதியில் திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழாவைத் திருச்சபை கொண்டாடி மகிழ்கிறது.

**சிலுவை வழி இயேசு உணர்த்தும் உண்மைகளை உணர்வோர் வாழ்வில் மகிமை பெறுவர். இயேசுவின் இறப்பு வரை சிலுவை என்பது துன்புறுத்தல், அவமானம் மற்றும் மரணத்தின் சின்னமாக விளங்கியது. அவரது இறப்பின் பின்னர் அது பேரின்பத்தின், ஒளியின், நல்லிணக்கத்தின் சின்னமாகியது.** ●

**புனித யோசவ்வாஸ் ஆண்டு சிறப்புக் கட்டுரை**

# திருச்சபைச் சட்டத்தில் பொதுநிலையினர்

1999 ஆம் ஆண்டு நடந்து முடிந்த ஆசியாவிற்கான ஆயர் மன்றத்தின் இறுதிச் செய்தியில் "புலரும் புத்தாயிரத்தைப் பொதுநிலையினர் பொற்காலம் என்று அழைக்கலாம்" என்று கூறப்பட்டுள்ளது. இந்தச் சிந்தனை திருச்சபையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சிக்குக் கட்டியம் கூறுகின்றது. இவ்வளர்ச்சிக்கு வித்திட்டது சுமார் 35 ஆண்டுகளுக்குமுன் நடந்த 2ஆம் வத்திக்கான் சங்கம் என்றால் அது மிகையாகாது. "திருச்சபையின் நம்பிக்கை பொதுநிலையினர்" என்றும், "பொது நிலையினரும் திருமேய்ப்பர்களும் இணைந்து செயற்படாத இடத்தில் திருச்சபை உண்மையாகவே வேரூன்றாது" என்றும் சங்கம் தீர்க்கமாக முழங்கியது. ஆதலால்தான், யூபிலி 2000த்தை முன்னிட்டு உரோமையில் நடந்த கத்தோலிக்கப் பொதுநிலையினர் மாநாட்டில் திருத்தந்தை 2ஆம் ஜான்பால் உரையாற்றும்பொழுது, "2ஆம் வத்திக்கான் சங்கம் உண்மையிலேயே ஒரு தீர்க்கமான திருப்புமுனையாகும். பொதுநிலையினருக்கான நேரம் திருச்சங்கத்தில் தொடங்கியது. அதன்பின்னர்தான் ஆண், பெண் பொதுநிலையினர் பலர் தங்களது அழைத்தலைத் தெளிவாகப் புரிந்துகொண்டனர். நற்செய்தி அறிவிப்புப் பணி தங்களது அழைத்தலின் முக்கிய இயல்பு என்பதை கண்டுணர்ந்துள்ளனர்" என்றார்.

சங்கத்தைத் தொடர்ந்து 1983இல் பிரகடனம் செய்யப்பட்ட 'புதிய சட்டத்தொகுப்பு' அதனுடைய உண்மைப் பிரதிபலிப்பாகவும், அதன் கொள்கைகளை நடைமுறைப் படுத்தும் வழிவகைகளைக் கொண்ட "இறுதி ஏடாகவும்" அமைந்துள்ளது. வரலாறு படைத்திடத் தூண்டப்பட்டு, புறப்பட்டுவிட்ட பொது நிலையினருக்கு இன்றைய திருச்சபைச் சட்டங்கள் தடைக் கற்களாக அல்லாமல் படிக்கற்களாக உள்ளன என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

திருப்பட்டத்தினர், அர்ப்பணித்தோர், பொதுநிலையினர் உள்ளடங்கிய இறை மக்கள் அனைவர்களின் கடமைகள், உரிமைகள் பற்றி இதற்கு முன்னைய கட்டுரைகள் விளக்குகின்றன. அங்கு சொல்லப்பட்டவை அனைத்தும் பொதுநிலையினருக்குப் பொருந்தும். அவற்றுடன் பொது நிலையினருக்கென்றே ஒரு சில கடமைகளையும், உரிமைகளையும் சட்டங்கள் 224 – 231 வரையறுத்துள்ளன. அவற்றின் சிறப்புக் கூறுகளை இக்கட்டுரை விளக்குகின்றது.

### 01. பொதுநிலையினரின் தனிப்பண்பும் அழைப்பும்

"லைக்கோஸ்" என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து உருவான "லைட்டி" என்ற ஆங்கில வார்த்தை தமிழில் "பொதுநிலையினர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுக் கையாளப்பட்டு வருகின்றது. அகராதிகளில் "லே" அல்லது "லைட்டி" என்ற சொல்லுக்குப் பொதுவாக ஒரு துறையில் தனித்தகுதி அல்லது சிறப்பு அறிவு இல்லாதவர்கள், அதாவது சாமானிய (பாமர) மக்கள் என்ற பொருள் கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால் திருச்சபை வழக்கில் "பொதுநிலையினர்" என்ற வார்த்தைக்கு முற்றிலும் மாறுபட்ட பொருள் உண்டு. இங்கு திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் ஆகிய அருட்சாதனங்களைப் பெற்று, பொதுவாகக் குடும்ப வாழ்வை மேற்கொண்டு, உலகியல் காரியங்களில் ஈடுபட்டுள்ள இறைமக்கள் "பொதுநிலையினர்" என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களுக்காக இவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அருள்பொழிவு பெற்றவர்கள் (ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள்) திருப்பட்டத்தினர் என்றும், தாங்களாகவே விரும்பி வார்த்தைப்பாடுகளை வழங்கி சபைகளில் சேர்ந்து வாழ்வோர் அர்ப்பண வாழ்வை மேற்கொண்டவர் அல்லது அர்ப்பணித்தோர் (துறவிகள்) என்றும் அழைக்கப்படுகின்றனர். ஆக, உலகைச்சார்ந்திருக்கும் இயல்பு பொதுநிலையினருக்கு உரித்தான தனிப்பண்பாகும். இத்தன்மையைச் சட்டம் 225 வரையறுக்கின்றது: "தங்கள் திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் வாயிலாகக் கிறிஸ்துவின் அனைத்து விசுவாசிகளைப் போலவே பொதுநிலையினரும் அப்போஸ்தலிக்கப் பணிக்கு இறைவனால் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே இறைவனுடைய மீட்பின் செய்தி உலகெங்கும் எல்லா மக்களாலும் அறியப்படவும், ஏற்றுக்கொள்ளப்படவும், தனியாகவோ, சங்கங்களிலோ உழைப்பதற்குப் பொதுவான கடமையும், உரிமையும் கொண்டுள்ளனர்"

மேலும், "ஒவ்வொரு பொதுநிலையினரும் தத்தம் வாழ்க்கை நிலைக்கேற்ப உலகு சார்ந்த காரியங்களை நற்செய்தி மனநிலையால் ஊடுருவவும், நிறைவு செய்யவும் வேண்டிய சிறப்பான கடமையைக் கொண்டுள்ளனர்; இவ்வாறு குறிப்பாக உலகு சார்ந்த காரியங்களை நிறைவேற்றுவதிலும், உலகு சார்ந்த பணிகளை ஆற்றுவதிலும் அவர்கள் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்கின்றனர்."

இச்சட்டம் 2ஆம் வத்திக்கான் சங்கக் கோட்பாட்டை அப்படியே பிரதிபலிக்கின்றது. பொதுநிலையினரின் அழைப்பைப்பற்றிச் சங்கம் இவ்வாறு கூறுகின்றது: "பொதுநிலையினர் உலக காரியங்களில் ஈடுபட்டு உழைக்கும் போது இறைவனின் திட்டப்படி நெறிப்படுத்துவதன் மூலம் இறை ஆட்சியை அமைக்கத் தேடுகின்றனர்: அதுதான் பொதுநிலையினரின் தனிப்பட்ட அழைப்பு. இவ்வுலகில் பல்வேறான அலுவல்கள், வேலைகள், சாதாரண குடும்ப, சமூக வாழ்க்கை நிலைகள் ஆகியவற்றின் நடுவில் அவர்கள் வாழ்கின்றனர். இவற்றோடு அவர்களது வாழ்வு ஒருவாறு பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளது. இங்குதான் இறைவனின் அழைப்பை அவர்கள் எதிர்கொள்கின்றனர். நற்செய்தி மனப்பான்மையால் வழிநடத்தப் பெற்று, தங்களுக்குரிய அலுவலை ஆற்றுவதின் மூலம் அவர்கள் புளிக்காரம் போல உலகில் இருந்துகொண்டே உலகைப் புனிதப்படுத்த அழைக்கப்பட்டுள்ளனர்" (திருச்சபை, 31). இக் கண்ணோட்டத்தில் பார்க்கின்ற திருத்தந்தை 2ஆம் ஜான்பால், எல்லாப் பொதுநிலையினரும் "மறைபரப்புப் பணியாளர்கள்" என்கின்றார்.



பொதுநிலையினர் மறைபரப்புப் பணியாற்றும் தளம் பரந்து விரிந்த உலகமாகிய அரசியல், பொருளாதாரம், தொழிற்சாலைகள், கல்வி, தொடர்புசாதனங்கள், அறிவியல், தொழில்நுட்பம், கலை மற்றும் விளையாட்டு ஆகும் (ஆசியத் திருச்சபை, 45).

உலகு சார்ந்த காரியங்களை நற்செய்தி மனநிலையால் ஊடுருவுதல் என்றால் என்ன பொருள்? திருமுழுக்கினால் திருச்சபையின் பொதுநிலையினராக உருப்பெற்றவர்கள், அதே நேரத்தில் ஒரு நாட்டின் குடிமக்களாகவும் இருக்கின்றனர். அனைத்துக் குடிமக்களுக்கும் உரிய உரிமைகளும், சுதந்திரமும் பொதுநிலையினருக்கும் உண்டு. குடிமக்களுக்குரிய உரிமைகளையும், பயன்களையும் பெற்றுக்கொள்ள முயற்சி எடுப்பதோடு நின்றுவிடாமல், சமத்துவம், சமூக நீதி, மனித நேயம், நிறை வாழ்வு போன்ற நற்செய்தி மதிப்பீடுகள் ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுக் கூறுகளுக்குள் ஊடுருவி, மாற்றங்களை ஏற்படுத்தவும் பொதுநிலையினர் உழைக்க வேண்டும். இது பொதுநிலையினரால் மட்டுமே முடியும். மேலும் இன்று உலகில் எழுகின்ற பல அறைகூவல்களைச் சந்திக்கப் பொதுநிலையினர் முன் வரவேண்டும். சாதி, சமய வேறுபாடுகளால் எழுகின்ற கலவரங்கள், தீண்டாமை, பெண்ணடிமை, அடிப்படைவாதம் உருவாக்கும் சிக்கல்கள், சமூகத்தில் நிலவும் ஊழல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இவை போன்ற எண்ணற்ற அறைகூவல்களைச் சந்திப்பதில் பொதுநிலையினருக்குப் பெரும் பங்குண்டு. இக்கடமையை அவர்கள் தட்டிப்பறிக்க முடியாது. அதேபோன்று அரசியல் கட்சிகள் மாந்தரின் நிறைவாழ்வை மையமாகக் கொண்டு செயற்படக் கிறிஸ்தவப் பொதுநிலையினர் நேரடியாக ஈடுபடுவதும் இன்றைய தேவையாகும்.

### 02. குடும்ப வாழ்வில் மறைப்பணி

சமூகத்திற்கும், திருச்சபைக்கும் தொடக்கமாகவும் அடித்தளமாகவும் இருப்பது குடும்பம். கிறிஸ்தவப் பொதுநிலையினர் பெரும்பாலும் குடும்ப வாழ்வில் ஈடுபட்டுள்ளனர். அதுதான் அவர்களது "தனிப்பட்ட அழைப்பு" என்றும் அவ்வாழ்வின் வழியாக இறைமக்களைக் கட்டி எழுப்புவதற்கு அவர்கள் உழைக்க வேண்டுமென்பது அவர்களது சிறப்பான கடமை என்றும் சட்டம் 226 பிரிவு 1இல் கூறப்பட்டுள்ளது. மேலும் பிரிவு 2 கிறிஸ்தவப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி அளிக்கவும், குறிப்பாக கிறிஸ்தவக் கல்வியை அவர்களுக்கு உறுதி செய்யும் மிகக்கனமான கடமையும், உரிமையும் கொண்டுள்ளனர் என்றும் கூறுகின்றது. பெற்றோரின் இக்கடமை சட்டத்தொகுப்பின் பிற இடங்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, தங்கள் பிள்ளைகளுக்குத் தாங்களே மறைக்கல்வி புகட்டுதல் (தி.ச. 774, பிரிவு 2): பிள்ளைகளைக் கத்தோலிக்கப் பள்ளிகளில் சேர்த்தல் (தி.ச. 798): அந்தந்தப் பருவத்தில் தங்கள் பிள்ளைகள் புகுமுக அருள்சாதனங்களான திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், நற்கருணை பெறுவதற்கு ஏற்பாடு செய்தல். (தி.ச. 851,890,914)

### 03. திருச்சபை அலுவல்களையும், பணிகளையும் ஏற்றல்.

சட்டம் 228 பிரிவு 1 இவ்வாறு கூறுகின்றது: "பொருத்தமானவர்களெனக் கண்டறியப்பட்டுள்ள பொதுநிலையினர் சட்ட விதியமைப்புகளுக்கு ஏற்ப தாங்கள் ஆற்றக்கூடிய திருச்சபை அலுவல்களையும், பணிகளையும் தங்கள் திருமேய்ப்பர்களிடமிருந்து ஏற்றுக்கொள்வதற்கான தகுதி பெற்றுள்ளனர்." இது ஒரு முக்கியமான சட்டம். இதற்கு முன்பு இதுபோன்ற சட்டம் திருச்சபையில் இருந்ததில்லை. பொதுநிலையினர் ஏற்கக்கூடிய பொறுப்புக்களை இச்சட்டம் இரண்டு வகையாகப் பார்க்கின்றது. ஒன்று அலுவல்கள் (offices), மற்றொன்று பணிகள். (ministries of functions)

#### அ) திருச்சபை அலுவல்கள்

திருச்சபை அலுவல்கள் (ecclesiastical offices) என்றால் என்ன பொருள் என்பதைச் சட்டம் 145 வரையறுக்கின்றது. "திருச்சபை அலுவல் என்பது ஓர் ஆன்மீக நோக்கத்தைச் செயற்படுத்துவதற்காக இறைவனுடைய அல்லது திருச்சபையினுடைய ஏற்பாட்டினால் நிலையான முறையில் நிறுவப்பட்ட ஒரு பணியாகும்" முன்பு திருச்சபை அலுவல்களைப் பெரும்பாலும் குருத்துவத்திருநிலை அருட்சாதனத்தைப் பெற்றவர் மட்டுமே செய்து வந்தனர். இப்பொழுது திருப்பட்ட அதிகார இயல்பு தேவைப்படும் அலுவல்கள் மட்டுமே திருப்பட்டத்தினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, பங்குத்தந்தை, ஆயர், முதன்மைக் குரு (vicar general), நீதிமன்ற முதல்வர் (judicial vicar) போன்ற அலுவல்களைக் குருத்துவத் திருப்பட்டம் பெற்றவரே ஏற்கலாம். திருப்பட்ட அதிகார இயல்பு தேவையில்லாத பல அலுவல்களைத் திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் பெற்ற பொதுநிலையினர் இன்று ஆற்றலாம். எடுத்துக்காட்டாக, மறைமாவட்ட அலுவலகச் செயலர் (chancellor), எழுத்துப் பதிவாளர் (notary), நிதி நிர்வாகி, பள்ளிகள், தொழிற்பயிற்சிக் கூடங்களின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் தாளாளர்கள், நிறுவனங்களின் இயக்குநர்கள், பங்கு நிர்வாகி (தி.ச 517 பி 2), குருமடங்களில் இறையியல் பேராசிரியர்கள், ஆணைக்குழுக்களின் செயலர்கள், திருச்சபை நீதிமன்றத்தின் எழுத்துப் பதிவாளர், வழக்குரைஞர், பிணைப்புக் காப்பாளர் (defender of the bond), நீதி நெறியாளர் (promoter of justice), வழக்கை விசாரிப்பவர் மற்றும் நடுவர் ஆகியோர் இதில் அடங்குவர்.

#### ஆ) திருச்சபைப் பணிகள்

திருச்சபை அலுவல்களைப்போல, திருமேய்ப்பர்கள் தாங்களே இதுவரையில் ஆற்றிவந்த, திருப்பட்ட அதிகார இயல்பு தேவையில்லாத, பல பணிகளைத் தகுதிவாய்ந்த பொதுநிலையினருக்கு வழங்கலாம் என்று சட்டம் கூறிவிட்டது (தி.ச. 230). அவை நிறுவப்பட்ட பணிகள் (instituted ministries) என்றும் அசாதாரணப் பணிகள் (extra-ordinary ministries) என்றும் உள்ளன. முதல் வகைப்பணிகள் வழக்கமாக அவற்றிற்கென உள்ள திருச்சடங்குகளை நிறைவேற்றி அளிக்கப்படும். இரண்டாம் வகைப் பணிகளைப் பொதுநிலையினர் திருமேய்ப்பர்களின் நியமனத்தால் பெற்றுக்கொள்வர். இந்த இரண்டு வகைப் பணிகளையும் தற்காலிகமாகவோ அல்லது நிலையான வகையிலோ பொதுநிலையினருக்கு வழங்கலாம். தற்பொழுது நிலையான பணிகளாகத் திருப்பலியில் இறைவார்த்தை வாசகர் (lector), பீடத் துணைவர் (acolyte) ஆகிய இரு பணிகளும் உள்ளன. அவற்றைத் தற்காலிகமாக இருபால் பொதுநிலையினர் ஆற்றலாம் என்றாலும், நிலையான வகையில் ஆண்பால் பொதுநிலையினருக்கு மட்டும் அவற்றை வழங்கலாம் என்று சட்டம் 230, பிரிவு 1 வரையறுக்கின்றது. (ஏன் பெண்பால் பொதுநிலையினர் தவிர்க்கப்பட்டுள்ளனர் என்ற கேள்விக்கு திருச்சபையின் போற்றத் தக்க பாரம்பரியத்தில் ஆண்களுக்கு மட்டுமே அவை நிலையாக வழங்கப்பட்டு வந்துள்ளதாகக் காரணம் சொல்லப்படுகின்றது)

நிலையான பணிகளைத் தேவைக்கேற்ப நிறுவிக்கொள்ள ஆயர்கள் பேரவைகளுக்கு உரோமை திரு ஆட்சிப்பீடம் அனுமதி வழங்கியுள்ளது.

பொதுநிலையினர் தற்காலிகமாக ஆற்றக்கூடிய பணிகள் திருச்சபைச் சட்டத்தில் ஏராளமாக வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் கீழ்கண்டவை முக்கியமானவையாகும்:

#### திருச்சபை சட்டத்தால் பொதுநிலையினருக்கு வழங்கப்பட்டுள்ள தற்காலிகப் பணிகள்:

வழக்கமான திருப்பணியாளர் (ஆயர், குரு, திருத்தொண்டர்கள்) இல்லாதபொழுது ஆயர் அனுமதியுடன் திருமுழுக்கு அருட்சாதனத்தை வழங்குதல் (தி.ச. 861, பி 2).

போதுமான திருப்பட்டத்தினர் மற்றும் பீடத்துணைவர் கிடைக்காதபொழுது திருப்பலியில் இறைமக்களுக்குத் திரு உணவு வழங்குதல் (தி.ச.910 பி 2: 230 பி. 3) அதுபோல நோயுற்றோருக்கும், முதியோருக்கும் நற்கருணை எடுத்துச் சென்று வழங்குதல்:

தேவைப்படின் இறப்போருக்கு இறுதிப்பயண உணவை எடுத்துச் சென்று வழங்குதல் ( தி.ச. 911,பி.2 )

ஆயர்கள் பேரவையின் விதிகளுக்கு ஏற்பத் திருமறையின் அதிகாரப் பூர்வமான சாட்சியாக இருந்து திருமணத்தை நடத்தி வைத்தல். (தி.ச. 1112)

திருவழிபாட்டு ஒழுங்குகளின்படி மறை ஆட்சியாளர்களின் கணிப்பிற்கு உட்பட்டு அடக்கச் சடங்கு முறையை (வீட்டில், ஆலயத்தில், கல்லறையில்) நடத்துதல் (தி.ச. 1168)

திருவழிபாட்டு மன்றாட்டுக்களுக்குத் தலைமை ஏற்றல். (தி.ச 230 பி.3) செப வழிபாடுகளை நடத்துதல். (தி.ச. 1174, பி. 2)

மறை ஆயரின் விதிகளுக்குட்பட்டு திவ்விய நற்கருணை ஆராதனைக்குத் திரு அப்பத்தை ஸ்தாபகம் செய்தல். (தி.ச. 943) குழந்தைகள் திருமுழுக்கிற்கு முன் பெற்றோரையும், உறுதிப்பூசுதல், முதல்நன்மைக்கு முன் சிறுவர், சிறுமியரையும், திருமணத்திற்கு முன் இளைஞர்களையும் தயாரித்தல். (தி.ச. 843, பி.2: 890: 914:1064)

திருப்பலியில் நற்செய்திக்குப்பின் வழங்கப்படும் அருளுரையைத் தவிர்த்து மற்றச் சமயங்களில், ஆயர்கள் பேரவையின் விதிகளுக்கு ஏற்ப, இருபால் பொதுநிலையினரும் மறையுரை ஆற்றுதல். (தி.ச766)

மறைக்கல்வி போதித்தல் (தி.ச. 759: 774: 776)

நற்செய்திப் போதனைகளையும், மதிப்பீடுகளையும் பள்ளியில் ஆசிரியர்களும், இல்லத்தில் பெற்றோரும் வழங்குதல். (தி.ச. 226 பி.2: 774 பி.2)

தொடர்புச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஆகியவைகளைப் பயன்படுத்தி மீட்புச் செய்தியை அறிவித்தல். (தி.ச. 822 பி.3)

(அடுத்த இதழில் தொடரும்)

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

**மன்னா வாசகர்களே,**
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!



# மாணவர் மன்னா



## [மத்தேயு நற்செய்தி]
## விவிலிய வினாவிடைப்போட்டி - 02
## போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.10.2018 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்ர சாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
7. நான்கு நற்செய்தியாளர் விவிலிய போட்டிகளில் பங்குபெற்றும் மாணவர்கள் 'நற்செய்தியாளர் விருது' பெறும் எழுத்துப் பரீட்சைக்கு தகுதிபெறுவார்கள். மாதாந்த அஞ்சல் வழி போட்டிகளில் பங்குபெறுவோர் மட்டுமே இவ்விறுதி விருதுப் போட்டிக்கு தகுதி பெறுவர்.
9. "விவிலிய வினாவிடைப் போட்டி - 02", மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 116/3, சென் ஜோசப் வீதி, பெற்றா, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும். ●

## மத்தேயு அதிகாரங்கள்: 11-20 வரை
## வினா - விடைகள்

1. இயேசு தன்னை தயக்கமின்றி ஏற்றுக் கொள்வோர் எப்படிப்பட்டோராய் இருப்பார்கள் என்று கூறினார்?
2. ஓய்வு நாளும் மானிட மகனுக்கு எப்படிப்பட்டதாக இருக்கும் என்றார் இயேசு?
3. வழியோரம் விழுந்த விதைக்கு என்ன நடந்ததாக இயேசு கூறினார்?
4. திருமுழுக்கு யோவானின் உடலை அடக்கம் செய்தது யார்?
5. ஏழு அப்பங்களையும், மீன்களையும் பலுகச் செய்து மக்களுக்கு பகிர்ந்தளித்த போது சிறுவர்களும், பெண்களும் நீங்கலாக ஆண்களின் தொகை எவ்வளவாக இருந்தது?
6. இயேசு தம் சீடரிடம் தாம் யார் என்ற வாய்ப் பரீட்சையை எந்த இடத்தில் நின்று வைத்தார்?
7. இயேசு பேதுருவையும், யாக்கோப்பையும் யோவானையும் உயிர்த்த ஓர் மலையில் தோற்றம் மாறிய போது அவர்களுக்கு முன்னர் மலையில் தோன்றியவர்கள் யார்?
8. சீடர்கள் இயேசுவிடம் விண்ணரசில் மிகப் பெரியவர் யார் என்று கேட்ட கேள்விகளுக்கு இயேசு கூறிய பதில் யாது?
9. இயேசு, கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியோடு ஒன்றித்திருப்பான். இருவரும் எப்படிப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்றார்?
10. திராட்சை தோட்ட வேலைக்கு வந்த பணியாளர்களில் முதலில் வந்த பணியாளர்களுக்கு நிலக்கிழார் கொடுத்த ஊதியம் எவ்வளவு? ●

## அம்மா...!

**- ம. திருசாளினி, வேப்பங்குளம், வவுனியா -**

பாரினிலே ஈன்றது முதல் - உன்
இரத்தத்தையே பாலாக ஊட்டி,
பாசத்தாலேயே அரவணைத்த - என்தாயே!

அன்பாலே அறிவூட்டி,
ஒழுக்கங்கள் கற்பித்து, - நல்ல
மனிதராக திகழ வைத்தவளும் நீயே.!



எம் தேவை தனை உணர்ந்து,
உரிய நேரத்தில் நிறைவேற்றி,
எமக்கு சுகங்களை தந்தவளும் நீயே!

தடைகள் நிறைந்த வாழ்விலே,
தடம் மாறி செல்லாதிருக்க,
வழி நடத்தியவளும் நீயே!



இவ் வையகத்தில் என்
இலட்சிய வெற்றியை அடைய
முதற் காரணமாக இருப்பவளும் - நீயே!

நீ அளித்த அளப் பெரும் சேவைக்கு
என்ன கைம்மாறு அம்மா! - அடுத்த
பிறவி எடுப்பினும் என் தாயாக
நீயே வேண்டும் - அம்மா.! ●

## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 01 இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ற. கிஷானி,
இல: 47/06 தாஸ்கோட்டம்,
நெளுக்குளம், வவுனியா

**இரண்டாம் பரிசு:**
பி. விதுஷா,
இல:18/4, பள்ளிமுனை
கிழக்கு, மன்னார்

**மூன்றாம் பரிசு:**
அ. ஆன் சோபிக்கா,
வஞ்சியன்குளம்,
வங்காலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 60 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 50 பேர்.

## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 01இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. வ. வின்சலஸ் ஜோசப், பனங்கட்டுகொட்டு மேற்கு, மன்னார்.
02. ஞா. ஜேம்ஸ் வலன்ரைன், குழந்தையேசுபுரம், மன்னார்.
03. மேரி நிஷாலினி, இல: 380, பள்ளிமுனை மேற்கு, மன்னார்.
04. கு. ஆன்சினேகா, காத்தான்குளம், நானாட்டான்.
05. அ. ஆன் சோபிக்கா, வஞ்சியன்குளம், வங்காலை.
06. அன்ரனி ஷெரோன், வஞ்சியன்குளம், வங்காலை.
07. ச. மேரி டிஷா, வஞ்சியன்குளம், வங்காலை.
08. செ. நெகோமியா, உயிலங்குளம்.
09. சு. டில்சிக்கா, யோசவாஸ்நகர், தோட்டவெளி.
10. அமலதாசன் அனுசியா, பள்ளக்கமம், முருங்கன்.
11. S. டெல்சினா, கட்டைக்காடு, நானாட்டான்.
12. பி. சகாயமேரி றோச், இல: 36, பள்ளிமுனை மேற்கு.
13. சை. யேசுதாசன், கட்டைக்காடு, நானாட்டான்.
14. S. டெல்சினா, காத்தான்குளம், நானாட்டான்.
15. ய. டிலக்சன், சுண்டிக்குளி, முருங்கன்.
16. வி. கொட்வின் டெல்சியா, சவேரியார்புரம், சிலாவத்துறை.
17. யோ. கியோமர் யோய்னஸ், பள்ளக்கமம், முருங்கன்.
18. S. டயான், வாழ்க்கைப்பெற்றான்கண்டல், அளவக்கை.
19. யு. யூலியற் நிசோபனா, அளவக்கை, முருங்கன்.
20. செ. ஆரோக்கியதாசன், பள்ளிமுனை மேற்கு, மன்னார்.

# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்
## மனித வரலாற்றில் நாகரிகத்தின் தோற்றப்பாடும், கிறிஸ்தவ நாகரீகமும்.
### – அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி –

கடவுள் தன் சாயலாகவும், பாவனையாகவும் மனிதனைப் படைத்தார். (தொ.நூ 1:27). கடவுள் அவர்களை ஆசீர்வதித்து, பலுகிப்பெருகி பூமியை நிரப்புமாறு அருளினார். (தொ.நூல் 1:28). ஆனால் மனிதன் கீழ்படியாமையால் கடவுள் அருளிய அருட்கொடையை இழந்து தவித்தான். மனிதன் தனக்குரியவற்றை தன் உழைப்பின் பயனாகவே பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கடவுள் மனிதனை பணித்தார். உணவே மனிதனின் முக்கிய அடிப்படைப் பிரச்சினையாக காணப்பட்டதால் அதற்கேற்றவாறு மனிதன் தன்வாழ்வியலை அமைத்துக் கொண்டான்.

மனித வரலாறுகளின் அடிப்படையில் 40000 ஆண்டுகளுக்கு முன்னரே மனிதன் ஒருவரோடு, ஒருவர் கூடி வாழும் முறை தோன்றினாலும், 8000 ஆண்டுகளுக்கு பின்னரே நாகரிகம் குறித்து பேசப்படுகின்றது. ஆற்றங்கரையோரமாக மக்கள் குடிசையமைத்து வாழ்ந்தமையால் கிராமச் சூழல் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. நைல்நதி, யூப்பிரடீஸ், தைக்கிறீஸ் ஆற்றுவெளிகளில் கி.மு 5000 ஆண்டளவில் எகிப்து, மொசப்பத்தேமியா, பபிலோனியா நாகரிகங்களும், சிந்துநதி பகுதிகளில் கி.மு 3000 ஆண்டுகளில் சிந்து வெளிநாகரிகமும் தோற்றம் பெற்றதாக கூறப்பட்டுள்ளது. ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலே விவசாயம், தச்சுத்தொழில் மற்றும் இரும்புத் தொழில் போன்றன தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்துள்ளன. நகர மக்களின் வாழ்வியலைக் குறிக்கும் 'நாகரிகம்' எனும் பதம் நகரத்தில் வளர்ச்சி பெற்ற விவசாயம், பல்தொழில் துறைகள், வர்த்தகதொடர்புகள், நிர்வாகசீர்முறைகள், எண்கணித தோற்றம், வானியல் அறிவு போன்ற விடயங்களை உள்ளடக்கியதாகும். இவ்வாறு நாகரிகம் நகரத்தோடு இணைந்து வாழ்வின் எல்லாக்கூறுகளையும் உள்ளடக்கிய நிலையில் வளர்ச்சி பெற்றதெனலாம்.

### நாகரிகம்

வாழ்வின் எல்லாக் கூறுகளையும், அம்சங்களையும், விடயங்களையும் உள்ளடக்கி, மனித சமூகத்தின் முழுமையான வளர்ச்சியை நோக்கிய ஒரு வாழ்வியல் அமைப்பே நாகரிகமாகும். நாகரிகம் நகரத்தோடு இணைந்ததொன்றாகும். நாகரிகம் காலத்துக்கு ஏற்ப மாறிவருகின்றது. அன்றைய அடிமைமுறைகளை அநாகரிகமாகக் கருதி, இன்று சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம், சமபங்கேற்பு, சுயநிர்ணயம் என்பனவே நாகரிகத்தின் இயல்புகளாகக் கருதப்படுகின்றன. இன்றும் போர், இயற்கையழிப்பு, சுரண்டல்கள் அநாகரிகச் செயலாகக் கருதப்படுகின்றன. நாகரிகம் பின்வரும் கூறுகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

- நகர அமைப்பை தேவைக்கும், கலையுணர்வுக்கும் பொருந்த அமைத்தல்.
- பிறரோடு நன்முறையில் பழகுதல்.
- உள்ளத்தோடு, உடலையும் தூய்மையாக வைத்திருத்தல்.
- சுகாதார பழக்கவழக்கங்களை கையாளுதல்.
- போக்குவரத்து ஊர்திகள், பொதுவாழ்வுக்கான நிறுவனங்களை அமைத்து செயற்படுத்தல்.
- பொருளாதார, அரசியில் கட்டமைப்பும், நீதி நிர்வாக சீரமைப்பும்

### பண்பாடு

ஒரு சமூகத்தின் நடை, உடை, பாவனை பழக்கவழக்கங்கள், ஒழுக்கம், மதிப்பீடு போன்ற வரையறை செய்யப்பட்ட அம்சங்களைமட்டும் கவனத்திற் கொள்வது பண்பாடாகும். ஒரு மக்கள் இனத்தின் தனித்துவமான வாழ்வியலை அவர்களுக்குரிய நிலத்துடன் இணைத்து உருக்கொடுத்து, மனிதனை தனி ஆளாகவும், குழுமமாகவும் சிந்தனை, சொல், செயல் வடிவங்களிற் கட்டுப்படுத்தக் கூடிய எல்லா மதிப்பீடுகள், கருத்தியல், நம்பிக்கைகள் என்பவற்றின் வெளிப்பாடே பண்பாடு எனப்படும். மேலும் சமயநெறி, தத்துவ நோக்கு, அழகியலுணர்வு, குறிக்கோள்கள் என்பனவும் பண்பாட்டின் பரிணாமங்களாகத் தோன்றுகின்றன. மனிதன் தன் உடல், உள இயல்புகளை, திறமைகளைப் பண்படுத்தி, வளப்படுத்தி, வளர்ச்சியுறச் செய்ய எடுக்கும் அனைத்து முயற்சிகளும் பண்பாடு என்கிறது 2ஆம் வத்திக்கான் சங்கம். மேலும் மனிதன் தன் அறிவு, உழைப்பு என்பவற்றால் தன் அனுபங்களை பிறரின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் எடுக்கும் முயற்சியே பண்பாடு என்றும் சங்கம் விளக்கமளிக்கின்றது. இன்று சமூகத்தின் பார்வையில் நாகரிகமும், பண்பாடும் பெரும்பாலும் ஒரேநோக்கிலே எண்ணப்படுகின்றது.

### கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றம்

இயேசு நசரேத்தூரில் ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்து, யூதக் கலாசராத்தில் வளர்ந்து, யூத வரலாற்றை, யூதப்பள்ளியிலேயே கற்றுத்தேர்ந்து, அச்சூழமைவில் சிந்திக்கவும், வாழவும் பயிற்றப்பட்டார். ஞானத்திலும், அறிவிலும் வளர்ந்து, தாய் மரியா கொண்டிருந்த இறைநம்பிக்கையிலிருந்து இறைவன் இரக்கமும், பரிவும், நேர்மையும், நீதியும் உள்ளவரென தன் வாழ்வில் வெளிப்படுத்தினார். யோசேப்பிடம் யூதச் சட்டங்களைக் கற்று, அச்சட்டங்களுக்குள் மூழ்கிவிடாமல், முழுமனித நலனைப் பேணிக்காத்திட உண்மைக்கும், நேர்மைக்கும் முதலிடம் கொடுத்தார். திருமுழுக்கின் மூலமாக அவர்பெற்ற இறையனுபவத்துடன் இறைவனோடு தந்தைமகன் உறவில் வளர்ந்து, இறைத்திட்டத்தை அறிந்து கொண்டார். இறையாட்சியை அனைவருக்கும் போதித்து, அதற்காகவே வாழ்ந்து, மரணித்து, மீண்டும் உயிர் பெற்றார்.

ஒரு புதிய நாகரிகம் தோன்றுவதற்கு இயேசுவின் வாழ்வும், போதனைகளும், படிப்பினைகளும், செயற்பாடுகளுமே அடிப்படையாக அமைந்துள்ளன. இயேசுவின் படிப்பினைகளை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்ற நாகரிகமே கிறிஸ்தவ நாகரிகமாகும். யூத நாகரிகம், கிரேக்க நாகரிகம் மற்றும் உரோமை நாகரிகம் என்பன கிறிஸ்தவ நாகரிகத்தில் நேரடியாக செல்வாக்குச் செலுத்தியுள்ளன. யூத நாகரிகம் நேரடியாக மொசப்பத்தேமிய மற்றும் எகிப்திய நாகரிகங்களின் தாக்கத்திற்கு உட்பட்டவையாகும். அத்துடன் சுமேரிய, கானானேய, அசீரிய, பபிலோனிய பண்பாடுகளின் சிறப்பு அம்சங்களுடன் வளாச்சி பெற்ற ஓர் நாகரிகமாகும். சவுல், தாவீது, சாலமோன் போன்ற இஸ்ராயேல் முடிமன்னர்களின் ஆட்சிக்காலத்திலே பாலஸ்தீனப் பேரரசில் யூத நாகரிகம் உருவாக்கம் பெற்றுள்ளது.

யூத நாகரிகத்தின் நெறி முறைகளுக்கு உட்பட்டவராயிருந்தாலும் இயேசு அதன் நெறிமுறைகளை புதிய கண்ணோட்டத்தில் விளக்கி வாழ்ந்தும் காட்டியுள்ளார். யூத நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கிரேக்க, உரோமை நாகரிகத்தின் பண்புகளையும் வாழ்க்கையில் கைக்கொண்டு மக்களும் வாழக் கற்றுக்கொடுத்தார்.

இவையே கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படையாகும். கிறிஸ்தவ நாகரிகமென்பது கிறிஸ்துவின் வாழ்கையிலும், போதனையிலும் மிளிர்ந்த நீதி, உண்மை, அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், தாழ்ச்சி, எளிமை, இரக்கம், மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு போன்ற பண்புகளை தமதாக்கி வாழ்வதாகும்.

### இன்றைய சமூகத்தினர் பார்வையில் நாகரிகமும், பண்பாடும்.

இன்று சமூகத்தின் பார்வையில் நாகரிகமும் பண்பாடும் பெரும்பாலும் ஒரேநோக்கிலே எண்ணப்படுகின்றது. இக்காலம் நாகரிகத்தில் அதிக வளர்ச்சி கண்டுள்ளது என பலராலும் பேசப்படுகின்றது.

➡ 15



# இளையோர் மன்னா



## இளையோரின் தாராள மனதை வெளிப்படுத்தும் திருப்பயணம்

70,000த்திற்கும் மேற்பட்ட இளையோர் அடங்கிய அமைதிப்படை ஒன்று உரோம் நகர் நோக்கி வருகின்றது - இத்தாலிய ஆயர் பேரவையின் தலைவர் திருஅவைக்குத் துணையாக இருக்கும் அமைதிப்படை ஒன்று உரோம் நகர் நோக்கி நடைப்பயணமாக வந்து கொண்டிருக்கின்றது என்று இத்தாலிய ஆயர் பேரவையின் தலைவர், கர்தினால் குவால்தியேரோ பஸ்ஸெத்தி (Gualtiero Bassetti) அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

16 வயது முதல் 30 வயது வரை உள்ள 70,000த்திற்கும் அதிகமான இளையோர் இத்தாலியின் அனைத்து மறைமாவட்டங்களிலிருந்தும் உரோம் நகர் நோக்கி நடைப்பயணம் மேற்கொண்டுள்ளனர் என்றும், 120 ஆயர்கள், இளையோருடன் இத்திருப்பயணத்தில் இணைந்துள்ளனர் என்றும் கர்தினால் பஸ்ஸெத்தி அவர்கள் கூறினார். ''இளையோர், விசுவாசம் மற்றும் அழைத்தலை தெளிந்து தேர்தல்'' என்ற கருத்தை மையப்படுத்தி, இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றத்திற்கு ஒரு தயாரிப்பாக, இளையோர், திருத்தந்தையைச் சந்தித்து தங்கள் எண்ணங்களையும், கேள்விகளையும் அவருடன் பகிர்ந்துகொள்ள வருகின்றனர் என்று கர்தினால் பஸ்ஸெத்தி அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.



கோடைக்காலத்தின் வெப்பத்தையும் பொருட்படுத்தாமல், 70,000த்திற்கும் மேற்பட்ட இளையோர் மேற்கொண்டுள்ள இத் திருப்பயணம், அவர்களது தாராள மனதையும், திருஅவை மீது கொண்டுள்ள பற்றையும் வெளிப்படுத்துகின்றது என்று கர்தினால் பஸ்ஸெத்தி அவர்கள் மகிழ்வுடன் குறிப்பிட்டார். ●

## இளையோரெங்கே?

- சுரேக்கா -

இளைஞன் இயேசு
நடந்த பாதச்சுவடுகளைப்
புனிதமாய் பின்பற்றும்
எம் இளையோரெங்கே?

அன்பைக் கொடுத்து,
மன்னிப்பை மனித நேயமாக்கி
வாழ்ந்து காட்டிய யேசுவழி
வாழும் இளையோரெங்கே?

பொய்மையும், பொறாமையும்,
களவும், துவேஷமும்,
கற்புமிழந்து தொலைந்து போன
எம் இளையோரின்
எதிர்காலம் எங்கே?

கனவுகளைக் கலைத்தே
கண்டபடி சுற்றாதீர்.
மரியாள் மாசற்ற கன்னி.
இயேசுவே உலகம் உயர் இறைவன்
அவர் வழி நடக்க,
உம்மை மாற்ற வரம் கேட்டே
அந்த இறையிடம் தொழுதிடுவீர் ●



## பெருஜியா, உரோமையில் இளையோர் நிகழ்வுகள்

இம்மாதம் நடைபெற்ற இளையோர் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றத்திற்கு, இத்தாலிய இளையோரின் அண்மைத் தயாரிப்புக்கள்.

'இயேசு வெளிப்படுத்தும் கடவுளின் திருமுகம் அன்பு நிறைந்தது' என்ற சொற்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்தியாக வெளியிடப்பட்டன.

மேலும், ''இளையோர் விசுவாசம் மற்றும் அழைத்தலை தெளிந்து தேர்தல்'' என்ற தலைப்பில் இம்மாதம் 3ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றத்திற்குத் தயாரிப்பாக, இத்தாலிய இளையோர் இம்மாதம் 8ஆம் திகதி முதல் இரு பெரிய நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

இம்மாதம் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை பெருஜியாவிலும், 11ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதிகளில் உரோம் நகரிலும் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.



இந்த இளையோர் நிகழ்வுகளில் இத்தாலியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், அருங்கொடை இயக்கத்திலிருந்தும் இளையோர் கலந்துகொண்டர்.

➡ 14

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!



மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல், உடனடியாக உங்கள் சந்தாவைச் செலுத்தி, எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும். மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். நன்றி!

- மன்னா நிர்வாகம்.

# இளைஞர் உலகம்

புத்தாண்டு பொலிகின்ற இவ்வாண்டு இளைஞர் ஆண்டு. ஒருவன் எப்பொழுதும் இளைஞனாய் இருக்க முடியாது. ஆனால் எப்பொழுதும் மனிதனாய் இருக்க முடியும். இன்றைய உலகில் இளமைக்கு மௌசு அதிகம். மூன்று பிரிவாக உலகம் பிரிக்கின்றது. 'அவன் கிடக்கிறான் பொடிப்பயல்' எனச் சிறுவனையும், 'இளங்காளை துள்ளுது, பச்சை ரத்தம் ஓடுது' என இளைஞரையும், 'அது கிடக்கிறது கிழம்' என வயதானவரையும் பேசுகின்றது. இனிக்கும் இளமை பலருக்கு மணக்கும்.

வாழ்வின் வசந்தப் பருவம். வளர்ச்சியின் நிறைவுப் பருவம் வானளாவிய கொள்கைகளும், வாடாத குறிக்கோள்களும், வலுத் தேடி வாழும் பருவம். உணர்ச்சிகள் உச்சத்தை அடையும் பருவம். உணர்வுகள் திசை திரும்பும் பருவம். சாதனைகளைக் குவிக்க வேண்டுமென்று சதா திட்டம் தீட்டும் பருவம்.

இப்பருவத்தில் காய் கனிகின்றது, இளமை மலர்கின்றது. கனவு காரியமாகின்றது. உரிமை தாண்டவமாகின்றது. பகுத்தறிவை குருடாக்கி, மனச்சான்றை மழுங்கடித்து, சித்தத்தை மறுக்க வைத்து, தம்மையே விலங்காக்கிக் கொள்ளும் பப்பு கூட்டத்து இளைஞர்களும் நம் மத்தியில் உள்ளனர்! வம்பை வளர்க்காதே, வாயைக் கிளறாதே, ஆத்திரம் மூட்டாதே, அடக்க நினைக்காதே என்று எழுச்சியுடன் பேசும் இன்னொரு சாரார் இளைஞரும் உண்டு.

### இளைஞர்கள் என்றால் யார்?

நண்பர்கள், கூட்டம், காபி, சிகரெட், சினிமா, சீட்டாடுதல், கவனமின்மை இவைகளையே பொழுதுபோக்காக கொண்டாடுபவர்கள் இளைஞர்கள் என்று கூற வேண்டுமா? நல்லவர்களும் இல்லையா? ஆற்றல், ஊக்கம், ஒற்றுமை, உழைப்பு இவை நான்கும் எந்த வினையிலும் வெற்றி கிட்டாதா என்ன? இவை அவரவர் உள்ளத்தை தவிர வேறு எங்கும் கிடைக்காத அருஞ்செல்வங்கள். எழுச்சியும் ஒருவகை துடிப்புணர்ச்சியும், அஞ்சா நெஞ்சமும், ஆற்றலும், வீர உணர்வும் கொண்டவனே இளைஞன். இளமை மானிட வாழ்விலே மிகவும் முக்கிய பருவம். அதிக பொறுப்புக்கள் நிறைந்த பருவம். சிக்கலான போராட்டம் நிறைந்தது. அதே சமயத்தில் அது மிகவும் இனிமையானது, ஆற்றல் கொண்டது. எதையும் முடிக்கத் துடிப்பதும், அனைவரையும் தன் வார்த்தைக்கு கட்டுப்படுத்த முயலுவதும் இப்பருவத்தின் தனிப் பண்புகள்.

இளமை என்பது ஒரு காட்டாறு. இளமை என்பது ஒரு நீர் வீழ்ச்சி. இளமை என்பது ஒரு காட்டுத் தீ என அறிஞர் கூறுகிறார்.



ஹிப்பியிசம் : இளமை மிடுக்கு, இனிமை இருக்கு, எதையும் செய்ய உரிமை இருக்கு என்று இளமை வீர சவால் விடுக்கின்றது. இளைஞர்கள் உரையாடலில், உடுப்பதில், உல்லாசத்தில் புது மெருகு கொள்கின்றது. உரையாடலில் தனிப்பாணி. உடுப்பில் தனிப்பாணி. நடையில் தனிப்பாணி. அலங்கரிப்பில் தனிப்பாணி. இது இளைஞருக்கென்றே ஒரு பாணி.

ஒரு ஹிந்திப்பட நடிகர், ஒரு படத்தில் நடிக்கும் போது தான் அணிந்து கொள்ளும் சட்டை கிழிந்திருந்ததால் அவர் உடனே ஒட்டுப்போட்டு தைத்து போட்டுக்கொண்டு நடித்தாராம். அந்தத் திரைப்படத்தைப் பார்த்த இளைஞர்களும் இது தான் நாகரீகம் என்று நினைத்துப் புது சட்டையை வெட்டி, ஒட்டுப்போட்டு அணிந்திருக்க, அந்த ஹிந்தி நடிகர், இளைஞர்கள் 'போல செய்பவர்கள்' (Imitations) என்று கூறி சிரித்தாராம்.

ஒரு இளைஞன் தலையில் விக் வைத்திருந்தானாம். அவன் பல நாள் தலையில் தண்ணீர் ஊற்றிக் குளிப்பதில்லையாம். அவன் பெற்றோர் அனைவரும் சேர்த்துப் பிடித்து தலையில் தண்ணீர் ஊற்றும் போது அது குருவி தங்கும் கூடாக இருந்ததுவாம். யூதரின் நாகரீகம் வந்துவிட்டது போலும். ஒரு பெண், இன்னொரு பெண் அழகாய் நடப்பதைப் பார்த்து, தானும் அவ்வாறு நடந்தால் அழகாயிருக்கும் என நினைத்து, நடக்க, முன்னழகும், பின்னழகும் கெட்டு கால் சுளுக்கிக் கொண்டதாம்.

மேலை நாட்டு சரக்குகள், போதைத் தரும் மாத்திரைகள், ஊசிகள், மது இவைகளை இளைஞர்கள் உபயோகித்து, கனவு உலகில் சஞ்சரித்து, உள்ளத்தைக் கெடுக்கும் பாதாளச் சாக்கடைகளாகி ஆன்மாவை அசுத்தமாக்கி, புறம் போக்கு நிலமாய் ஆகிக் கொள்கின்றனர். பெருமிதப்போக்கு, கௌரவம், ஊதாரித்தன செலவு இவைகளில் மிகுந்த செல்வாக்குக் கொண்டு வாழ்கிறார்கள் இன்றைய சில இளைஞர்கள். நாகரீகம் சூழ்நிலைக்கும், காலத்திற்கும் ஏற்ப மாறுபடுகின்றது. முற் காலத்தில் தலையில் கொண்டை, காதில் கடுக்கன் நாகரீகமென கருதப்பட்டது. இடைக்காலத்தில் ''கிராப்'' என்னும் பெயரில் குறைமுடி நாகரீகமாகியது இப்போது மீண்டும் நீண்ட முடிவைப்பது (Fashion) நாகரீகமாக மாறிவிட்டது பார்த்தீர்களா! நாகரீகத்தின் நிலையில்லாத் தன்மையில் வெளி அளவில் மாற்றம் இருக்கும். ஆனால் உள்ளத்திலே மாற்றமில்லை. என்றோ ஒருநாள் கோவில் நினைவு வர கோவிலுக்கு வெளியே காவல் தெய்வமாய் நின்று, அரைத் திருப்பலியோடு செல்லும் இளவட்டங்கள் எத்தனை பேர்? அரைத் திருப்பலியிலும் நண்பருடன் உரையாடி, சிரித்து, கிண்டல் பண்ணி செல்கின்றனர். பொறுப்புள்ள, உண்மையுள்ள, பக்தியுள்ள இளைஞனாய் வாழ்ந்தால் திருச்சபை எத்துணைப் பேருவகை கொள்ளும்.

### இளைஞர் உள்ளம் திருந்துமா?

கற்ற இளைஞர்கள், மாணவர்கள் திருந்தவில்லை, திருந்தவில்லை என்று குறை கூறும் பெரியவர்கள் அனைவரும் எண்ணத்தில் கொள்ள வேண்டியது இதுதான். நல்லொழுக்கமும், பயன்பாடும் உடைய பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும் மட்டும் இளைஞர் உலகத்தைத் திருத்திவிட முடியாது. இளைஞர்களின் அன்றாட வாழ்க்கை முழுவதையுமே ஆக்கிரமித்துக் கொள்ளும் செல்வமும், செல்வாக்கும் உள்ளவர்கள், சிறந்த மேடைப் பேச்சாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், கலைஞர்கள், அரசியல் பதவியில் உள்ளவர்கள் ஆகிய இந்த ஐந்து திறத்தாரும் எப்போது நல்லொழுக்கமும், பயன்பாடும் உடையவர்களாக மாறி நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறார்களோ அப்போதுதான் இளைஞர் உலகம் திருந்தும் என்னும் பெரும் உண்மையை அவர்கள் உணர வேண்டும் அல்லது அவர்களுக்கு உணர்த்தி திருத்த வேண்டும். ஏன் என்றால் இளைஞர்கள் திருந்தவில்லை, காலம் கெட்டுவிட்டது, காலம் மாறிப்போச்சு எனக் குறை கூறுபவர்களில் தொண்ணூறு விழுக்காட்டினர் மேற்காட்டிய ஐந்து வகையினைச் சேர்ந்தவராவர். ''நினைத்து வாழ ஒன்று, மறந்து வாழ ஒன்று.'' ஊட்டமிக்க இரத்தம், உணர்ச்சி மிகுந்த இரத்தம், இளமைத்துடிப்பு, நினைத்ததை முடிப்பவன். அதனால் தான் மனம் வீறுகொண்டு எழுகின்றது, அலைகின்றது, தாக்குகின்றது, கோபப்படுகின்றது. இத்தகைய நிலைமையைக் கட்டுப்பாட்டின் மூலம் மாற்றி விடலாம். இருமனம்: ஒன்று அன்புமனம். இதைத் தெய்வமனம் எனலாம். மற்றது ஆணவ மனம் - இது விலங்கு மனம். தெய்வமனம் சொல்வதைக் கேட்டு, நினைத்து வாழ வேண்டும்.

➡ 14

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# துன்புறும் கிறிஸ்தவர்களுக்கு உதவும் Knights of Columbus



2014ஆம் ஆண்டு முதல் ‘Knights of Columbus அமைப்பினர், மத்திய கிழக்குப் பகுதி கிறிஸ்தவர்களுக்கு, 2 கோடி டாலர்கள் நிதி உதவி வழங்கியுள்ளனர். மத்திய கிழக்குப் பகுதிகளில் துன்புறும் கிறிஸ்தவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில்

Knights of Columbus அமைப்பினர் இன்னும் கூடுதலான அர்ப்பண உணர்வுடன் செயலாற்றுகின்றனர்’ என்று இவ்வமைப்பின் தலைவர் கார்ல் ஆண்டர்சன் அவர்கள் கூறினார். ஓகஸ்ட் 7ஆம் திகதி முதல், 9ஆம் திகதி வரை அமெரிக்க ஐக்கிய நாட்டின் பால்டிமோர் நகரில் நடைபெறும் Knights of Columbus கூட்டத்தில் வழங்கிய தொடக்க உரையில் ஆண்டர்சன் அவர்கள் இவ்வாறு கூறினார். 2014ஆம் ஆண்டு முதல் Knights of Columbus அமைப்பினர், மத்திய கிழக்குப் பகுதி கிறிஸ்தவர்களுக்கு, குறிப்பாக சிரியா, ஈராக் நாட்டு கிறிஸ்தவர்களுக்கு, உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றில் 2 கோடி டாலர்கள் நிதி உதவி வழங்கியுள்ளனர் என்று ஆண்டர்சன் அவர்கள் தன் உரையில் சுட்டிக்காட்டினார். இயற்கைப் பேரிடர்களைச் சந்தித்த Puerto Rico, Texas மற்றும் Florida பகுதிவாழ் மக்களுக்கு Knights of Columbus அமைப்பினர் ஆற்றிய பணிகள் குறித்தும் தன் உரையில் குறிப்பிட்ட ஆண்டர்சன் அவர்கள், மொத்தத்தில், கடந்த ஆண்டு 18 கோடியே 50 இலட்சம் டாலர்கள் நிதி உதவிகள் உலகெங்கும் வழங்கப்பட்டுள்ளன என்று கூறினார்.மேலும், 2017ஆம் ஆண்டு, தென் கொரியாவில் Knights of Columbus அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், உலகெங்கும் இவ்வமைப்பினரின் எண்ணிக்கை, இதுவரை இல்லாத அளவு 1,967,585 என உயர்ந்திருப்பதாகவும் இவ்வமைப்பின் தலைவர் கார்ல் ஆண்டர்சன் அவர்கள் மகிழ்வுடன் எடுத்துரைத்தார்.●

# மரண தண்டனைக்கு மறுப்பளிக்கும் திருத்தந்தை

மனித வாழ்வு புனிதமானது. மரண தண்டனை நிறைவேற்றுதல், மனிதரின் மீறமுடியாத மாண்பின் மீது தாக்குதல் நடத்துவதாகும் என்பதால் இத்தண்டனை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மரண தண்டனை குறித்து விடுத்துள்ள அழைப்பை இலங்கை கத்தோலிக்கர் பின்பற்றவேண்டியது இன்றியமையாதது என்று இலங்கை மனித உரிமை ஆர்வலர் ஒருவர் கூறியுள்ளார். இலங்கையில் போதைப்பொருள் குற்றவாளிகளை மரண தண்டனை கைதிகள் வரிசையில் வைப்பதற்கு இலங்கை அரசுத்தலைவர் மைத்திரிபால சிறிசேனா அவர்களும், அவரது அமைச்சரவையும் தீர்மானித்திருப்பது குறித்த செய்தி கடந்த யூலையில் வெளியானபோது தான் அதிர்ச்சியடைந்ததாக அந்த ஆர்வலர் தெரிவித்தார். அந்த மனித உரிமை ஆர்வலர், “இலங்கை உள்நாட்டுப் போர்களையும், கிளர்ச்சிகளையும் எதிர்கொண்டிருந்தாலும், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மரண தண்டனை மீது தடை விதித்திருந்த 29 நாடுகளுள் இலங்கையும் ஒரு நாடாக இருந்தது” என்று யூக்கா செய்தியிடம் கூறினார்.

2017ஆம் ஆண்டில் மேலும் 106 நாடுகள் மரண தண்டனையை முற்றிலும் இரத்து செய்தன என்றும், அதே ஆண்டில் 23 நாடுகள் மரண தண்டனையை நிறைவேற்றின என்றும் அவர் தெரிவித்தார். மரண தண்டனையை நிறைவேற்றுவதன் வழியாக குற்றங்கள் குறைக்கப்பட்டன என்று இலங்கை உட்பட எந்த நாடும் கூற முடியாது என்றும் உரைத்த அந்த ஆர்வலர், மரண தண்டனை நிறைவேற்றுவது மனிதமற்றது மற்றும் நற்செய்திக்கு முரணானது என திருத்தந்தை கூறிய பின்னர், இலங்கை கத்தோலிக்கத் திருஅவை, திருத்தந்தையின் அறிவிப்பை ஆதரித்து வெளியிட்ட அறிக்கையையும் குறிப்பிட்டார்.●

# மறைக்கல்வியுரை இயலாமை என்பது ஒரு நாளும் சாபக்கேடல்ல

மாயத் தோற்றங்களிலும், சிலைகளிலும் நம்முடைய அடையாளத்தைக் கண்டுகொள்ளும் சோதனைக்கு உட்படுத்தப்படும் வாய்ப்புக்கள்.

உரோம் நகரம் அவ்வப்போது சிறு தூறல்களைக் கண்டுவந்தாலும், வெயிலின் தாக்கத்திற்கும் குறைவில்லை. திருத்தந்தையின் மறைக்கல்வியுரை வெயிலின் காரணமாக அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கிலேயே இடம்பெற்றது. இறைவன் வழங்கிய பத்துக் கட்டளைகள் குறித்து தன் மறைக்கல்வி உரைகளில் கருத்துக்களைப் பகிர்ந்துவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சிலை வழிபாடு குறித்து உரையாற்றினார்.

“அன்பு சகோதரர், சகோதரிகளே பத்துக் கட்டளைகள் குறித்த நம் மறைக்கல்வித் தொடரில் இன்று சிலை வழிபாடு குறித்து நோக்குவோம். கடவுளை விட்டு இஸ்ராயேல் மக்கள் விலகிச் சென்று, பொன்னால் கன்று ஒன்றைச் செய்து, அதனை வழிபட்ட நிகழ்வு பாலை நிலத்தில் இடம்பெற்றது. இந்த இடத்தில் பாலை நிலம் என்பது முக்கியத்துவம் நிறைந்த ஒன்று, ஏனெனில் பாலை நிலம் என்பது மனிதரின் இயலாமையையும், பலவீனத்தையும், நிலையற்ற தன்மையையும் உருவகமாக குறித்துக் காட்டுகின்றது. நம்முடைய பாலைவன அனுபவங்கள் தரும் அச்ச உணர்வுகளைத் தவிர்ப்பதற்காக நாம் எத்தனை முறைகள் சிலைகளுடனும், செயற்கையான பதில்களுடனும் நமக்கு இயன்ற ஒரு மதத்தை உருவாக்கியுள்ளோம்? மின்னும் தங்க நகைகளைக் கொண்டு, பொய் தெய்வத்தை உருவாக்க ஆரோனால் மக்கள் கேட்கப்பட்டதுபோல், நாமும் மாயத் தோற்றங்களிலும், சிலைகளிலும் நம்முடைய அடையாளத்தைக் கண்டுகொள்ளும் சோதனைக்கு உட்படுத்தப்படும் வாய்ப்புக்கள் உள்ளன. இருப்பினும் இயேசுவில் தன்னை வெளிப்படுத்திய இறைவன் பாலை நிலத்தின் சவால்களை எதிர்கொள்ளும் நம்பத்தக்க, உறுதியான வழியை நமக்கு எடுத்துரைக்கின்றார்.



நம் இதயங்களின் ஆழமான ஏக்கங்களுக்கு பதிலுரை வழங்கவும், அவைகளை நிறைவு செய்யவும் இறைவன் ஒருவராலேயே இயலும். இதனை சக்தி வாய்ந்த வகையில் சிலுவையிலிருந்து நமக்குக் கற்பிக்கின்றார் இயேசு. இந்தச் சிலுவையில்தான் இயேசு ஒரு பாடத்தைச் சொல்லித் தருகின்றார். அதாவது நம் இயலாமையை நாம் ஒருநாளும் ஒரு சாபக்கேடாக நோக்காமல், நம்முடைய பயணத்தில் நம்மை பலப்படுத்தும் வானகத்தந்தையை நேரடியாகச் சந்திக்கும் இடமாக நோக்க வேண்டும்.” இவ்வாறு தன் மறைக்கல்வி உரையை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவையில் சிறப்பிக்கப்படும் புனித எடித் ஸ்டெயினின் திருவிழா குறித்தும் எடுத்துரைத்தார். ஐரோப்பாவின் பாதுகாவலர்களுள் ஒருவரான புனித எடித் ஸ்டெய்ன் அவர்கள், ‘ஐரோப்பாவை பாதுகாப்பாராக’ என்ற ஆவலை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறுதியில் அனைவருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் அளித்தார்.●

# “அன்னை மரியே!” விசுவாச வாழ்வை எமக்குக் கற்றுத்தாரும்




அன்னை மரியா உடலோடும், ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதை விசுவாசப் பேருண்மையாக திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் அவர்கள், 1950ஆம் ஆண்டில் அறிவித்தார்.

மரியே! இரக்கத்தின் அன்னையே! எப்போதும் எம் அருகில் இருக்கும் நீர், விசுவாசத்தை எவ்வாறு வாழ்வது, அதை எவ்வாறு கொண்டிருப்பது என்பது பற்றி எமக்குக் கற்றுத்தாரும் என்ற சொற்களை மரியின் விண்ணேற்பு விழாவாகிய ஓகஸ்ட் 15 அன்று தன் டுவிட்டரில் வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தமஸ்கு நகர் புனித ஜான் அவர்களின் கூற்றுப்படி, கி.பி.451ஆம் ஆண்டில் நடைபெற்ற கால்செதோன் பொதுச்சங்கத்தில், உரோமைப் பேரரசர் மார்சியன் அவர்கள் இறைவனின் அன்னையாகிய மரியின் உடலைக் கேட்டார் எனவும், அதற்குப் பதிலளித்த எருசலேம் ஆயர் புனித ஜூவெனல் அவர்கள், எல்லாத் திருத்தூதர்களும் சூழ்ந்திருக்க, மரியா இறந்தார். பின்னர் ஒருநாள், புனித தோமையாரின் வேண்டுகோளின்பேரில் மரியாவின் கல்லறையைத்திறந்தனர். அப்போது கல்லறை காலியாக இருந்தது, இதனால் மரியாவின் உடல் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்ற முடிவுக்குத் திருத்தூதர்கள் வந்தனர் எனக் கூறினார் எனவும் தெரியவருகின்றது.

1950ஆம் ஆண்டு நவம்பர் முதல் தேதி திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் அவர்கள், Munificentissimus Deus எனப்படும் திருத்தூது கொள்கை விளக்கத்தின் வழியாக, அன்னை மரியின் விண்ணேற்பை, விசுவாசப் பேருண்மையாக அறிவித்தார். அன்னை மரியின் விண்ணேற்பு விழா, பல நாடுகளில் பெரிய விழாவாகவும், அரசு விடுமுறை நாளாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ●

# பிட்கப்பட்டு பகிரப்பட வேண்டியது கிறிஸ்தவ வாழ்வு



பிறருக்காக நொறுக்கப்பட நாம் முன்வரவேண்டும் என்பதே திருநற்கருணையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம்.

திருநற்கருணையைப் போல் நம் வாழ்வும் உடைக்கப்பட்டு, பிறருடன் பகிரப்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், ‘திருநற்கருணை எனும் கொடைக்கு நன்றி சொல்வோம். நம் வாழ்வும் உடைக்கப்பட்டு, நம் சகோதர, சகோதரிகளுக்கு பயனுடையதாக பகிரப்பட வேண்டும்” என அழைப்பு விடுத்துள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்திகள் 1651 என்பதும், அவரது செய்திகளை ஆங்கில மொழியில் பின்பற்றுவோரின் எண்ணிக்கை மட்டும் 1 கோடியே 77 இலட்சம் என்பதும் குறிப்பிடத்தக்கன.

12-12-12 என்ற சிறப்பான எண்கள் கொண்ட நாளன்று, அதாவது 2012ஆம் ஆண்டு, டிசம்பர் 12ஆம் திகதி, திருத்தந்தையாகப் பணியாற்றிய 16ஆம் பெனடிக்ட் அவர்களால் டுவிட்டர் செய்திகள் தொடக்கிவைக்கப்பட்டன.

‘பாலம் அமைப்பவர்” என்ற பொருள்படும் Pontifex என்ற இலத்தீன் சொல்லைத் தன் டுவிட்டர் முகவரியாகக் கொண்டு முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் டுவிட்டர் செய்திகளைத் தொடக்கினார்.

ஒவ்வொரு நாளும் @pontifex என்ற வலைத்தள முகவரியில் திருத்தந்தை வழங்கிவரும் டுவிட்டர் செய்திகள் இத்தாலியம், ஆங்கிலம், பிரெஞ்சு, இஸ்பானியம், போர்த்துகீசியம், ஜெர்மன், போலந்து, இலத்தீன் மற்றும் அரேபியம் ஆகிய ஒன்பது மொழிகளில் வெளியாகின்றன. ●

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள்.

தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்.

*- மன்னா நிர்வாகம் -*

# குடும்பம், பெற்றோர், பிள்ளை உறவு

- பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா, உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம் -

## தொடர் - 1



**கணவன் மனைவி உறவு**

கணவன், மனைவி, பிள்ளைகள் ஒரு வீட்டில் ஒன்றாய் வாழ்வதை வைத்துக்கொண்டு அதைக் குடும்பம் என்று கூறமுடியாது. கணவன், மனைவிக்கிடையில் ஆழமான அன்புறவு இருக்கவேண்டும். பிள்ளைகள் ஒருவர், ஒருவருக்கிடையில் நல்ல அன்புறவு இருக்கவேண்டும். உறவுகளின் கூட்டே குடும்பமாகும். இங்கே கணவன், மனைவிக்கிடையில் இருக்கும் அன்புறவு முக்கியம். பிள்ளைகள் திருமணத்தின் பின்பு பெற்றோரை விட்டுப் பிரிந்து விடுவர். ஆனால் கணவன், மனைவி உறவு இறக்கும் வரை நிலைக்க வேண்டியது. திருமணத்தின் முறியாத்தன்மையைக் கூற 'கணவன் தன் தாய், தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர்,'' (தொ.நூ 2:24).

கணவன், மனைவி இருவருக்கிடையில் உறவு வளர்ந்தால் அல்லது உறவு முறிவடைந்தால் அது பிள்ளைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும். கணவன், மனைவி இருவருக்கிடையிலும் நல்ல உறவு இருக்கும் குடும்பத்தில் வளரும் பிள்ளைக்கும், கணவன், மனைவி இருவருக்கிடையில் அடிக்கடி சண்டை ஏற்படும் குடும்பத்தில் வளரும் பிள்ளைக்குமிடையில் பல வேறுபாடுகள் இருப்பதை காணமுடிகின்றது.

இளம் பெண் ஒருவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர், பல்கலைக்கழகத்தில் விரிவுரை ஆற்றுபவர். திருமணம் முடித்த ஆண்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தனது வாழ்வை சீரழித்து வருகிறாள். அவளது குடும்ப வாழ்வைத் தேடிப்பார்க்கும்பொழுது அம்மா, அப்பா இருவருக்கிடையில் நல்ல உறவு இல்லை. இருவரும் ஒவ்வொருநாளும் சண்டை பிடிப்பர். அப்பா போகும் கொண்டாட்டங்களுக்கு அம்மா செல்வதில்லை. அம்மா செல்லும் கொண்டாட்டங்களுக்கு அப்பா செல்வதில்லை. இருவரும் நல்ல அரசாங்க உத்தியோகம் பார்க்கின்றனர். பிள்ளைக்கு திருமண வாழ்வில் ஒரு பயமும், வெறுப்பும் ஏற்படக்காரணம் அவளது பெற்றோர்களே. அவள் அன்பை எதிர்பார்க்கிறாள். ஆனால் அதைக் கொடுக்கத் தெரியாது, பொருத்தமற்ற தொடர்புகளை ஏற்படுத்தி அதிலிருந்து விடுபட முடியாமல் கஷ்டப்படுகிறாள்.

இந்த அனுபவத்தைப் போன்று, இன்று பல குடும்பங்களில் கணவன், மனைவிக்கு இடையில் உள்ள உறவு ஆழமில்லாது இருப்பதால் பிள்ளைகளது வாழ்வு சீரழிகின்றது. பிள்ளைகள் பிறந்தாலும், கணவன், மனைவி இருவருக்கும் இடையில் உள்ள உறவு ஆழமாக இருக்க வேண்டும். இன்று பல குடும்பங்களில் பிள்ளை பிறந்தபின் கணவன் மனைவி உறவு முன்பை விட குறைந்து, தாய் பிள்ளை உறவு அல்லது தந்தை பிள்ளை உறவு அதிகரிப்பதைக் காண்கின்றோம்.

இது பொதுவானது பிள்ளை பிறந்த பின்பும் கணவன் மனைவிக்கிடையில் உள்ள உறவு ஆழப்படுத்தப்பட வேண்டும் என நினைக்காது, ஏனோதானோ என கடமைகளை மட்டும் செய்து கொண்டு இருப்பது பிள்ளைகளின் ஆளுமையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.●

# கன்னித்தாயின் விண்ணேற்பு

- அ. ஜஸ்மின் ஷரோன், ஆவணம், நானாட்டான் -



விண்ணகம் என்பது ஒப்புயர்வற்ற நிலையான பேரின்பமாகும். இறையருளில் இறப்போர் தூய்மை பெறத்தேவையற்றோர். இயேசு, மரியா, வானதூதர்கள், புனிதர்கள் ஆகியோருடன் அவர்கள் ஒன்று சேர்க்கப்படுகின்றனர். இவ்வாறு அவர்கள் கடவுளை நேரில் காண்கின்ற விண்ணக திருச்சபையை உருவாக்குகின்றனர். அவர்கள் தூய்மைமிகு மூவொரு இறைவனோடு அன்புறவில் வாழ்ந்து, நமக்காக பரிந்து பேசுகின்றார்கள்.

வெறுமனே ஒருவர் விண்ணகம் செல்ல முடியாது. இறந்த பின் விண்ணகம் செல்ல தகுதி இருக்க வேண்டும். அந்த தகுதியை முழுமையாக பெற்றவள் அன்னை மரியாள். மாசற்ற கன்னி, ஆதிப்பாவக்கறை எதுவுமின்றி பாதுகாக்கப்பெற்று, தம் மண்ணுலக வாழ்வு நிறைவுற்றதும் ஆன்மாவோடும், உடலோடும் விண்ணுலக மாட்சிக்கு எடுத்து செல்லப்பட்டாள்.

தூய கன்னிமரியா ''திருமுழுக்கு பெற்றதாகவோ, இறந்து விண்ணேற்பு அடைந்ததாகவோ'' திருச்சபை எமக்கு போதிக்கவில்லை. ஏனெனில் அவளுக்கு திருமுழுக்குத் தேவையில்லை. பாவம் இன்றி பிறந்தவள். அவள் உயிரோடு விண்ணேற்படைந்தாள். அவள் ஆண்டவருக்குத் தன்னை முழுமையாக அடிமையாக்கி அவரின் வார்த்தைக்கேற்ப இறை திருவுளத்திற்கு முழுவதும் பணிந்து வாழ்ந்தவள். எனவே ஆண்டவரும் அவளின் தாழ்நிலையை கண்ணோக்கி, எல்லா தலைமுறையினருக்கும் பேறு பெற்றவள் என்று அவளை வாழ்த்தினர்.

ஆகவே, நாமும் நம்மை முற்றிலும் கடவுளுக்கு அடிமைகளாக கருதி, அவருடைய திட்டத்திற்கு எம்மை கையளிக்கும் போது நாம் விண்ணக வாழ்வை அடைய இறைவன் எமக்கு உதவி செய்வார்.

இறைமக்களால் போற்றப்படும் தூய அன்னையே! உமது நிகரற்ற புகழினை யாரால் எடுத்துரைக்க இயலும்! மனுவான இறைவன் உம் வழியாய் அன்றோ உலகிற்கு மீட்பளித்தார். என்றும் கன்னிமைக்கு பழுதின்றி கடவுளின் தாயாக நீர் விளங்குகின்றீர். விண்ணகத்தில் வீற்றிருக்கும் அன்னையே! நீர் எங்களின் அரசியாய் பரலோகத்தின் வாயிலாய் நிற்கின்றீர். எங்களின் மாதாவாய் இருக்கின்றீர். உம் திருமகனிடம் எங்களுக்காய் பரிந்து பேசும். அவரை அன்பு செய்து, சேவித்து வாழ வரமருளும். அவரோடும், உம்மோடும் விண்ணகத்தில் முடிவில்லா இன்பமடைய அருள்தாரும் தாயே! இவ்வுலகம் எமக்கு தற்காலிக இருப்பிடமாக இருப்பதால் விண்ணக வாழ்வுக்கான வாழ்வை நாம் இவ்வுலகில் வாழ்ந்து, விண்ணக வாழ்வில் பற்றுதல் கொள்ளவும், அதற்காக எம்மைத் தினமும் தயார் படுத்தி வாழவும் முயற்சி எடுப்போம். அதற்காக எம்மை அர்ப்பணிப்போம். பிறரும் விண்ணக வாழ்வினைப் பெற்றிட வழிவகுப்போம். ''விடாமுயற்சியோடு விசுவாச வாழ்வு வாழ்ந்து விண்ணகம் சென்றிட, மண்ணக மாந்தரிடம் மனச்சாட்சியோடு வாழ்வோம்!''●

# கிறிஸ்தவ வாழ்வு என்பது கிறிஸ்துவுக்குள் வாழ்வு

- கி. அருளப்பு விடத்தல்தீவு -

வாழ்க்கை என்பது இறைவன் படைத்த ஓவியம். வாழ்வது என்பது மனிதன் படைத்த காவியம்! இறைவன் ஓவியமாக சிருஸ்டித்த இந்த உலகில் கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கி எம் நாட்டுத் திருத்தூதரான புனித யோசவ்வாஸை முன்வைத்து எம் மறைமாவட்டத் திருச்சபை பயணிப்பது நாம் யாவரும் அறிந்ததே!

கிறீஸ்து ஒரு மதத்தை ஏற்படுத்த இந்த உலகிற்கு வந்தவரல்ல அவருடைய போதனைகள், உபதேசங்கள் ஒரு தனிப்பட்ட பிரிவினருக்கு மட்டும் உரியவை அல்ல. மனித சமூகம் அனைத்திற்கும் அது பொதுவானதே. அது யூதனென்றோ, கிரேக்கனென்றோ, அடிமையென்றோ, உரிமைக் குடிமகனென்றோ வேறுபாடு இல்லை. (கலாத் 3:28) இதைத் தெளிவுபடுத்துகின்றது. மனித குலம் தனக்கென்று சில அளவுகோல்களை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் உலகைப் படைக்க விரும்புகின்றது! கிறீஸ்தவ வாழ்வு என்பது ஒரு சராசரித்தனமான சாமானியவாழ்வு அல்ல. மாறாக பல சவால்களை உள்ளடக்கிய வாழ்வு அந்த வாழ்வு ஓடுகின்ற தண்ணீரோடு பயணம் செய்வதல்ல, அது எதிர்நீச்சல் போடும் வாழ்வு. தன்னைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் எப்படி எப்படியெல்லாம் வாழவேண்டும் என்பதற்கான ஓர் பட்டியலை இறைமகன் இயேசு தன்னுடைய நற்செய்தியிலே ஆங்காங்கே சுட்டிக்காட்டியுள்ளார். தன்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்நலம் துறந்து தன் சிலுவையைத் தூக்கிக் கொண்டு நாள்தோறும் என்னைப் பின்பற்றட்டும். (மாற்கு 8.34.35) இதை விபரிக்கின்றது. மனித மதிப்பீடுகளிற்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட, இறையரசின் மதிப்பீடுகளிற்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம். புதிய வாழ்வுக்கு நாம் பிறக்கவேண்டுமென்றால் எம்முடைய பழைய வாழ்வுக்கு நாம் மடிவது அவசியம். விதையின் இறப்பில்தான் செடி முளைக்கின்றது. மேகத்தின் சாவில்தான் மழை வருகின்றது. எம்முடைய சாவில்தான் புதுவாழ்வு பிறக்கின்றது. எம்முடைய பிறப்பின் பயனை நாம் இறப்பதற்குள் அடையத்தான் இந்தக்காலங்கள் நமக்குத் தரப்பட்டுள்ளன யேசுவை பின்பற்றிய மனிதர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று அவரது வார்த்தையால் ஈர்க்கப்பட்டவர்கள். இன்னொன்று குணம் பெறும் பொருட்டு அவரைத்தேடியவர்கள். வெறுமனே குணத்திற்காகவும், புதுமைக்காகவும் வந்தவர்களே இவர்கள். இவர்கள் அதைப்பெற்றவுடன் அவரைவிட்டு விலகிவிடுகின்றனர். ஆனால் யேசுவைப் பின்பற்றியவர்களோ தங்களுடைய சுயநல எதிர்பார்ப்புக்களை முன்வைக்காமல் யேசுவையே முன்வைத்து அவரைப் பின்பற்றியவர்கள்.

இவர்கள் தான் சீராக மாறமுடியும். வெறுமனே புதுமைகளை எதிர்நோக்கி இருந்தோமென்றால் நாம் வெறும் பக்தர்களே அதாவது பெயரளவில் கிறீஸ்தவர்கள். இயேசு பெயர் கிறீஸ்தவனை அல்ல. மாறாக மெய்கிறீஸ்தவனையே தேடுகிறார். இத்தகைய வாழ்வை எம்நாட்டு அப்போஸ்தலரான புனித யோசப்வாஸ் எம் மன்னார் மறைமாவட்டத்திலே வாழ்ந்து காட்டியுள்ளார். அவருடைய அடிச்சுவட்டை பின்பற்ற எம் மாவட்ட திருச்சபை அழைக்கப்படுகின்றது.

கிறீஸ்தவன் வேறு. கிறீஸ்தவம் வேறு. இயேசுவின் விழுமியங்களை, அவரது போதனைகளை, சொல்லாலும், செயலாலும் வெளிப்படுத்தி நிற்பவனே கிறீஸ்தவன். இதை எமக்கு வெளிப்படுத்திக் காட்டியவர் எம் நாட்டுப் புனிதர். அவரது போதனைகளை சொல்லாலும், செயலாலும் வெளிப்படுத்திக் காட்டி எம்முன்னோரைப் போல் நாம் பின்பற்ற முயற்சி எடுப்போம். 'உங்கள் கவலைகளை என்னிடம் விட்டுவிடுங்கள் உங்களுக்காக நான் கவலைப்படுகின்றேன்.'' என்கின்றார் ஆண்டவர் இயேசு.

கவலைப்படுவது கடவுளின் வேலை. அன்றைய பொழுதை அன்றே நினைத்து, நின்று நிலைத்து நிம்மதி பெறுவீர்! துன்பம் உற்று சுமையைச் சுமக்கும் அன்புடையோரே அனைவரும் வாரீர். எண்ணி எண்ணி ஏங்குவதாலே உங்கள் கையில் உள்ளது என்ன? அங்கத்தில் ஓர் அங்குலம் வளருமா? அதனைச் செய்ய உங்களால் இயலுமா? ''கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்''●

சிறுகதை..

# அன்பிற்கும் உண்டோ......

ம. டிஷாமினி,
தாஸ் கோட்டம், வவுனியா



ஒரு நல்ல குடும்பம் அது. அன்புள்ள மனைவி. அருமையான கணவன். ஆசைக்கொரு புதல்வன். ஆனந்தம் நடமாடும் வீடாக அது விளங்கியது. காலத்தின் வேகச் சுழற்சியினால் இல்லத் தலைவன் காலமாகினான். அன்புத்தாயின் அரவணைப்பில் வளர்பிறை போல அறிவிலும், அழகிலும், வயதிலும் வளர்ந்தான் ஜோன். கட்டுக்கடங்காத சிட்டுப்போல் வான வீதியில் சுற்றிப் பறக்கும் பருவ இளமை கொண்ட ஜோன் துடிப்பும், உணர்ச்சியும், துணிவும், உற்சாகமும் கொண்ட துள்ளிப் பாயும் வாலிபனானான். பல நண்பர்கள் அவன் வாழ்வில் குறுக்கிட்டனர்.

தாய்ப்பாசத்தை மறந்தான். காதல் நோயின் வசமானான். எரியும் சுடரை இனிய பழமெனக் கருதி, பாய்ந்து கருகும் விட்டிலைப் போல அழகி ஒருத்தியின் உருவைச் சுற்றி அலைந்தான். உணவை மறந்தான், உறக்கத்தை வெறுத்தான். தாயின் பாசத்தை தூக்கி எறிந்தான். பைத்தியம் பிடித்தவன் போலப் பெண் பின்னே அலைந்தான்.

பெற்ற தாயவள் மகனின் திடீர் மாற்றத்தைக் கண்டாள். பல புத்திமதிகளை எடுத்துரைத்தாள்.

➡ 15

# ஒரு தாயின் உள்ளமும் பங்குத்தந்தையின் பணிமாற்றமும்

ஒரு பங்குத்தந்தையின் பிரியாவிடை நிகழ்வின்போது, ஒரு தாய் தன் பங்குத்தந்தையின் இடமாற்றத்தைக் குறித்து அவரின் உள்ளத்தில் எழுந்த உணர்வலைகளை மன்னா பத்திரிகையில் இவ்வாறு பகிர்ந்துகொள்கிறார்.

எம் மறைமாவட்டத்தின் அனைத்து குருக்களுக்கான பணி மாற்றங்களின் நிமிர்த்தமாக ஒவ்வொரு குருவும் தம் பணித்தளத்தில் இருந்து பிரியாவிடை பெற்ற நாட்களை மறக்க முடியாது. அதன் அடிப்படையில், கடந்த ஆடி மாதம் நாமும் எம் பங்குத்தந்தையை பங்குமனையில் இருந்து ஆலயத்திற்குள் அழைத்து வந்தோம். எம் அன்னையின் முன்பாக மெழுகுவர்த்திகள் ஏற்றி, எல்லோரின் கண்களிலும் கண்ணீர் மழை பொழிய, நன்றிப் பாடல் பாடி, ஆலய மணிகள் ஒலிக்க, வாணவெடிகள் வெடிக்க, பங்கு மக்கள் புடைசூழ, நூற்றுக்கு மேற்பட்ட மோட்டார் வண்டிகள், ஆட்டோக்கள், தனியார் வாகன அணிகள் முன் செல்ல, பங்குமக்கள் ஆகிய நாம் பேருந்துகளில் பிரதான வீதிவழியாக எம் பங்குத்தந்தையை வழியனுப்பி வைத்த காட்சி இன்றும் என் உள்ளத்தை விட்டு நீங்காத நினைவாக இருக்கின்றது.●

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

# இளமைத்துடிப்பு எங்கள் இதயத்துடிப்பு

– பென்ஜமின் சோமநாதர், தெஹிவளை. –



இளைஞனே! – நீ
இன்றைய இலத்திரன் உலகத்து இளைஞன்.
இளமைத்துடிப்புடன்
உழைக்க வழி தேடி
உற்சாகமாய்ப்பறக்கும்
இளைஞன் நீ.
பரந்த மனத்துடன்
இப்பரந்த உலகில்
நாகரீகமாய் உழைக்கும் நல்ல இளைஞன் நீ.

அநேகரும் விரும்பும்
அரச வேலை வந்தால் அது ஆனந்தமே.
ஆனால் அது அனைவருக்கும்
அமையுமா..?
சிந்திப்பாய் இளைஞனே.

சோம்பல் இன்றி,
சுய தொழிலில் முயன்று,
சொந்தக்காலில் நின்று,
சுதந்திரமாய் உழைக்க,
சாதனைகள் படைக்க,
சிந்திப்பாய் இளைஞனே.


சிகரம் தொடவும் உன்னால் முடியும்.
முயற்சி செய்வாய் நீயே!
முற்போக்கு சிந்தனையுடன்,
முன்னேறிச்செல்வாய் இளைஞனே.

கல்வியறிவுடன், கணனியறிவுடன்,
உலக அறிவை உள்ளங்கையில்
உடையவன் நீயே.
ஊழலை வெறுத்திடுவாய்,
உலகம் வாழ்த்தும் உத்தமனாய் வாழ்ந்திடுவாய்.
உன் உழைப்பால்
வாழ்வில் உயர்ந்து,
உயர் நிலைக்கு வளர்ந்து,
உலகை வென்றிடுவாயே.
களைக்காமல், கவலைப்படாமல்,
வாழ்வாயே.

தூய மனத்துடன்,
தூய கரத்துடன்,
தூய கருத்துடன்,
இலஞ்சம் கொஞ்சமும் வாங்காமல்,
இவ்வுலகிற்கு நல் உதாரணமாய் வாழ்வாயே,
நாளைய இளைஞருக்கு
நல் வழி காட்டுவதும் நீயே.
நாளைய உலகின் கதாநாயகனே, வெறும்
கற்பனையில் காலம் கடத்தாது,
கல்வியில் முன்னேறி,
கலங்கரை விளக்கமாய் ஒளிவீசு - இளைஞனே!
உலகின் ஒளியாய், உத்தமனாய் வாழ்ந்து காட்டுவாயே.

நல்ல இளைஞனே!,
நீ, நவீன உலகில் வாழப் பிறந்தாய்,
நாளைய உலகை ஆளப்பிறந்தாய்.
வெற்றிக்கனியை எட்டிப்பிடிப்பாய் - அது நிச்சயமே.
வெற்றிக்களிப்பில் பவனிவருவாய் - அது நிதர்சனமே. ●

# கொஞ்சம் சிரிங்க



**அவள்** : என் மாமியாருக்கு வாய் கொஞ்சம் நீளம்.
**இவள்** : எப்படிச் சமாளிக்கிறாய்?
**அவள்** : எனக்குக் கை கொஞ்சம் நீளம்.

* * * * *

**மகன்** : அப்பா, குரங்கு இனத்திலிருந்து தான் நான் வந்தேன் என்பது உண்மையா?
**தந்தை** : அது என்னமோ எனக்குத் தெரியாது.
உங்க அம்மாவோட உறவினர்களை நான் பார்க்கல்ல.

* * * * *

**அப்பா** : பக்கத்து வீட்டுக்காரரிட்ட போய் மண்வெட்டி வாங்கி வா!
**மகன்** : அங்க இல்லையாம் அப்பா.
**அப்பா** : எதிர் வீட்டில போய் வாங்கி வா.
**மகன்** : அங்கேயும் இல்லையாம் அப்பா.
**அப்பா** : சரி விடு, அவனுக எல்லாம் கஞ்சப் பயலுக! நம்ம மண்வெட்டிய எடு.

* * * * *

**அரசன்** : மந்திரியாரே, சோழ நாட்டுக்கு புறா தூது அனுப்பினோமே ஏதாவது செய்தி வந்ததா?
**மந்திரி** : ஆம்... மன்னா...
**அரசன்** : என்ன செய்தி வந்தது மந்திரியாரே?
**மந்திரி** : புறாக் கறி நன்றாக இருந்ததாம் மன்னா...

**மாணவன்** : (பரீட்சை மண்டபத்துள் நின்ற ஆசிரியரிடம்) நீங்க யார்?
**ஆசிரியர்** : நான் சுப்பொயிஸ்சர்
**மாணவன்** : இதன் தமிழ் வடிவம் என்ன சேர்?
**ஆசிரியர்** : மேற்பார்வையாளர்!
**மாணவன்** : மேற்பார்வையாளர் என்றால் மேலே பார்க்க வேண்டியதுதானே. ஏன் சேர் எங்கள் விடைத்தாளைப் பார்த்து தொல்லை பண்ணுறீங்க?

* * * * *

**கணவன்** : இன்னுமா சமையல் ஆகலே? நான் ஓட்டலுக்கு போறேன்.
**மனைவி** : ஒரு அஞ்சு நிமிஷம் பொறுங்க.
**கணவன்** : அதுக்குள்ளே ஆகிடுமா?
**மனைவி** : இல்லே, நானும் புடவையை மாத்திட்டு உங்களோட வந்திடறேன்.

* * * * *

Eb காரனுக்கு போன் பண்ணி கரண்ட் எப்ப வரும்ன்னு கேட்டா...
“உன்னோட மொபைல்ல இன்னும் சார்ஜ் இருக்கான்னு” கேக்குறான்... என்ன கொடுமை சார் இது!...!..

# மன்னா விளம்பரப் பலகை

வாழ்க்கையில் கடந்தகாலம் சென்றுவிட்டது. வருங்காலம் சந்தேகம் நிறைந்தது. எனவே இருக்கும் காலத்திலேயே செயலாற்றிக் கொள்!

நீ வீணாக்கும் ஒவ்வொரு நொடியும் உன்னை வறுமைக்குள் தள்ளி விடும்.

...............................

நம் வாழ்க்கை நம் எண்ணங்களை பொறுத்து அமைகின்றது.

..............................

சென்று கொண்டிருப்பவன், காலத்தை வென்று கொண்டிருக்கின்றான்: நின்று கொண்டிருப்பவன், காலத்தை தின்று கொண்டிருக்கின்றான்.

உயர்ந்த இடத்தில் இருக்கும்போது உலகம் உன்னை மதிக்கும் உன் நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால் உன் நிழலும் கூட மிதிக்கும்.

.........................

மற்றவர்கள் உங்களிடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ அப்படி நீங்கள் மற்றவர்களிடம் நடந்து கொள்வதற்குப் பெயர்தான் ஒழுக்கம்.

.........................

கடமையைச் செய், கடமைக்காக செய்யாதே, வாழ்வதற்கு உண், உண்பதற்காக வாழாதே.

அழகைப் பற்றி கனவு காணாதீர்கள், அது உங்கள் கடமையை பாழாக்கி விடும். கடமையை பற்றி கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.

கோபத்தில் ஒரு முடிவும் எடுக்காதே! மகிழ்ச்சியில் ஒரு வாக்கும் கொடுக்காதே அழுகையில் ஒருவரையும் நம்பாதே!

# மருத்துவக் குணங்கள் நிறைந்த கற்றாழை



♦ சோற்றுக் கற்றாழை ஜெல்லை முகத்தில் தொடர்ந்து பூசுவதன் மூலம் இளம் வயதில் உண்டாகும் தோல் சுருக்கங்கள் மறைந்து அழகு கூடும். அதிக நேரம் வெயிலில் அலைபவர்கள், முகத்தில் பூசி வந்தால் கருமை, கரும் புள்ளி ஏற்படாமல் காக்கும்.

♦ கற்றாழையின் சோற்றைத் தலையில் தேய்த்து அரை மணி நேரம் ஊற வைத்துக் குளிக்க தலையில் ஏற்படும் பொடுகு, சிரங்கு குணமாகும்.

♦ கற்றாழையைத் தினமும் எடுத்துக்கொண்டால் தேவையற்ற கொழுப்பு கரைந்து உடல் ஸ்லிம் ஆகும்.

♦ சோற்றுக் கற்றாழை மடலை இரண்டாகப் பிளந்து உள்ளே சிறிதளவு வெந்தயத்தை வைத்து மூடி விடவும். இரண்டு நாட்கள் கழித்து ஊறிய அந்த வெந்தயத்தை எடுத்து தேங்காய் எண்ணெயில் போட்டு அதை தேய்த்து குளிக்க நரைமுடியும் கறுப்பாகும்.

♦ மூட்டு வலி, கழுத்து வலியின்போது கற்றாழையை நீளவாக்கில் வெட்டி, சூடு செய்து, வலி ஏற்பட்ட இடத்தில் பற்றுப் போடுவதன் மூலம் நிவாரணம் கிடைக்கும்.

♦ வாடிச் சருகான கற்றாழை மடலை தீயில் கருக்கி, தேங்காய் எண்ணெயோடு கலந்து தீப்புண்களின் மீது பூசிவர விரைவில் புண் ஆறும். கற்றாழை மடலில் சிறு துண்டு எடுத்து இரண்டாக பிளந்து சோற்றுப் பகுதியை தீயில் வாட்டி உடல் பொறுக்கும் சூட்டில் அடிபட்ட இடத்தில் இதை வைத்து ஒத்தடம் கொடுக்க வலி, வீக்கம் மட்டுமல்ல இரத்தக் கட்டும் மாறும்.

♦ கற்றாழைச் செடியின் மடலில் உள்ள சோற்றை எடுத்து தண்ணீரில் நன்கு அலசி அதை சாப்பிட்டு வர குடல் புண், மூல நோய் மாறும். மலச் சிக்கல் தீரும்.

♦ தழும்புகள், வெயில் பாதிப்புகள், உலர்ந்த சருமம் என சரும நோய் எதுவாக இருந்தாலும் சிறிது கற்றாழைச் சாற்றை தினமும் தடவி வர நல்ல குணம் கிடைக்கும்.

♦ மஞ்சள்காமாலை நோய்க்கும் சோற்றுக்கற்றாழை மருந்தாக பயன்படுகின்றது. தவிர, கூந்தல் தைலம், அழகு சாதனப் பொருட்களில் இது சேர்க்கப்படுவதால் பொருளின் தரமும், விரயமும் மட்டுமல்ல மருத்துவத் தன்மையும் அதிகரிக்கின்றது.

♦ கற்றாழைச் சோற்றை தேங்காய் எண்ணெயுடன் காய்ச்சி தலைக்குத் தேய்த்துவர கேசம் நன்கு செழித்து வளரும். எண்ணெய் குளியல் செய்ய கண் குளிர்ச்சி மற்றும் சுக நித்திரை உண்டாகும்.

♦ வெயில் காலத்தில் சிலருக்கு கண்களில் எரிச்சல் உண்டாகி கண்கள் சிவந்து விடும். அப்போது கற்றாழையின் ஒரு துண்டை எடுத்து அதன் நுங்குப் பகுதி வெளியே தெரியும்படி இரண்டாகப் பிளந்து, கண்களை மூடி கண்களின் மீது அந்தக் கற்றாழை துண்டை வைத்துக் கொண்டு சற்று நேரம் அப்படியே படுத்திக்க வேண்டும்.

இப்போது கண் எரிச்சல் குறைவதோடு, சிவந்த நிறமும் மறைந்து விடும். இதை இரவு நேரங்களில் தூங்குவதற்கு முன் செய்து வந்தால் நல்ல உறக்கம் வருவதோடு உடலுக்கு பல நன்மைகளும் கிடைக்கும். ●

*- நன்றி இணையத்தளம் -*

# சமையல் குறிப்பு

## *சுவையான பிரெட் பஜ்ஜி*

### தேவையான பொருட்கள்



அரிசி மாவு - 1/4 கப்
பேக்கிங் சோடா - ஒரு சிட்டிகை
உப்பு - தேவையான அளவு
மிளகாய்த் தூள் - 1 தேக்கரண்டி
ஓமம் - 1/2 தேக்கரண்டி
சாட் மசாலா தூள் - 3/4 தேக்கரண்டி
இஞ்சி, பூண்டு விழுது - 1 தேக்கரண்டி
தண்ணீர் - தேவையான அளவு
பிரட் துண்டுகள் - 5
எண்ணெய் - தேவையான அளவு



### செய்முறை :

ஒரு பாத்திரத்தில் கடலை மாவு, அரிசி மாவு, இஞ்சி, பூண்டு விழுது, உப்பு, மிளகாய் தூள், சாட் மசாலா தூள், ஓமம் சேர்த்து தண்ணீர் ஊற்றி கிளறவும். பின் சமையல் சோடா ஒரு சிட்டிகை சேர்த்து மாவை நன்றாக கிளறி வைக்கவும். பிரட் துண்டுகளை சதுரமாக வெட்டி வைக்கவும்.

அடுப்பில் கடாயை வைத்து சூடானதும் பிரட் துண்டை எடுத்து கலக்கி வைத்துள்ள மாவில் முக்கி எடுத்து சூடான எண்ணெயில் போட்டு பொரித்து எடுத்தால் சுவையான பிரெட் பஜ்ஜி தயார். ●



# mjph;Tfs; ....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக, அரசியல், ஆன்மீகம் சார்ந்த தொடர் 77

# உணவுக்கு உப்புப்போல உறவுக்கு நட்பு !

### *எத்தனை கோடிப் பணமிருந்தும் என்ன!*

'அப்பிள்' நிறுவன இயக்குநர் ஸ்டீவ் ஜாப்சின், பிரசித்திபெற்ற வாக்குமூலம் ஒன்று முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்த்திருந்தது. அவ்வாக்கு மூலம் ஒருவகையில் உலக மக்கள் அனைவருக்கும் முக்கியமானது. "நான் வணிக உலகில் வெற்றியின் உச்சத்தைத் தொட்டிருக்கின்றேன். பிறரின் பார்வையில் என் வாழ்க்கை வெற்றிகரமானதுதான். எப்படியிருந்தாலும் என்னுடைய பணிச்சுமைகளையெல்லாம் தாண்டி நானும் என் வாழ்க்கையில் ஒருசில மகிழ்ச்சியான தருணங்களைச் சந்தித்திருக்கின்றேன், உணர்ந்திருக்கின்றேன், அநுபவித் திருக்கின்றேன். பணமும் வசதிகளும் மட்டுமே வாழ்க்கையில்லை என்பதை என் வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில்தான் அறிந்து கொண்டேன்.

இதோ இந்த மரணத்தறுவாயில், நோய்ப்படுக்கையில் படுத்துக்கொண்டு, என் முழு வாழ்க்கையையும் திரும்பிப் பார்க்கும் இந்தத் தருணத்தில் வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த அங்கீகாரங்கள், பணம், புகழ், சொத்து, செல்வாக்கு எல்லாமே செல்லாக்காசாக, பொருளற்றதாக, மரணத்தின் முன் தோற்றுப்போய் நிற்பதை உளமார உணர்கின்றேன். இந்த இருளில் என் உயிரைத் தக்கவைக்கப் போராடிக் கொண்டிருக்கும் மருத்துவ இயந்திரங்களின் மெல்லிய சத்தங்கள் மட்டுமே காதுகளில் ரீங்கரிக்கின்றன.

கடவுளின் மூச்சுக்காற்றையும், மரணத்தையும் மிகமிக அருகில் உணர்கின்றேன். வாழ்க்கையில் நாம் வாழ்வதற்குப் போதுமான பணத்தை ஈட்டிய பின், பணத்திற்குத் தொடர்பில்லாத - மனத்திற்குத் தொடர்புடைய சிலவற்றையும் சம்பாதிக்கத் தொடங்கவேண்டும் என்பது இப்போதுதான் எனக்குப் புரிகின்றது. அவை உறவாகவோ, நட்பாகவோ, கலையாகவோ, அறமாகவோ, நம் இளமையின் கனவாகவோ இருக்கலாம். அவைதான் வாழ்வில் மிகமிக இன்றியமையாதன என்பதை காலங்கடந்து இப்போது நான் உணர்கின்றேன்.

அதைவிட்டுப் பணத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு ஓடும் மனிதனின் வாழ்க்கை முற்றிலும் வேறு திசையில் திரும்பிவிடுகின்றது, என் வாழ்க்கையைப்போல.

கடவுள் நம் புலன்களின் மூலம் அனைவரின் மனத்திலும் இருக்கும் அன்பை உணரச்செய்யும் ஆற்றலைக் கொடுத்திருக்கிறார். பணத்தால் நாம் உண்டாக்கியிருக்கும் அனைத்து மகிழ்ச்சியும் வெறும் மாயைகளே! நான் சம்பாதித்த பணம் எதையும் என்னுடன் கொண்டுபோக முடியாது. நான் மகிழ்ந்திருந்த என் நினைவுகள் மட்டுமே இப்போது என்னுடன் இருக்கின்றன. அன்பும், காதலும் பல மைல்கள் உங்களுடன் பயணிக்கும். வாழ்க்கைக்கு எந்த எல்லைகளுமில்லை. எங்கு செல்ல ஆசைப்படுகிறீர்களோ அங்கு செல்லுங்கள். தொட நினைக்கும் உயரத்தை - உச்சத்தைத் தொட முயலுங்கள்.

நீங்கள் வெற்றியடைவது உங்கள் எண்ணத்திலும், கைகளிலும்தான் உள்ளது. உங்கள் பணத்தை வைத்து நீங்கள் என்ன வேண்டுமானாலும் வாங்கலாம், ஆனால் அந்தப் பணத்தின் மூலம் உங்கள் வலியை, உங்கள் துயரை யாரையும் வாங்கிக்கொள்ளுமாறு செய்ய முடியாது, முடியவே முடியாது. பணத்தின் மூலம் வாங்கும் பொருட்கள் தொலைந்துவிட்டால் மீண்டும் வாங்கிவிடலாம். ஆனால் நீங்கள் தொலைத்து, அதைப் பணத்தால் வாங்கமுடியாத ஒன்று உண்டென்றால் அது உங்கள் வாழ்க்கைதான்.

வாழ்க்கையில் எந்தக் கட்டத்தில் நீங்கள் இருந்தாலும் பரவாயில்லை. இப்போதாவது வாழ்க்கையை வாழத் தொடங்குங்கள். நாம் நடித்துக்கொண்டிருக்கும் வாழ்க்கை எனும் நாடகத்தின் திரை எப்போது வேண்டுமானாலும் இறக்கப்படலாம் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். உங்களின் குடும்பத்தினருக்கு, பெற்றோருக்கு, மனைவிக்கு, மக்களுக்கு, உறவினர்க்கு, நண்பர்களுக்கு, இயலாதவர்களுக்கு அன்பை வாரிவாரி வழங்குங்கள். உங்களை நீங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளுங்கள். அனைவரையும் மனமார நேசியுங்கள். நேசித்துக்கொண்டே இருங்கள்!"

உறவுக்கும், நட்புக்கும் முன்னுரிமையும், முதலிடமும் கொடுத்து பொருள் பொதிந்த வாழ்க்கை வாழ நினைக்கும் அத்தனை பேரும், மரணப்படுக்கையில் ஸ்டீவ் உச்சரித்த வார்த்தைகள், அவன் உழைத்த கோடான கோடி ரூபாய் பணத்திலும் பலநூறு மடங்கு பெறுமதியானவை என்பதனை உணர்ந்து கொள்வர். "மரணத்தை நோக்கி நகரும் வாழ்க்கையில், வாழச்சொல்லி வற்புறுத்துவது காதலும் நட்பும்தான். காதலை நேசிப்போம், நட்பை சுவாசிப்போம்" என்ற கவிப்பேரரசு வைரமுத்துவின் வரிகளும் மேற்சொன்ன கருத்துக்கு வலுச்சேர்க்கின்றன.

### *"நன்மை பயப்பவற்றை நயப்பதே நட்பு"*

"மெழுகுவர்த்திக்கு ஒளி கொடுப்பதற்காகத் தன்னை மாய்த்துக் கொள்கின்றது தீக்குச்சி. உயிர்கொடுத்த அந்த நண்பனை நினைத்து, நினைத்து மெழுகுவர்த்தி தன்னை உருக்கிக் கொள்கின்றது!" என ஒருவன் கூறும் அவதானிப்பினை நட்புப்பற்றிய ஒருவகையான வரவிலக்கணமாகக்கூடக் கொள்ளலாம் போலிருக்கின்றது.

ஒருமுறை, கிரேக்க தத்துவ ஞானி சோக்ரடீஸின் நண்பரைப்பற்றி சோக்ரடீஸிடமே ஏதோ சொல்ல ஒருவர் வந்தார்.



வந்தவர் சோக்ரடீஸின் நண்பரைப்பற்றி ஏதேதோ எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார். சோக்ரடீஸ், "எனது மூன்று கேள்விகளுக்கு 'ஆம்' என்று பதில் தந்தால் நீர் என்னோடு தொடர்ந்து உரையாடலாம்!" என்றார். சோக்ரடீஸின் கேள்விகளும் அவற்றுக்குக் கிடைத்த பதில்களும் பின்வருமாறு: 1. "அவரை நன்கு தெரிந்துதான் கதை கூறப்போகின்றீரா?",'இல்லை!" 2. "அவரைப்பற்றிய நல்ல விடயத்தையா கூறப்போகிறீர்?", 'இல்லை!' 3. "அந்த நண்பரைப்பற்றி என்னிடம் கூறுவதால் யாராவது பயனடைவார்களா?", 'இல்லை!' "அப்படியென்றால் நன்கு தெரியாத, நல்ல விடயமும் இல்லாத, எவருக்கும் பயனில்லாத என் நண்பரைப்பற்றிய விடயத்தைத் தயவுசெய்து என்னிடம் சொல்லாதீர்கள்!" என்றுகூறி அவரை அனுப்பி வைத்தார். 'நல்ல நட்பு எப்போதும் நல்லதாகவே, நன்மையானதையே யோசிக்கும்'.

### *முகமூடிகள் அணிந்த முகங்கள்!*

பழகுகின்றபோது சிலர் உண்மை முகங்களோடு பழகுவதில்லை. அவர்கள் முகமூடிகள் அணிந்திருப்பதும் தெரிவதில்லை. அவர்கள் முகமூடிகள் அணிந்திருக்கின்றார்கள் என்று தெரியாமலே பலர் உறவுகளைப் பேணி வந்திருப்பார்கள். எப்போது அவர்களது முகமூடிகள் கழன்று விழுகிறதோ, எப்போது அவர்களின் முகத்திரைகள் விலகுகிறதோ அப்போது அவர்களின் உண்மை முகங்கள் புலப்படும். இவ்வுண்மையை சொல்ல வருகிற ஒருவன், "கழன்று விழும்வரை சிலரது முகமூடிகளை முகம் என்றே நம்பித் தொலைத்திருக்கின்றோம்" என்கின்றான்.

உறவுகள், நட்புகளை மதிக்கத் தெரியாதவர்கள் இன்று பெருகிவிட்டார்கள். ஏதோ ஒன்றை அடைவதற்காக நட்பைப் பயன்படுத்துபவர்கள் அதிகமாகிவிட்டார்கள். அதனால்தான் நட்பின் பெயரில் கொடுக்கல், வாங்கல்களைச் செய்துவிட்டு, பின் திருப்பிக்கொடுக்கும் நாகரிகத்தை கடைப்பிடிக்கின்றார்கள் இல்லை. பணத்தை அபகரிப்பதற்காக, சொத்துக்களைத் தந்திரமாகப் பெற்றுக்கொள்வதற்காக நட்புக்களைக்கூடத் தூக்கி எறிந்துவிட்டுப் போகும் மனிதர்களை இன்று பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. 'பணத்தை நம்பிப் பிணமாய் வாழ்வதைவிட மனதை நம்பி மனிதர்களாய் வாழ்வது மேல்' என்பதை மனிதர்கள் தங்கள் வேதமாகக் கொள்ளவேண்டும்.

### *நட்பின் ஒருவகைச் சிறப்பு!*

ஒரு மாணவன் பரீட்சையில் சித்தியடைந்து விட்டான் என வைத்துக் கொள்வோம். அவனின் குடும்பத்தினரும், நெருக்கமானவர்களும், அவனுடன் சம்மந்தப்பட்டவர்களும் அவனின் பெறுபேற்றைக் குறிந்துப் பெருமைப்படுவதோடு, அதில் உரிமையும் கொண்டாடுவார்கள். அப்பா என்ன சொல்லியிருப்பார்! "என் மகன் எண்டு நிரூபிச்சிற்றாயடா!" என்றிருப்பார். அம்மா, "எல்லாம் கடவுள் செயல்!" என்றிருப்பாள். ஆசிரியர், "என்னுடைய படிப்பித்தல்தான் காரணம்!" எனக் கூறியிருப்பார். காதலி, "*ஐ லவ்யுடா* செல்லம்!" என்றிருப்பாள். நண்பன், "வாடா மச்சான் தண்ணியடிக்கலாம்!" எனச் சொல்லியிருப்பான். நல்ல பெறுபேறு வந்து எல்லாம் நலமாக நடந்தால் மேற்சொன்னதுபோல நாடகம் நடந்தேறியிருக்கும்!

ஆனால், அவன் சித்தியடையவில்லை என்று வைத்துக் கொண்டால் மேற்சொல்லப்பட்டவர்களின் உணர்வுகள் எவ்வாறு வெளிப்பட்டிருக்கும்! அப்பா, "உதவமாட்டான் என அப்பவே எனக்குத் தெரியும்!" என்றிருப்பார். அம்மா, "எல்லாமிந்த*ரீவி, போன்* (phone) ஆல வந்தது!" என்றிருப்பாள். ஆசிரியர், "*பாஸ்*பண்ணுவதற்குக் கொஞ்சமாவது படிச்சாத்தானே!" என விளக்கம் அளித்திருப்பார். காதலி, "இதுக்கு நான் பொறுப்பில்ல!" என்றிருப்பாள். நண்பன், "வாடா மச்சான் தண்ணி அடிக்கலாம்!" என்று கூறியிருப்பான்! மேற்கூறப்பட்ட அனுபவத்தோடு கூடிய விவரணம் எந்தளவிற்கு சரியானவை என்பது தெரியவில்லை எனினும், நண்பனுடைய பதில் பொதுவாக இவ்வாறுதான் இருக்கும் என நம்பலாம்.

### *நயவஞ்சகமான நட்பு!?*

நட்பால் விளைந்த பல நல்ல பயன்கள் உண்டு. அதேவேளை, நட்பை உயிருக்கு உயிராக மதித்தவர்களை, பசுத்தோல் போர்த்திய புலியாக மாறி, நயவஞ்சகமாக்கி, நலினப்படுத்திய சம்பவங்களை உலக வரலாற்றிலும், தமிழர்களாகிய எம்முடைய சரித்திரத்திலும் காணலாம். இதனைத்தான், 'அதுவே நடந்தது' என்ற தலைப்பில் 2018 மாசி ஜீவநதி சஞ்சிகையில் எழுதியிருந்தேன்: அன்று நடந்ததே எங்கள் மண்ணிலும் நடந்தது. "இயேசுவுடன் - யூதாஸ்," "சீசருடன் - புறூட்டஸ்," "கட்டபொம்மனுடன் - எட்டப்பன்", "பண்டாரவன்னியனுடன், காக்கைவன்னியன்." எது நடந்ததோ எம் மண்ணிலும் அதுவே நடந்தது!..."

இயேசுவின் சீடனும், நண்பனுமான யூதாஸ் ஸ்கரியோத்தின் காட்டிக்கொடுப்பு, வரலாற்றில் உயிருக்கு நிகரான நட்புக்குச் செய்யப்படும் பெரும் பாவமாகக் கருதப்படுகின்றது. இதுபோல சீசரின் உயிர் நண்பனான புறூட்டஸ் சீசரைக் குத்திக் கொன்றபோது, "நீயுமா புறூட்டஸ்?" என்ற வார்த்தைகள் உயிருக்கு உயிரான நட்புக்குச் செய்யும் மாபெரும் துரோகத்தைக் காட்டுவதாக வரலாற்றில் பதியப்படுகின்றது. இவைபோல கட்டபொம்மனைக் காட்டிக்கொடுத்த எட்டப்பனினதும், பண்டாரவன்னியனைக் காட்டிக்கொடுத்த காக்கைவன்னியனினதும் வரலாறுகள் இன்றுவரை தொடர்வதாகவே தெரிகின்றது. ஈழத்துத் தமிழர்களுடைய வாழ்விலும், வரலாற்றிலும் நடந்தேறிய சோகமான – அவலமான துரோகத்தனங்களின் உச்சமே 2009 மே 18 ஈழத்துத் தமிழர்களின் உரிமைக்கான நீண்ட போராட்ட வரலாறுகூட உள்நாட்டு, வெளிநாட்டுத் துரோகங்களால் முடக்கப்பட்டன என்று கூறுவதில் எத்தவறும் இருக்கமுடியாது.

### *"நலினப்படுத்தப்பட்டாலும், நல் நட்புக்கள் இன்றியமையாதவை"*

எத்தனை தந்திரங்களுக்கும், மந்திரங்களுக்கும் வஞ்சகங்களுக்கும் நட்பு உள்ளாகினாலும் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நல்ல நட்புகள் அவசியமானதும் கட்டாயமானதும், இன்றியமையாததும் கூட. ஒருவரின் வாழ்க்கை வசந்தமாவதற்கு நல்ல நட்புகள் கட்டாயமாகத் தேவை. உணவுக்கு எப்படி உப்பு சுவையூட்டுகின்றதோ, அதேபோல வாழ்க்கைக்கு சுவையூட்டுவது நல்ல நட்பாகத்தான் இருக்கும். அதனால்தான், "வாசனை என்பது சில நிமிடம் வரை, வறுமை என்பது சில காலம் வரை, அழகு என்பது வயது உள்ள வரை, நட்பு என்பது உயிர் உள்ள வரை!" என ஒருவர் குறிப்பிடுகின்றார். ஆனால் நட்பு என்ற பெயரில் தீய நண்பர்களுடன் வைத்திருக்கும் உறவு ஒருவரின் வாழ்க்கையையே அழித்துவிடுகிறது. ஆக, நட்பை ஒருவர் எவ்வாறு ஆக்கிக்கொள்கிறார் என்பதில்தான் நட்பின் சிறப்புக்கள் அடங்கியிருக்கின்றன.

சிலர் தாங்கள் எத்தனையோ ஆண்டுகால நண்பர்கள் எனப் பெருமை பாராட்டிக் கொள்வார்கள். ஆனால், அடிக்கடி கூடிக்கூடித் 'தண்ணி' அடிப்பதைத் தவிர வேறு எதனையும் அத்தனை ஆண்டுகளில் சிந்தித்திருக்கவோ அன்றோல் செயற்படுத்தியிருக்கவோ மாட்டார்கள். இதனை எப்படி நட்பாகக் கருதமுடியும்? இவர்களை எப்படி நண்பர்களெனச் சொல்லமுடியும்? வேண்டு மென்றால், தண்ணியடிக்கக் கூடும் தறுதலை நட்பு' எனப் பெயர் சூட்டலாம். ஏனெனில் முகநூல் நண்பன் ஒருவன் வரைந்ததுபோல 'நண்பன் என்றாலே நல்லவனென்று பொருளல்ல, சமூக விரோதிக்கும் நண்பன் இருக்கின்றான்' என்ற சிந்தனையில் மிக ஆழ்ந்த அர்த்தங்கள் உள்ளன. ஏனெனில் ஒரு கள்ளனுக்கும் நண்பன் இருப்பான். சமூகத்தை சீரழிப்பவனுக்கும் நண்பனோ, நண்பர்களோ இருப்பார்கள். 'எத்தனை எத்தனை நண்பர்கள் இருக்கின்றார்கள் என்பதல்ல, ஒருவருக்கு எப்படிப்பட்ட நண்பர்கள் இருக்கின்றார்கள் என்பது மிகமிக முக்கியமானது.' எனவேதான், ஒவ்வொருவரும் தங்கள் நட்புப் பற்றியும், நண்பர்கள் பற்றியும் ஆய்ந்தறிந்து நட்புக்கொள்ள வேண்டும், நண்பர்களாகிக்கொள்ள வேண்டும்.

### *வள்ளுவன் கூறும் நட்பு*

"முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகம்நக நட்பது நட்பு" என்று உலக மறையாம் திருக்குறள் கூறுகின்றது. பார்த்தபோது முகம் மட்டும் மலர நட்பைக் காட்டுவது சிறந்த நட்பாகாது. அன்பினால் அகமும் மலர நட்பை வெளிப்படுத்துவதே சிறந்த நட்பாகும்.

நட்பின் உண்மையான தார்ப்பரியங்களை வள்ளுவர் மிக அழகாகத் தனது 10 குறள்களில் வடித்திருக்கிறார். இத்தகைய நட்புக்கு இலக்கணமாக சீரோடும் சிறப்போடும் ஒரு மக்கள் கூட்டத்தினர் வாழ்ந்திருக்கிறார்கள். அம்மக்கள் கூட்டத்தின் வாரிசுகள்தான் இன்றைய தமிழ்பேசும் மக்கள். ஆக, இத்தகைய உயர்ந்த வாழ்க்கைமுறையை இழந்துபோகாதிருக்க வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது இக்காலத்தில் வேண்டப்பட்டு நிற்கின்றது.

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" எனும்போது உடைநெகிழ்ந்தவனது கையானது நெகிழ்ந்துபோன உடையைப் பிடிப்பதற்கு விரைந்து செயல்படுவது போல நண்பனுக்குத் துன்பம் வந்தால் அக்கணமே சென்று அதைக் களைவதுதான் நல்ல நட்பாகும் என்கின்றது இன்னுமொரு குறள்.

### *"நட்புக்கு இலக்கணமாய் இருப்போம்!"*

"சுற்றமும், சூழலும் படைத்துவிட்ட உறவைக் காட்டிலும் இதயமும், உணர்வும் புரிந்துவிடுகின்ற உறவுகள் நிலைத்துவிடுகின்றன" என்பார் எழுத்தாளர் பார்த்தசாரதி. நல்ல நட்புகள் சாதி, சமயம், நிறம், இனம், மொழி, பணம் பார்ப்பது கிடையாது. குணம் ஒன்றையே பார்க்கும். நல்ல நட்புகளை வளர்ப்போம், நட்புறவில் வாழ்வோம், நல் நட்புகளுக்கு இலக்கணமாக இருப்போம். ●

(முற்றும்)

### *நன்றி நவில்கின்றோம்:*

கடந்த பல ஆண்டுகளாக அதிர்வுகள் 77 தொடர்களை சமகால நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி பல ஆக்க பூர்வமான ஆக்கங்களை மன்னா வாசகர்களுக்கு மன்னாவாகப் பொழிந்த அருட்பணி. செ. அப்புராசா அமதி. அவர்களுக்கு மன்னா நிர்வாகம் மனநிறைவோடு நன்றி நவில்கின்றது.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.194

1 குறிப்பேடு (அதிகாரம் 01 முதல் 12 முடிய)

உங்கள் விடைகளை ஒக்ரோபர் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | ❖ | 03 | | | | | 04 | | | |
| | | | | 05 | | | | ❖ | ❖ | |
| | | | | 06 | 07 | | | 08 | | |
| 09 | | | | | | | | 10 | | |
| | | | | 11 | | | | | | 12 |
| | | | | | | 13 | | | | |
| | | 14 | | | | ❖ | 15 | | | |
| | | | | | | 16 | | | | |
| 17 | | | | | 18 | | | | 19 | |
| ❖ | 20 | | | | ❖ | | | 21 | | 22 |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, , y. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(– என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அவர் மேல் அவர்கள் .................. வைத்ததால் அவரும் அவர்களின் மன்றாட்டைக் கேட்டருளினார்.
3. அவர் கிழக்கிலிருந்த .................... நிரப்பி நகரைச் சுற்றிலும் மதில் எழுப்பினார்.
4. ஏனெனில் இவர்கள் அனைவரும் .................... மிகு வீரர்கள்.
8. அங்கு காணப்பட்ட கூடாரங்களையும், மெயுனியரையும் ....................................... வீழ்த்தினர் (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
9. அவர்கள் நெத்தாயிமிலும், கெதேராவிலும் ...................... வாழ்ந்தனர்.
10. அவர்கள் அங்கே தாவீதோடு ..................... குடித்து மூன்றுநாள் தங்கியிருந்தார்கள்.
13. எருசலேமில் சாலமோன் ஆண்டவரின் ............................க் கட்டியெழுப்பும்வரை அவர்கள் சந்திப்புக் கூடாரத் திருஉறைவிடத்தின்முன் திருப்பாடல்கள் பாடிப் பணியாற்றினார்கள்.
14. அவர்களின் சகோதரர் அவருக்கு ................. கூற வந்தனர்.
20. ............................... ஆண்டவர் மாபெரும் வெற்றியைத் தந்தருளினார்.

### மேலிருந்து கீழ்

1. குருக்களின் புதல்வர் சிலர் நறுமணப் பொருள்களிலிருந்து ............................க் கலவை தயாரித்தனர்.
2. இவ்வாறு சவுல் தமது துரோகங்களை ...................... மடிந்தார்.
3. வாற்கோதுமைப் .................. நிறைந்த ஒருவயல் அங்கிருந்தது.
4. கடவுளே மெய்யாகவே நீர் எனக்கு ஆசி .......................... என் எல்லையைப் பெரிதாக்குவீராக.
7. அங்கே அவர்கள் செழிப்புமிகு நல்ல .................. லைக் கண்டார்கள்.
15. ஆனால் ஆண்டவரிடம் ஆலோசனை ...............வில்லை
16. பெலிஸ்தியர் ........... அவற்றில் குடியேறினர்.

### வலமிருந்து இடம்

2. இவர்கள் எருசலேமில் தங்கள் உறவின் .......................... வாழ்ந்து வந்தார்கள்.
5. .................................. மகனே நாங்கள் உம்மோடிருப்போம்.
6. எனவே அவர்கள் கடவுளின் படையெனப் பெரும்படை .......................... (3ம், 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
11. அவர்களில் சிலரிடம் வழிபாட்டுக்குரிய கலங்களில் ................ இருந்தது.
12. இவற்றுக்கான .............................கள் பழங்காலத்தவை.
13. ..................... குலத்திலிருந்து கிடைத்தவை: தெதேசு, அதன் மேய்ச்சல் நிலங்கள்; தரபாத்து, அதன் மேய்ச்சல் நிலங்கள்.
16. அவர்களின் ........................ தங்கள் உறவின் முறையாருடன் எருசலேமில் வாழ்ந்தார்கள் (2 வது எழுத்து இறுதியாக நிற்கிறது)
18. நிலம் .............. பரந்து அமைதியுடனும், வளத்துடனும் இருந்தது.
22. இஸ்ரயேலரின் .............கள் எல்லோரும் எபிரோனிலிருந்த அரசரிடம் வந்தார்கள்.

### கீழிருந்து மேல்

7. என் மக்களாகிய இஸ்ரயேலை நீ ......................... அவர்களின் தலைவனாயிருப்பாய்.
13. தங்கள் உயிரை ஒரு பொருட்டாக எண்ணாத இந்த மனிதரின் ........................ நான் குடிப்பது எப்படி?
17. அங்கே அவர்கள் .................... நல்ல மேய்ச்சலைக் கண்டார்கள்.
19. எனவே அவர்கள் கடவுளின் படையெனப் ....................... படை ஆயினர்.
20. .............................. யாவரும் பென்யமின் புதல்வர்கள்.
21. அந்த எகிப்தியனின் கையிலிருந்த ஈட்டியைப் .................. அதே ஈட்டியால் அவனைக் கொன்றார்.
22. முன்பே அவர்களின் ................... ஆண்டவரது பாளைய வாயிலைக்காத்து வருகின்றனர். (3வது எழுத்து இறுதியாக நிற்கிறது)

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 192

**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

**பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:**



**முதலாம் பரிசு:**

R. அன்ரனி யேசுதாஸ்,
7/13 சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.



**இரண்டாம் பரிசு:**

E. ஜெனிஸ்ற் றமீஷன்,
இல:87/11, ஜிம்றோன் நகர்,
எமில்நகர், மன்னார்

**மூன்றாம் பரிசு:**

ஜேம்ஸ் இலக்கியன்,
வேதசாட்சிகள் கோவிலடி,
தோட்டவெளி.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 76 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 66 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 192ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. றபேக்கா பியாற்றிஸ் பற்றிக். சின்னக்கடை, மன்னார்.
02. ப. அருண் கிரித்திக் துரம். மரியாள் வீதி, தாழ்வுபாடு.
03. புஸ்பா சேவியர். உவர்மலை, திருகோணமலை.
04. செ. வளன் நிலுஜன் துரம். மரியாள்வீதி, தாழ்வுபாடு.
05. பெலிஸிற்ராஸ். தாமரைக்குளம், அடம்பன்.
06. செ. ஆன் நியூசிக்கா துரம். மரியாள்வீதி, தாழ்வுபாடு.
07. செ. ஜெரோம். தாமரைக்குளம், அடம்பன்.
08. செ. அஞ்சலா டயஸ். மரியாள்வீதி, தாழ்வுபாடு.
09. தேவிகா பத்மராஜா. மடுமாதாவீதி, பெற்றா, மன்னார்.
10. டெபோறா மோகன்றாஜ். இல: 7, தபாலகவீதி, மன்னார்.
11. குணமணி சேவியர். பெரியகடை, மன்னார்.
12. மா. லில்லி. பெற்றா, மன்னார்.
13. நீ. ரிசிவன் பெர்னாண்டோ. சிலாவத்துறை, மன்னார்.
14. நீ. மேரி றியன்சி பெர்ணான்டோ. சிலாவத்துறை, மன்னார்.
15. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா. 1ம் வட்டாரம், பேசாலை.
16. நீ. மேரி ெனோஜின் பெர்னாண்டோ. சிலாவத்துறை.
17. ச. திரேசில்டா. காத்தான்குளம், வட்டக்கண்டல்.
18. ச. மேரி ஜஸ்மின். காத்தான்குளம், வட்டக்கண்டல்.
19. S. பெனிற்றா. பள்ளமடு, விடத்தல்தீவு.
20. வலலட் யோண். இல: 843, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
21. ஜீன் போள் லக்மினி குரூஸ். ஆனாள்நகர், வங்காலை
22. பி. நித்தியானந்தன் குரூஸ். ஆனாள்நகர், வங்காலை.
23. நீ. நிக்கொலின் பெர்ணாண்டோ. சிலாவத்துறை, மன்னார்.
24. திருமதி. தா. வியாகுலநாயகி. வேப்பங்குளம், வவுனியா.
25. அ. கிரியோன். சுகந்தபுரி, வங்காலை.
26. A. விபுஷிகன் சோசை. இரத்தினபுரி, வங்காலை.
27. ரா. கெயில் குலாஸ். கெபி வீதி, 8ம் வட்டாரம், பேசாலை.
28. N. கெபின் அன்ரனி. சாந்திபுரம், மன்னார்.
29. சி. ஜீவச்சந்திரன். பெரியகுஞ்சுக்குளம், மடுவீதி.
30. அ. அக்ஷயா. நொச்சிக்குளம், உயிலங்குளம்.
31. ச. மரிய கொண்சிக்கா குரூஸ். சிலாவத்துறை.
32. E.A. ஒபிவியன்சி. சாவற்கட்டு, மன்னார்.
33. ஜெ. நிக்சலா. பெரியபண்டிவிரிச்சான், மடு.
34. ச. மரியகொண்சிக்கா குரூஸ். சிலாவத்துறை.
35. யூ. அஜித்திரா. முதலைகுத்தி, உயிலங்குளம்.
36. ரூபன் கஸ்ரியா. வன்னிக்கோட்டம், சிதம்பரபுரம்.
37. சி. மேரிகில்டா. பெரியகுஞ்சுக்குளம், மடுவீதி.
38. சுரேஸ்குமார் சுவேந்தன். முழங்காவில், பூநகரி, கிளிநொச்சி.
39. வின்சன் துஷீகா. திருக்கேதீஸ்வரம், மாந்தை.
40. மேரி. ஆன்சபீனா. அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
41. அ.கலிஸ்ரஸ் நிலோஜன் லெம்பேட். பண்டிவிரிச்சான். மடு.
42. அ. ஜெனிபர். நொச்சிக்குளம், உயிலங்குளம்.
43. S. அபிஷேக். எழுத்தூர், மன்னார்.
44. செ. ஆன்சா. பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
45. ராஜ்கெயில் குலாஸ். 8ம் வட்டாரம், பேசாலை.
46. அ. சயந்தினி. ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
47. இ. அக்ஷயா. எழுத்தூர், மன்னார்.
48. பெர்ஜின். முல்லைத்தீவு.
49. கில்டா. எமில்நகர், மன்னார்.
50. இ. றொக்சன். எழுவைதீவு, யாழ்ப்பாணம்.

## இளைஞர் உலகம்.....

### 7ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்? விட்டுக் கொடுப்பது கோழைத்தனம். பழிக்குப் பழி வாங்குவதே என் இலட்சியம் என நினைத்துப் போராடு என்று விலங்கு மனம் வலியுறுத்தும். அதன் பேச்சைக் கேளாமல் புறக்கணித்து, பழகிவிட்டால் நாளடைவில் அதன் முனைப்பு அடங்கி விடும்.

பழி, ஆணவம், அரட்டை, ஊர்சுற்றுதல். இவை மறந்து உண்மைக் கிறிஸ்தவ இளைஞராய், மறைப்பற்றுக் கொண்டவராய், நாத்திகத்தின் சக்தியிலே புரளாது, ஆத்திகத்தில் வீறு கொண்டுழைக்க முன்வர வேண்டும். "உன் கண்களை உயர்த்திப்பார் - உலகம் உன்னை எதிர்பார்க்கின்றது" கர்தினால் கார்டைன். பண்பாட்டில் வளரவும், பொறுப்புணர்ச்சியோடு வாழ்க்கைத்தேரினை ஓட்டவும், எதிர்கொள்ளும் நிகழ்ச்சிகளை சரியான முறையில் கணிக்கவும், எழுச்சிமிக்க உணர்ச்சிகளை கிறிஸ்தவக் கண்ணோட்டத்துடன் வாழவும், தங்களது வாழ்க்கைப் போராட்டத்தில் எந்த நேரத்திலும் தளர்ந்து விடாமல், கிறிஸ்துவின் துணைகொண்டு வாழவும், துன்பங்களைத் தாங்கவும், தன்னலமின்றி, பிறர்நலம் கொண்டு வாழவும் துடிப்பு மிகு இளைஞர்கள் சமுதாயத்தைத் தட்டி எழுப்ப வேண்டும்.

**இளைய தலைமுறைக்கு இறைவன் விடுக்கும் தூது:**

நீர் இளைஞராயிருப்பதால், உம்மை யாரும் அவமதியாதிருக்கட்டும். சொல், நடத்தை, அன்பு, விசுவாசம், தூய்மை முதலியவற்றில் நீர் விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக விளங்கும். (1திமோத்.4:12). இளைஞர்களும், எல்லாவற்றிலும் விவேகத்துடன் நடந்துகொள்ள அறிவு புகட்டும். நன்னடத்தையால் அவர்களுக்கு முன்மாதிரிகையாய் விளங்குவீராக. பெருந்தன்மையும் காட்டும் யாரும் குறைகாண முடியாத நலமிக்க வார்த்தைகளைப் பேசும். (தீத்து. 2:6). இளைஞரைத் தம்பியராகவும், இளம்பெண்களை தூய உள்ளத்தோடு தங்கையராகவும் கருதி நடத்தல் (1 திமோ 5:2). இளைஞர்களே, நீங்கள் மூப்பர்களுக்கு பணிந்து நடவுங்கள். ஒருவரோடு ஒருவர் பழகுகையில் மனத்தாழ்ச்சியை ஆடையாக அணிந்து கொள்ளுங்கள். (1 இரா.5:5). நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையை கட்டிக் கொண்டு உனக்கு விருப்பமான இடத்திற்கு சென்றாய் (அரு. 21:18). எதையும் செய்ய எனக்கு உரிமையுண்டு என்றீர்கள். அது எல்லாமே பயன்தராது. ஆனால் எதற்கும் நான் அடிமையாக மாட்டேன். (1 கொரி. 6:12) பிள்ளைகளே! எல்லாவற்றிலும், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து இருங்கள். இதுவே ஆண்டவருக்கு உகந்தது. (கொலோ. 3:20) தாய் தந்தையரைப் போற்று, அப்போது மண்ணுலகில் நீ நலம் பெறுவாய், நீடூழி வாழ்வாய் (எபேசி 6:2-3). இளைஞனே உனக்கு நான் சொல்லுகின்றேன் எழுந்திரு. கடவுள் இல்லை, கடவுள் இல்லை என்பது கற்பனை. மதம் மக்களை மயக்கும் மது என்ற நச்சுப் பொய்கள் பரவி உலவி வருகின்றன.

விசுவாச சத்தியம் அறிவுக்கு முரண் அல்ல. அறிவுக்கு துணைதான். இளைஞர் மறை உண்மையைப் பற்றி கவலைப்படாமல் வாழ்வதால் இன்று பொய் உலகை ஆட்சி செய்து வருகின்றது.

போர் முரசம் அலறுகின்றது, படை திரண்டுவிட்டது, ஆனால் இளைஞனாகிய நீ உண்மை என்னும் ஆயுதத்தை ஏந்திக் கிறிஸ்துவைப் பின்செல். கிறிஸ்தவ நெறியை உணர்ந்து வாழும் வாழ்க்கை ஒன்றே போதும். பொறுப்பற்ற பேச்சுக்கள், குறிக்கோளில்லா நடத்தைகள், பக்தியற்ற வழிபாடுகள், கட்டுப்பாடற்ற எண்ணங்கள், நாகரீகத்தில் மிதமிஞ்சிய பற்றுக்கள், பிறரை வதைக்கும் சுய நலன்கள் இவைகளை நீக்கி விழிப்பு நிலைகொண்டு மிகப் பெரிய எல்லையற்ற வட்டத்திற்குள் உணர்வை வளர்த்துக்கொள் இளைஞனே! உன் வாழ்க்கை ஓர் பந்தயப் பொருள் - அதை அடைய முயன்றிடு இளைஞனே! உன் வாக்குறுதியை நிறைவேற்று இளைஞனே! உன் வாய்ப்பை உபயோகி இளைஞனே! உன் கடமை அதைச் செய் இளைஞனே! உன் போராட்டத்தை ஏற்றுக்கொள் இளைஞனே! உன் சவாலை சந்தி இளைஞனே! உன் வீரச்செயலை துணிந்து செய் இளைஞனே! உன் கனவை நனவாக்கு. ●

## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் - கொள்ளுங்கள். **- மன்னா நிர்வாகம்.**

## பெருஜியா உரோமையில்....

### 07ஆம் பக்கத் தொடர்ச்சி

இம்மாதம் 11ஆம் திகதி மாலையில் உரோமையில் நடைபெற்ற இளையோரின் செப வழிபாட்டில் கலந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 12ஆம் திகதி நண்பகலில், வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில், மூவேளை செப உரையாற்றினார். இத்தாலியில் அருங்கொடை இயக்கத்தில் 2 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் 1,900 குழுக்களாகச் செயற்பட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ●

## தயவுசெய்து அவதானியுங்கள்


நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம்:** கறுப்பு வெள்ளை 4,500/=, கலர்7,500/=

# நீங்காத நினைவுகள்

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 03 1968 உதிர்வு 07 09 2007



**திரு. இ. யோகராஜா**
**(கோவில்குளம் வவுனியா)**

அன்பே யோகா! பூவுலகு விடை கொடுக்க பொன்னுலகம் சென்று 11 ஆண்டுகளாச்சு. நாம் தனி மரமாகத் தவிக்கின்றோம். இவ்வுலகில் வந்தவர் எல்லாம் போவது உண்மை. விதி என ஒன்று உண்டு என இன்று உணர்ந்தோம். நெஞ்சில் சொல்ல முடியாத துயரமோ மோசம். நாம் இருக்கும் வரை வந்தனை செய்வோம். உங்களுக்காக எமது சோகத்தை சொல்லவும் வார்த்தையில்லை. உங்கள் அன்பும், பாசமும் தான் எம்மை வழிநடத்துகின்றது. உங்கள் ஆத்மா சாந்திபெற தினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** அன்பு அம்மா, ஐயா, மனைவி, மகள், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், அன்ரிமார், மாமா, மாமி.

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 09 1982 உதிர்வு 31 08 1993



**சுதர்ஷினி யேசுதாசன்**

*ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது.*

ஆண்டுகள் இருபத்திரண்டு ஆனாலும், உன் இழப்பை எப்படி நாம் மறப்போம்? எப்படி ஆறுதல் அடைவோம்? காலையில் எம் தோட்டத்தில் பூக்கும் மலர்களைக் காணும்போது அதில் உள்ள அழகிய மலராக நீ மணம் தந்து எம் மனதைத் தொட்டுச் செல்கின்றாய். நடை பாதையில் என்றும் நீ எம் வழித்துணையாய் நடந்துவருகின்றாய். மாலையில் வீசும் இளம் காற்றில் நீ கலந்து எம்மை இதமாக வருடிச்செல்கின்றாய்! இனிய நல்மொழி பேசி, இதயத்தால் அனைவரையும் இணைத்து, ஆற்றல்கள் பல பெற்ற நீ, அன்று எம்மையெல்லாம் விட்டு, சொல்லாமல் கொள்ளாமல் பட்டென்று பறந்து போனாயே! அழகிய உன்முகம் காண ஏங்குகின்றோம். மீண்டும் நீ எம்மிடம் வாராயோ?

*உன் பிரிவினை நினைந்து உருகும் : அம்மா, அப்பா, தம்பி, உறவுகள்.*

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி / 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**சவிரி சந்தியோகுப்பிள்ளை இராஜதுரை** — மலர்வு 25-12-1921, உதிர்வு 02-09-2006

**திருமதி. திரேசம்மா இராஜதுரை** — மலர்வு 20-05-1933, உதிர்வு 10-09-2008

(பாலைக்குளி. அடம்பன்.)

பெற்றெடுத்த தெய்வங்களே!
பேணி வளர்த்த தீபங்களே!
ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் - உங்கள்
அன்பு உருவம் மறைவதில்லையே.
ஏது குறை வைத்தீர்கள் ஏங்குவதற்கு
எல்லாச் செல்வங்களும் எம்மிடத்தில்
சேர வைத்து - நாம்
நல்வழிகளால் நானிலத்தில் வாழ்வதற்கு
எல்லையில்லாச் சிறப்புக்களை ஈர்த்தவர்கள் நீங்கள் தானே!

***என்றும் உங்கள் நினைவில் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.***

## மன்னார் மரியாயின் சேனை.....

03ஆம் பக்கத் தொடர்ச்சி

பிரான்ஸ் நாட்டில் பிறந்தவர் இவர் சிறுபராயந் தொட்டு 19 வயது வரை தமது தந்தைக்கு விவசாயம் செய்ய உதவி வந்தார். கல்வி கற்கும் காலத்தில் கல்வியின் பின்தங்கியே காணப்பட்டார். ஒருவாறு தன் கல்வியை முடித்து அருட்தந்தையாக தன்பணி வாழ்வைத் தொடங்கினார். இவர் மரியன்னை மீது அன்பும், பற்றுறுதியும் கொண்டிருந்தார். இப்புனிதர் எமது சொத்து விண்ணகத்தில் உள்ளது. எனவே செபம், அன்பு இரண்டையும் கைக்கொண்டு ஒழுகி, கடவுளோடு ஐக்கியமாகி, அவரின் பிரசன்னத்தில் வாழவேண்டும். நாம் தூசி போன்றவர்கள். இதயம் சிறியது. நாம் செபிக்க நமது இதயம் பெரிதாக, தேனைப்போல் இனிப்புள்ளதாக மாறும் என கூறுவாராம். மேலும் பணிவாழ்வு என்பது துன்பமும், துயரமும் நிறைந்தது பணியாளராகிய உங்களையும் இது தொடர வாய்ப்புள்ளது. இப்புனிதர், "இறைவா பிளவுபடாத இதயத்தை தா" என வேண்டிக் கொள்வாராம். அதையே நீங்களும் வேண்டிக் கொள்ளுங்கள். நமது இதயத்தில் வாழும் இறைவனோடு, அன்னை மரியாவோடு உரையாடித் தெளிவு பெற வேண்டும். நாம் உலகில் கஸ்டங்களோடும், துன்பங்களோடும் வாழ்கின்றோம். எனவே மனம் உடைந்து போகக் கூடாது.

அடிதாங்கும் பட்டறைக் கல் போல் உறுதியுடன் இருக்க வேண்டும். சோதனைகள், விமர்சனங்கள் வரும். தளராத மனதுடன் பணி செய்யுங்கள். மரியாயின் சேனை மற்ற சபைகளை விட வேறுபாடானது. இதன் சட்ட திட்டங்கள் சிறப்பானது. செபமாலையின் ஒவ்வொரு மணியிலும் ஆசீர் உள்ளது. ஒவ்வொரு மணியும் சொல்லச் சொல்ல இறையாசீர் பெருகும். அன்னை மரியாளின் துணைவேண்ட சாத்தான் ஓடி விடும். எனவே தொடர்ந்து செபியுங்கள். இறையாசீர் உங்களோடு தங்கும் ஆன்ம உரையை நிறைவு செய்தார். மேலும் வழமையான கூட்ட நிகழ்வுகளோடு கூட்டம் இனிதே நிறைவடைந்தது. ●

## சல்வரோறியன்....

16ஆம் பக்கத் தொடர்ச்சி

இவர், தனது முதல் வாக்குத்தத்தத்தின் பின் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்து, இலுப்பைக்குளம் வ/அடைக்கல அன்னை வித்தியாலயத்தில் ஆசிரியையாக பணியாற்றுவதுடன், சல்வற்ரோறியன் சிறுவர் இல்லத்திலும் தனது சேவையை ஆற்றி வருகின்றார்.

மன்னார் மறைமாவட்டம் சார்பில் வாழ்த்துக்களையும், செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது. ●

## மடு திருத்தலத்தில்......

01ஆம் பக்கத் தொடர்ச்சி

மடு திருத்தல நிர்வாகத்தின், கீழ் திருச்சிலுவைக் கன்னியர் சபை அருட்சகோதரிகளால் மடு திருத்தல வைத்தியசாலை இயக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. ஏற்கனவே உள்ள கட்டிடத் தொகுதியில் இடப் பற்றாக்குறை காணப்படுவதால் இப் புதிய கட்டிடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத் தொகுதியில் நோயாளர் தங்கியிருந்து சிகிச்சை பெறும் பிரிவு, வைத்தியர்கள் நோயாளரைப் பார்வையிடும் பகுதி, மருந்தகம், சிறப்புச் சிகிச்சைப் பிரிவு, வைத்தியர்களுக்கான தங்குமிடம் என்பன புதிய வசதிகளோடு அமைக்கப்பட்டுள்ளன. ●

## புனித வின்சென்ட் டி போல்....

04ஆம் பக்கத் தொடர்ச்சி

அங்கு மாணவ, மாணவியருக்கு மாலைக்கல்வி நடத்தினார். சேரிகளிலும், ஒதுக்குப்புறங்களிலும் இருந்த மக்களைச் சென்று சந்தித்தார். இயன்ற அளவு உதவிகள் செய்தார். அங்கிருந்த கேந்தி பிரபுவின் அழைப்பின் பேரில் அங்கிருந்த குழந்தைகளுக்கு கற்பித்தார். "பெரும் போரில் வெற்றி பெற்றதால் ஏற்படும் மகிழ்ச்சியை விட சிலுவையைக் கழுத்தில் அணிந்து, ஏழை மக்களுக்கு சேவை செய்வது மிகுந்த மகிழ்ச்சியை எனக்குத் தருகின்றது" என்றார்.

இறை அன்பின் வழிகாட்டுதலுடன் அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும் பணியாற்ற "அறப்பணி மகளிர் சபை" என்ற பொதுநிலையினரின் மகளிர் சபையை ஆரம்பித்தார். உயர்குடிப் பெண்கள் தங்கள் குலப் பெருமைகளை விட்டு, ஏழைகளுக்காக உழைக்க "அறப்பணிகளின் சகோதரிகள்" என்ற அமைப்பை 1633இல் ஆரம்பித்தார்.

ஏழைகளுக்காக முழு நேரமும் உழைக்க, "ஏழைகளின் பணியாளர்கள் சபை" என்ற அருட்சகோதரிகளின் சபையை ஏற்படுத்தினார். முதியோர்களையும், குழந்தைகளையும் பேணிய வின்சென்ட் டி போல் தமது பணியை ஜெனோவா, போலந்து, மடகாஸ்கா, ஆபிரிக்க நாடுகளுக்கும் விரிவுபடுத்தினார். இறைவன் தன்னை அழைத்ததும் 1660 செப்ரம்பர் 27 அன்று அவருடன் சென்றார். இன்று வரை இவருடைய உடல் அழியாமல் பாரிசில் உள்ள புனித லாசர் குருக்கள் இல்லத்தில் இருக்கின்றது. இவரை திருத்தந்தை 13ஆம் ஆசீர்வாதப்பர் 1729 ஓகஸ்ட் 13இல் அருளாளராகவும், 1737 யூன் 16 அன்று புனிதராகவும் உயர்த்தினார்.

**உயர்ந்த நோக்கத்துடன், சமூகத்தின் வளர்ச்சிக்காக சிந்திக்கிறவர்கள், செயற்படுகிறவர்கள் இறைவனின் ஆசீர்பெறுகிறார்கள்.●**

## 125 வருடங்களை கடந்து.......

03ஆம் பக்கத் தொடர்ச்சி

இதன் எல்லைகளாக வடக்கே புல்மோட்டையும், தெற்கே வெருகலும், மேற்கே அக்போபுர பிரதேசமும், கிழக்கே வங்காள விரிகுடாவுடன் கூடிய இந்து சமுத்திரமும் காணப்படுகின்றன. இன்றைய திருகோணமலை மறைமாவட்டத்தில் மொத்தமாக இருபத்திமூன்று (23) மறைமாவட்ட (சுதேச) குருக்களும், பல்வேறுபட்ட துறவறசபைக் குருக்களும், இருபால் துறவியரும் பணியாற்றுகின்றார்கள்.

இன்றைய திருகோணமலை மறைமாவட்டத்தில் பதினைந்து பங்குகள் செயற்படுகின்றன. அத்துடன் ஏனைய ஆன்மீக, சமய, சமூகநலப் பணிகளும், கல்விநல மேம்பாட்டு பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

திருகோணமலை மறைமாவட்டத்தில் கத்தோலிக்கர் மொத்த சனத்தொகையில் 6.6% உள்ளனர். தமிழ், சிங்கள, முஸ்லீம் எனும் மூவின மக்களையும் ஓரளவிற்கு சமமாக கொண்டுள்ள திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆன்மீகப்பணி, சமயப்பணி, சமூகப்பணி சவால்கள் நிறைந்ததே. போரின் வடுக்களையும், இழப்புக்களையும், இடப்பெயர்வுகளையும் அதிகம் சந்தித்த திருமலை மறைமாவட்டமானது தனது 25வது யூபிலி பயணத்தினூடாக புதிய வீறுநடைபோட வாழ்த்துகின்றோம்.●

## கிறிஸ்தவ நாகரிகம்....

06ஆம் பக்கத் தொடர்ச்சி

எனினும் நாகரிகத்தின் வளர்ச்சி என்பது அறிவியலிலும், விஞ்ஞானத்திலும் மட்டும் தங்கியிருப்பதில்லை. ஒரு சமூகம் உலகுடனும், சகமனிதருடனும் தாம் வாழ்வதற்காக அமைத்துக்கொள்ளும் நம்பிக்கை, விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், ஒழுக்கம், கலை போன்றவற்றின் பகிர்வுமுறையிலும். பல நகரங்கள், பல சமூக வகுப்பினர், அரசாங்கம் போன்றவற்றின் வளர்ச்சியிலுமே தங்கியுள்ளது. எமது முன்னோர்கள் தமது வாழ்வியல் மூலமாக தமது சமூகத்தின் கலை, கலாசாரமற்றும் பண்பாட்டின் வளர்ச்சியிலே நிறைவு கண்டார்கள். தமது வாழ்வின் மூலமாக தமது நிலத்துக்குரிய பண்பாட்டினை வெளிப்படுத்தினார்கள்.

ஆனால் இன்று நவீன நாகரிகத்தின் பெயரில் தமது வாழ்வியலையே கேள்விக்குட்படுத்தும் சமூகத்தையே காண முடிகின்றது. இவ்வாறான நிலையில் இன்று நாகரிகம் வளர்ச்சிப்பாதையில் செல்கின்றதா...?●

## அன்பிற்கும் உண்டோ....

11ஆம் பக்கத் தொடர்ச்சி

தாயின் அன்பு, அமுத வார்த்தைகள் அனைத்தும் அவனுக்கு கசந்தன. அன்னையின் பிரிவிலும், அழகியின் பிரிவு அவனுக்கு கொடியதாக தெரிந்தது. தாயை மறந்தான். காதலியே தஞ்சம் எனக் கிடந்தான். ஒருநாள் தன் கண்களால் மயக்கி, காதலுரைகளால் ஜோனைப் பித்தனாக்கிய அவள், "தாயின் இதயத்தை எனக்கு காணிக்கையாக தாருங்கள்". என்றாள். அதிர்ச்சியடைந்தான் ஜோன், அவள் வேண்டுதலுக்கு செவிசாய்க்க மறுத்தான். ஆனால் அவளது அழகுக்கு முன் பத்து மாதம் சுமந்து பெற்ற தாயின் பாசம் எம்மாத்திரம்? பாலூட்டி வளர்த்த பாசம் பகற்கனவான காதலியின் முன் தோல்வி கண்டது.

வீட்டிற்குச் சென்ற ஜோன் பத்துமாதம் சுமந்து பெற்ற தாயைக் கொன்று, அவளது இதயத்தைக் கொண்டு வந்தான். அப்படி அவன் வரும் போது கால் இடறி விழப்போனான். தட்டில் இருந்த தாயின் இதயம் சொன்னது "பார்த்துப் போ, என் மகனே பத்திரமாய்" என்று. அப்படியே உறைந்துபோய் நின்றான் ஜோன். தாயின் பாசத்தை அப்போதுதான் உணர்ந்தான். தான் செய்த தவறுக்காக மனம் நொந்து அழுதான். இருந்தும் என்ன பிரயோசனம்? அவனைத் தேற்றுவதற்கு தாய் தான் இல்லையே....●

## நல் நிலைக்கான பயணம்.....

03ஆம் பக்கத் தொடர்

இவர்களுக்கு, குடும்ப புனர்வாழ்வு நிலைய ஊழியர்களினால் இப் பயணத்தின் நோக்கங்கள் மற்றும் இன்றைய காலத்தில் உளவளத்துணையின் தேவை பற்றிய விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப் பயணமானது 3வது நாளைக் கடந்து பல இடங்களில் விழிப்புணர்வுகள் மற்றும் துண்டுப்பிரசுரங்களை வழங்கியும், தொடர்ந்து நடைபெற்று நல் நிலைக்கான பயணத்தின் முதற்கட்ட நிகழ்வின் இறுதி நிகழ்வானது 26.08.2018 அன்று காலை 11 மணியளவில் வவுனியா புதிய பேருந்து நிலையத்துடன் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.●

## தியாக்கோன் மோகன்ராஜ் 2019இல் குருவாக அருட்பொழிவு செய்யப்படுவார்.



தியாக்கோன் மோகன்ராஜ் எட்மன் 1976இல் யாழ்ப்பாணம் நாவாந்துறையில் பிறந்து, புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்றுத்தேர்ந்தார். இளமைக்காலத்தில் இருந்தே குருவாக வந்து பணிசெய்ய வேண்டும் என்ற உந்துதலை தனது மாமா, செபமாலைதாசர் சபையைச் சேர்ந்த அருட்பணி. ஸ்ரீபன் அடிகளாரின் ஊடாகப் பெற்றுக்கொண்டார். நாட்டின் அரசியல் சூழல் நிலை காரணமாக 1996இல் நோர்வே சென்று பின் 2000ஆம் ஆண்டில் இங்கிலாந்தை வந்தடைந்தார். அங்கு தனது படிப்பைத் தொடர்ந்ததோடு, வேலை செய்து தனது வாழ்வாதாரத்தைத் தேடிக்கொண்டார். இளமைக்காலத்தில் தான் கொண்டிருந்த இலக்கான குருத்துவ வாழ்வை மேற்கொள்ள, 2011இல் பேர்மிங்காம் என்ற இடத்தில் அமைந்திருக்கின்ற புனித மரியாள் குருத்துவக் கல்லூரியில் இணைந்து, குருத்துவப் படிப்பை நிறைவு செய்து இவ்வாண்டு (2018) ஆனித்திங்கள் 23ஆம் நாள் தியாக்கோனாக அருட்பொழிவு செய்யப்பட்டார். 2019 ஆடித்திங்களில் போட்ஸ்மவுத் மறைமாவட்டத்தில் குருவாக அருட்பொழிவு பெற இருக்கின்றார். அவரின் குருத்துவ வாழ்வு சிறக்க வாழ்த்துகின்றோம்.

## சல்வரோறியன் அருட்சகோதரியாக மேரி ஒஸ்கா லெம்பேட் நித்திய அர்ப்பணம்



வங்காலை பங்கைச் சார்ந்த பிரான்சிஸ் மேரி ஒஸ்கா லெம்பேட் அவர்கள் 15.08.2018 அன்று கண்டி, புனித அந்தோனியார் பேராலயத்தில், கண்டி மறைமாவட்ட ஆயர், பேரருட் கலாநிதி ஜோசப் வியானி பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் கண்டி கந்தானை எனும் இடத்தைச் சேர்ந்த அருட்சகோதரி அஞ்சலிக்கா ஜோசப் என்பவருடன் இணைந்து சல்வரோறியன் சபையின் அருட்சகோதரியாக நித்திய அர்ப்பணம் செய்யப்பட்டார். நூற்றுக்கணக்கான இறைமக்கள் முன்னிலையிலும் சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி டல்சி பெர்னாண்டோ முன்னிலையிலும் இடம்பெற்ற அர்ப்பண திருப்பலியில் பல குருக்கள், அருட்சகோதரிகள் கலந்து சிறப்பித்தனர் பல பத்துக்கு மேற்பட்ட அருட்சகோதரிகளை, பல்வேறு துறவற சபைகள் ஊடாக திருச்சபைக்கு அர்ப்பணித்த வங்காலைப் பங்கின், சல்வரோறியன் சபையின் ஏழாவது அருட்சகோதரியான இவர், பிரான்சிஸ் லெம்பேட், இசபெல்லா டயஸ் தம்பதிகளின் மகளாவார். தனது இடைநிலை, உயர்நிலை கல்வியை மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்தில் நிறைவு செய்தார்.



# இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!

### திரு. திருமதி. பேதுரு செலஸ்ரின் லோகு, றோசா சின்னமலர் டயஸ்.



**04.09.1968 - 04.09.2018**

**(சென் யூட்வீதி, பேசாலை)**

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணம் தந்து,
ஆண்டவர் அருளை அளவின்றிப் பெற்று,
இரு புதல்வியரை ஈன்று, இன்புற்று இறை ஆசீரோடு
புதல்வியரை புத்தி ஜீவிகளாய் உயர்த்தி,
மணவாழ்வு மெய்ப்பட, இனிய ஐம்பது ஆண்டு கண்டீர்!
இணையற்ற இல் வாழ்விலே இருகரம் பற்றி,
இன்பம் சூழ்ந்திடவும், சூழ்ந்தவர் இன்புற்றிருக்கவும்
இறைவனைத் தேடி - இருவரும் இணைந்தே வாழ
இனிதே வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:** பிள்ளைகள் - சோபனா, சுவர்ணா, மருமக்கள் - றொபட், ஜெனாட், பேரப்பிள்ளைகள் - கெஷாரின், ஷெனாறின், சுவேதா, கெனோசியன்.

## திரு. திருமதி. சேவியர் பொன்ராஜா பிறிட்ஜெட் பிஜீடா



**திருமணத்தில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது இது திருச்சபைக்கும். கிறீஸ்துவுக்கும் பொருந்துவதாகக் கொள்கின்றேன். (எபே. 5:32)**

இணைந்து வாழ்ந்திடுக!
இன்னும் பல நூற்றாண்டு
நல்லறம் புரிந்திட, இல்லறம் புகுந்து
நானிலம் போற்றிட, நலம் பல கண்டு
வள்ளுவன் சொன்ன வாழ்நெறி வழுவாது,
வாழ்ந்த காலங்கள் வனப்புற அமைந்து
போற்றுவதற்குரிய பெருமை மிகு வாழ்வில்
பொன்விழாக் காணும் புகழுறு தம்பதியர்.
இறையாசீர் பெற்ற இல்லற வாழ்வில்,
இணைந்து கழிந்திட்ட ஆண்டுகள் ஐம்பது.
உலகில் வானும், நிலவும் வலம்வரும் நாள்வரை
உயர்வுறு நலங்கள் யாவையும் பெற்று,
இன்பமுடன் இன்னும் பல்லாண்டுகள்
ஈடிணையற்று வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்க நலமுடன்! வாழ்க வளமுடன்!.

**29.08.1968 - 29.08.2018**

**(புத்திரர் கண்டான், முருங்கன்)**

**வாழ்த்துவோர் :**
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள், உற்றார் உறவினர், நண்பர்கள்.

### திரு. திருமதி. அந்தோனி யேசுதாசன் செபமாலை மேரி திரேசா



**26.08.1968 - 26.08.2018**

**(சிறுக்கண்டல், முருங்கன்)**

மகிழ்கின்றோம் நாம் மனம் நிறை
உங்கள் பாசம் கண்டு! வாழையடி வாழையாய் தழைக்கின்ற
எம் வழித் தோன்றல்கள்...
அன்பென்னும் உம் விருட்சத்தில் இளைப்பாறிட
மண நாட்கள் பல கண்டு மண்ணில் சிறப்புற்று வாழ
இறையாசீர் வேண்டி இன்புற்றே வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் :**
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

### திரு. திருமதி. அந்தோனி லெம்பேட் அன்னம்மா பறுனாந்து



**07.09.1968 - 07.09.2018**

**(வங்காலை, மன்னார்)**

செம்புலப் பெயல் நீர் போல் அன்புடை நெஞ்சம் தாம் கலந்தீர், ஐம்புலன்கள் ஒன்றாகி பண்புடை மஞ்சமதில் வாசனை மலராக திகழ்ந்தீர், எம்புலம் உம் பெயர் புகழ்ந்திட கொஞ்சமும் குறையற்ற பெருமை வாழ்வில் திகழ்ந்தீர். ஐம்பது ஆண்டுகளாய் இதுவன்றோ அகவாழ்வு என நெஞ்சார அகிலம் வாழ்த்திடவே மகிழ்ந்தீர். பிள்ளைக்கனியமுது சுவைத்தீர், அள்ள, அள்ளக் குறையாத ஆற்றல்களை எம்மில் புதைத்தீர். துள்ளும் இளமையுடன் தொல்லுலகில் நீடு வாழ ஆசிக்கின்றோம். வள்ளலாம் இறைவனிடம் வரம் வேண்டி உம் பாத மலர் பூசிக்கின்றோம்.

**வாழ்த்துவோர்:** மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## திருமண வாழ்த்து



### திரு. திருமதி. அருள்பிரகாசம் அனிற்ரா

**(ஆயர் இல்லம், பட்டித்தோட்டம்)**

**20.08.2018**

**“நான் ஒருபோதும் அவர்களை கைவிடவும் மாட்டேன், அவர்களை விட்டுப்பிரியவும் மாட்டேன்.” (எபி. 13:5)**

அன்பிற்கும், பண்பிற்கும்
இலக்கணம் தந்த நேசத் தம்பதியினரே!
மணவாழ்வு மெய்ப்பட இனிய நற் திருமண அருட்சாதனம்
கண்டீர். உயிரானீர். உறவானீர். நட்பானீர். நலமானீர்.
நீடூழி வாழ்ந்து, இறையாசீரால் நிறைந்து மகிழ
வாழ்த்துகின்றோம்!

**வாழ்த்துவோர் :** உறவுகள்.